
# திருக்கோயில்

பிப்ரவரி 1977 ரூ. 1





திருமயிலைத் திருவள்ளுவர் கோயில் கும்பாபிஷேக விழாவில், வணிகவரி மற்றும் அறநிலையத் துறை செயலர் திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, I. A. S.,. அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., முன்னாள் நீதிபதி திரு. என். கிருஷ்ணசுவாமி ரெட்டியார், B.A.B.L., சென்னைத்துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B.A.B.L., ஆணையரின் இணைநேர்முக உதவியர் திரு. பெ. புலியூருடையான், உதவிஆணையர்கள் திரு. சி. சுப்பிரமணியபிள்ளை, திரு. கே. நடராஜபிள்ளை முதலிய பெருமக்கள் பலரும் கலந்து கொள்ளுதல் (21-2-77).



திருவள்ளுவர் கோயில் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அறநிலையத்துறை அலுவலர்களும மற்றும் பொதுமக்களுட் சிலரும்.

முகப்பு :

சென்னைத் திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கற்பகாம்பாள் உற்சவத் திருவுருவம்.

# திருக்கோயில்

மாலை : 18 நள ஆண்டு — மாசித் திங்கள் பிப்ரவரி—1977 மணி : 5

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-/ வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவருமல் தெரிவித்து உதவிஞல்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருவள்ளுவரும் காந்தியடிகளும்
—திரு ந. ரா. முருகவேள் எம்.ஏ.,எம்.ஓ.எல்.

''தருபவன் ஒருவன் வேண்டும்''
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

திருமயிலைப் புராணம்
—ஆசிரியர்

ஆலயத் தத்துவ விளக்கம்
—திரு குமாரசாமி குருக்கள், அச்சுவேலி

நிறைபெரும் புலமையர், மறைமலை அடிகளார்
—ஆசிரியர்

பக்தி இலக்கியத்தில் அணிகள்
—திரு செ. வைத்தியலிங்கன், எம்.ஏ.,எம்.லிட்.,

கவிதையும் காதலும்
—திரு. திருமலை நல்லான் இராமகிருஷ்ண அய்யங்கார்

அம்பிகையின் அழகுவெள்ளம்
—ஆசிரியர்

சைவசித்தாந்த சாத்திரங்கள்
—திரு க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி.

ஸ்ரீ வைஷ்ணவ மாநாட்டுத் தலைமையுரை
—திரு. கொங்கலேட்டி ஏ.வி. கன்னைய நாயடு

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

# திருவள்ளுவரும் காந்தியடிகளும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

158621

**முன்னுரை :**

திருவள்ளுவர் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவர். காந்தியடிகள் சென்ற நூற்றாண்டில் தோன்றியவர் (2—10—1869). ஆயினும் திருவள்ளுவருக்கும் காந்தியடிகளுக்கும் இடையே 'சான்றோர் சான்றோர் பாலர் ஆவர்' என்னும் முறையில், பலதிற நெருங்கிய ஒற்றுமை ஒப்புமை இயைபுகள் உள்ளன.

**(1) உலகப் பெருஞ்சான்றோர் :**

திருவள்ளுவர் உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவர். காந்தியடிகள் உலகப் பெரும் சான்றோர்களுள் ஒருவர். கடந்த காலத்தில் இருந்த எல்லாப் பெரியோர்களையும் விடக் காந்தியடிகள் மிகப் பெரியவராக விளங்கினர். அவர் ஆல்பிரெட் வாலெஸ், வாஷிங்டன், கோஷியஸ்கோ, லேஃபயட் போன்ற தேசியத் தலைவராகவும்; கிளார்க்சன், வில்ஃபர் ஃபோர்ஸ், காரிசன், ஆபிரகாம் லிங்கன் போன்ற விடுதலை இயக்க வீரராகவும்; செயின்ட் பிரான்ஸிஸ், டேவிட்தோரே, லியோ டால்ஸ்டாய் போன்ற குணப்பெருஞ் சான்றோராகவும்; லாவோட்சே, புத்தர், சுவராஸ்டர், இயேசு போன்ற சமய ஞானச் செல்வராகவும் ஒப்புயர்வற்றுத் திகழ்ந்தார். (John H. Holmes). செயலில் தயோஜெனிஸ், பணிவில் ஃபிரான்ஸிஸ், அறிவில் சாக்ரடீஸ் எனப் புகழும்படியெல்லாம் காந்தியடிகள் பெருஞ் சிறப்புற்று விளங்கினர். (Francis Neilson)

**(2) சமயப் பொதுநோக்கு :**

திருவள்ளுவர் ஒரு பெரிய ஞானி ; காந்தியடிகள் ஒப்புயர்வற்ற ஓர் உத்தமர். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவானவர்; காந்தியடிகள் எல்லாச் சமயங்களையும் பொது நோக்குடன் போற்றி ஒழுகியவர். 'சநாதன இந்து' என்றே தம்மைச் சுட்டிக் கொண்டாலும், கிறித்தவம் இஸ்லாமியம் யூதம் பார்சியம் முதலிய சமயங்களையும் அவர் பெரிதும் மதித்து விரும்பிப் போற்றினர். அவரது பிரார்த்தனைக் கூட்டங்களில் கீதையும் கொரானும் விவிலியமும் பிறவும் மிக்க பக்தியுணர்வுடன் ஓதப் பெற்றன. இராமனும் இரஹிமும் அவருக்கு ஒருவரே. கிறித்துவையும் கிருஷ்ணனையும் அவர் வேறு பிரித்துக் கருதவில்லை. சமய சமரச நோக்கமும்ஒழுக்கமும், திருவள்ளுவரைப் போலவே காந்தியடிகள் மாட்டும் இருந்தன.

**(3) அழியாப்புகழ் :**

திருவள்ளுவர் வாழ்ந்து இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், அவர்தம் சீரும் சிறப்பும் மேலும் மேலும் பெருகி வருகின்றன. எத்தனையோ பல நூற்றாண்டுகளாக, எத்தனையோ பல கோடி மக்களுக்கு உணர்ச்சி யூட்டும் வழிகாட்டியாக அவர் விளங்கி வருகின்றார். அது போலவே காந்தி யடிகளும் ''அடிமைத் துயிலில் ஆழ்ந்து உறங்கிக் கிடந்த 30 கோடி இந்திய மக்களைத் தட்டி எழுப்பினர். இரண்டாயிரம் ஆண்டுகளாக இல்லாத முறையில் ஆற்றல் மிக்க ஒரு மாபெரும் இயக்கத்தைத் தோற்றுவித்தருளினர்.''

திருவள்ளுவரின் புகழைப் போலவே, காந்தியடிகளின் புகழும் இன்னும் எத்தனையோ பல் லூழி காலம் உலகிற் பரவிப் பெருகி நின்று நிலவி வரும்.

**(4) செயற்கரிய செய்வார் :**

திருவள்ளுவர் திருக்குறள் என்னும் செயற்கரிய நூலைச் செய்தார். அவ்வாறே காந்தியடிகளும் தமது வாழ்க்கையில் செயற்கரிய பல பெரும் செயல்களைச் செய்து நிறைவேற்றினர். ''செயற்கரிய செய்வார் பெரியர்'' 'பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின் அருமை உடைய செயல்', 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பனபோல வரும் திருவள்ளுவரின் திருக்குறள்களுக்குக் காந்தியடிகள் மிகச் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றார். 'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வாயெல்லாம் செயல்' எனத் திருவள்ளுவர் செப்பியபடி அறவினைகளை ஒல்லும் வகையானெல்லாம், செல்லும் இடத்தெல்லாம் ஓவாது செய்து வாழ்ந்தவர் காந்தியடிகள். ''செயற்பாலது ஒரும் அறனே; உயற்பாலது ஒரும் பழி'' என்று திருவள்ளுவர் விதித்த நெறிமுறை கடவாது காந்தியடிகள் தம் வாழ்க்கையை நடத்தினர். 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு' எனப் பணித்த திருவள்ளுவரின் கட்டளையை முழுவதாக நிறைவேற்ற முயன்றவர் காந்தியடிகளே யாவர். 'துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை' எனத் திருவள்ளுவர் கூறிய அறிவுரையினைப் பெரிதும் போற்றி,

"Gandhi raised up 300 millions of his fellow men, Shaken the British empire and inaugurated in human politics the most powerful movement that the world has seen for nearly 200 years"

—Romain Roland.

'' இதம்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதம்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் ருலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே''

எனப் பாரதியார் பாடினுற்போல, அருட்டிரு காந்தியடிகளும் இன்னல்கள் எத்தனை வரினும் மனம் தளராது இந்திய நாட்டின் விடுதலைக் காகப் பெரிதும் முயன்ருர்.

## (5) வாழ்க்கைத் துணை நலம் :

திருவள்ளுவர், தமது திருக்குறளில், 'வாழ்க்கைத் துணை நலம்' என்னும் பகுதியில் வகுத்தருளிய இலக்கணத்திற்கு ஏற்ப வாசுகி அம்மை என்னும் மாட்சிமை மிக்க மனைவியைப் பெற்றிருந்தார் என்பது வரலாறு. அவ்வாறே காந்தியடிகளும் உயரிய உத்தம நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே நிறைந்து திகழ்ந்திருந்த அன்னை கஸ்தூரிபாயை அரும்பெறல்வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெற்ருர். அவரிடம் இருந்தே அகிம்சை பற்றிய அரிய பாடத்தினைத் தாம்கற்றுக்கொண்டதாகக் காந்தியடிகள் குறிப் பிட்டுள்ளார். வாசுகி அம்மையும், அன்னை கஸ் தூரிபாவும் தம் கொழுநரைத் தெய்வம் எனத் தொழுதவர்கள் ; கொழுநரின் குறிப்பறிந்து சிறப்புற ஒழுகியவர்கள் ; கணவருக்குப் பணி விடைகள் செய்து களித்தவர்கள் ; கணவரின் வாழ்வியற் கடமைகளில் தாமும்பங்குகொண்டு, பக்க பலமாகக் கைகொடுத்து இணைபிரியாது துணை நின்றவர்கள். 'பெற்ருற் பெறிற் பெறு வர், பெண்டிர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு' என்னும் திருக்குறளுக்கு இலக்கி யமானவர்கள். இவ்விருவரையும் முறையே தமக்குரிய மனைவியராகப் பெற்றமை, திருவள் ளுவர்க்கும் காந்தியடிகளுக்கும் மிக்க பெருஞ் சிறப்பை விளைவித்தது எனலாம்.

## (6) உழவும் நெசவும் :

திருவள்ளுவர் உழவுத் தொழிலை மிகவும் உயர்ந்த தொன்ருகப் புகழ்ந்துரைத்தார். 'செய்யும் தொழிலனைத்தும் சீர் தூக்கிப் பார்க் குங்கால் நெய்யும் தொழிற்கு நிகரில்லை' எனத் தெளிந்து நெசவுத்தொழிலைக் கைக்கொண்டார். அதுபோலவே காந்தியடிகளும், தம்மை ஒரு நெசவாளர் என்றும், உழவர் என்றும் (Weaver and Peasant ) குறிப்பிட்டுக் கொள்ளும் வழக்கம் உடையவராக இருந்தார். 'இராட்டை (சர்க்கா) ஒழுக்கத்தைக் காக்கின்றது ; உணவு அளிக்கிறது; சோம்பலைப் போக்குகின்றது. மனத்தை ஒருமைப்படுத்துகின்றது.' 'இராட் டையினின்று நூற்கும் ஒவ்வோர் இழையிலும் நான் கடவுளைக் காண்கின்றேன்' என்றெல்லாம் காந்தியடிகள் கூறுவர். 'உழைத்துப் பெறும் உணவு மிக எளிதாயினும், அதுவே மிக இனிய தும் உயர்ந்ததும் ஆகும்' என்பது திருவள்ளுவர் கருத்து. அதனைத் 'தெண்ணீர் அடுபுற்கை ஆயினும், தாள்தந்தது உண்ணலின் ஊங்கினிய தில்', 'தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை வாளாண்மை போலக்கெடும்' என்னும் திருக்குறள்கள் உணர்த்தும். இவ்வாறே காந்தி யடிகளும் உழைப்பின் உயர்வு(Dignity of Labour) எத்தகையது என்பதனை உலகுக்குப் பல்லாற் ருனும் உணர்த்தியருளினர். செருப்புத் தைத் தல், கழிப்பறை துப்புரவு செய்தல் முதலிய பணிகளையும், காந்தியடிகள் செய்தமை கருது தற்குரியது.

## (7) புரட்சியாளர் :

திருவள்ளுவர் ஒரு பெரிய புரட்சியாளரும், சீர்திருத்தச் செம்மலும் ஆவர். அவர்தம் கருத்துக்களிற் பல, புரட்சி மணம் கமழ்வன வாக உள்ளன. இன்பம் பொருள் அறன்என் றிருந்த முறையினை 'அறம் பொருள் இன்பம்' என்று மாற்றியமைத்துப் புரட்சி செய்தவர் திருவள்ளுவர். களவு செய்தல், கள் அருந்து தல், சூதாடுதல், புலாலுண்ணல், பிறன் மனை விழைதல்,வரைவின் மகளிர்ப்புணர்தல் முதலிய பல குற்றங்களைக் கடிந்து, உலகத்தைச் சீர் திருத்த முற்பட்டவர் திருவள்ளுவர். காந்தி யடிகளும் இந்திய நாட்டு அரசியலில் ஒரு பெரிய புரட்சியையும் மிகப் பல சீர்திருத்தங் களையும் நிகழ்த்தினர். கத்தியின்றி இரத்த மின்றிச் சத்தியத்தைத் துணைக்கொண்டு, காந்தி யடிகள் யுத்தம் நடத்தினர். சத்தியாக்கிரகம் என்னும் அறப் போர், நிகழ்வதற்கு அவரே முதன் முதலில் வழி வகுத்தார். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்குச் சீர்திருத்தத் திட்டங்களை வற்புறுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்தார். தமது ஆக்கப் பணியாகப் பொருளியலில் கதர் உடை இயக்கத்தையும், சமுதாய இயலில் தீண் டாமை ஒழிப்பையும், ஒழுக்க இயலில் மது விலக்கையும் அடிகளார் அரிதின் ஆய்ந்து வகுத் தார்.

## (8) இன்ன செய்யாமை :

நாம் எந்த உயிர்க்கும் எப்போதும் மனத் தினாலும், ஒரு சிறிய தீங்கும் செய்தல் கூடாது என்பது திருவள்ளுவரின் அருளுரை. 'எனைத் தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணு செய்யாமை தலை' என்பது குறள். உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை ஆகிய இரண்டையும், தவத் தின் இலக்கணமாகத் திருவள்ளுவர் வற்புறுத் தினர். இங்ஙனம் 'இன்ன செய்யாமை' எனத் திருவள்ளுவர் விளக்கியருளிய நெறி யினையே காந்தியடிகள் தம் வாழ்விற் கடைப் பிடித்து ஒழுகி, உலகிற்கு வழிகாட்டினர். 'அகிம்சை' என்பது ஓர் அரும் பெரும் கொள்கை நெறி. 'அகிம்சையை முதன் முதலாகக் கண்ட

---

"I learnt the lesson of non-violence from my wife, when I tried to bend her to my will and in the end she became my teacher in non-violence ".

—*Mahatma Gandhi.*

"I am a reformer through and through. But my zeal never leads me to the rejection of the essential things of Hinduism."

—*Mahatma Gandhi.*

இந்திய ஞானிகள் நியூட்டனை விட மிகச் சிறந்த மேதைகள்; வெல்லிங்க்டனை விட மிகப் பெரிய வீரர்கள்.'

'அகிம்சையும் சத்தியமும், சத்தியாக்கிரகி களின் இன்றியமையாத பண்புகளாகும். இயேசுபிரான் இவ்விரண்டையும் இயல்பாகப் பெற்ற தலைசிறந்த சத்தியாக்கிரகி ஆவார்' என்றெல்லாம் காந்தியடிகள், திருவள்ளுவர் அருளிய 'இன்னா செய்யாமை' என்னும் பண் பிற்கு அரிய விளக்கங்களைச் செய்தருளி உள் ளார்.

## (9) வாய்மை :

திருவள்ளுவர் வாய்மை அல்லது சத்தியம் என்பதனைப் பெரிதும் போற்றினர். சத்தியத் தைப்போல நல்லது, யான் ஆராய்ந்து கண்டன வற்றுள் வேறு பிறிது எதுவுமே இல்லை என்று, சத்தியத்தின் தன்னிகரற்ற மேன்மையினை, அவர் பறை சாற்றினர். 'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய் மையின் நல்லபிற' என்பது திருவள்ளுவர் உலகுக்கு விடுத்த ஞானச் செய்தி. இவ்வாறே, காந்தியடிகளும் சத்தியத்தையே தமது உயிர் நிலைக் கொள்கையாகத் தேர்ந்து கொண்டு உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகினர். 'நான் அவ்வப்போது என்னுடைய சமயம், சத்திய சமயம் என்று கூறிவந்திருக்கின்றேன். ஆயினும் சில காலமாகக் கடவுள் உண்மையாக இருக் கின்றார் என்பதற்குப் பதிலாக, உண்மையே கடவுளாக விளங்குகின்றது என்று சொல்லத் தலைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய சமயத் தினை இன்னதென்று மிகவும் தெளிவாகக் கூறி விளக்குதற் பொருட்டே இங்ஙனம் யான் சொல்ல முற்பட்டுள்ளேன். உண்மையைவிட உயர்ந்த சமயம் வேறெதுவும் இல்லை.' இங் ஙனம் உண்மையின் உயர்வை உள்ளபடி உணர்ந்து போற்றுதலில் திருவள்ளுவரும் காந்தியடிகளும் தலைசிறந்து திகழ்கின்றனர்.

எவன்தன் உள்ளச் சான்றுக்குப் பொய்யா மல் உள்ளபடி நல்லவனாக நடக்கின்றானோ, அவன் உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்றுச் சிறப்புற்று விளங்குவான் எனத் திருவள்ளுவர் செவ்விதின் ஆராய்ந்து தெளிவுற மொழிந்தார். 'உள்ளத்தாற் பொய் யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' என்பது திருக்குறள். திரு வள்ளுவர் அருளிச் செய்த உண்மையினைக் காந்தியடிகளின் விழுமிய வாழ்வே நமக்குக் கவின்மிக விளக்கி நன்கினிது மெய்ப்பித்துக் காட்டியது. 'புகழ்மிக்க சிறந்த பெரியோர்கள் பலர் வெண்கலத்திலும் சலவைக் கல்லிலும் நினைவுச் சிலைகள் பல அமைக்கப் பெற்றுள்ள னர். ஆனால் தெய்விக ஒளிபெற்ற இம்மனிதரோ தம்முடைய வாழ்நாளிலேயே உலகம் எங்கணும் உள்ள பல கோடிக்கணக்கான மனிதர்களின் உள்ளங்களில் நிலையான இடம் பெற்று நிகர் அற்று விளங்குகின்றார், என ஜவஹர்லால் நேரு அவர்கள் காந்தியடிகளைப் பற்றிக் குறிப்பிட்டு உள்ளவை, இங்கு நாம் நினைத்து மகிழத்தக்கது.

" I often describe my religion as religion of Truth. Of late, instead of saying God is Truth, I have been saying Truth is God, in order more fully to define my religion, Nothing so completely describes, my God as truth. Denial of God we have known. Denial of Truth we have not known. Hence the definition 'Truth is God' gives me the greatest satisfaction ".

—*Mahatma Gandhi.*

## (10) புலால் மறுத்தல் :

திருவள்ளுவர் காலத்தில் மிகப் பெரும் பாலான மக்கள் புலாலுணவை உட்கொள்ளும் பழக்கம் உடையவராக இருந்து கொண்டிருந் தனர். அதனைக் கடிந்து புலாலுண்ணுதல் புன்மை என அறிவுறுத்தி மறுத்தருளியவர் திருவள்ளுவர். இத்துறையிலும் காந்தியடிகள் திருவள்ளுவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யிருத்தல் கருதுதற்குரியது. காந்தியடிகள் இங்கிலாந்து சென்று கல்வி கற்கச் சென்ற காலம் முதல், பற்பல இடர்ப்பாடுகளுக்கிடை யேயும் மிகமுயன்று புலால் உண்ணுதலை அறவே வெறுத்து ஒழுகி வந்தமை, நம்மனோர் உணரற் பாலது. மனத் தூய்மை பெறுதற்கு விழையும் ஒருவன், புலால் உணவை அறவே விடுத்துத் தூய உணவையே மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது காந்தியடிகளின் உறுதியானகொள்கை. இதன் பயனாகவே அவர் உணவுத் துறையில் பல்வேறு சோதனைகளை இடைவிடாதுநிகழ்த்திக் கொண்டிருந்தார். நூல்களும் கட்டுரைகளும் வெளியிட்டு வந்தார். இங்கிலாந்தில் மாணவ ராக இருந்தபொழுதே சைவ உணவுச் சங்கத் தினருடன் தொடர்பு கொண்டு பெரிதும் தொண்டாற்றினர். ஒருவன் தன் பொறிபுலன் களை அடக்கி நல்வழிப்படுதல் வேண்டும் என் னும் விருப்பம் உடையவனாயின், நாவின்சுவைக் காக எதனையும் உண்ணுதல் கூடாது. உடல் நலத்திற்காக உணவேயன்றி, நாவின் சுவைக் காக உண்ணுதல் முறையன்று. உணவும் உணர்வும் தொடர்புடையன. உணவு நல்ல தாயின் உணர்வும் நல்லதாகஅமையும், உணவு தீயதாயின் உணர்வும் தீயதாக மாறும். நாவை அடக்குபவன் பொறி புலன்களை அடக்கு வான். புலன்களை அடக்கியவன் உலகத்தையே அடக்கி ஆள்வான்' என்றெல்லாம் காந்தியடி கள் கட்டுரைத்துள்ளார். இவ்வாற்றால் 'யாகா வாராயினும் நாகாக்க' என வரும் திருவள்ளு வரின் திருக்குறளுக்குக் காந்தியடிகள், மிகச் சிறந்த புதிய கருத்து விளக்கம் புரிந்துள்ளார் எனலாம்.

## (11) கற்றலும் நிற்றலும் :

திருவள்ளுவர் கல்வியின் சிறப்பைப் பெரி தும் வலியுறுத்தி விளக்கினர். கற்பதன் முதன்மை, கற்கும் முறைமை, கற்கத் தகும் நூல்கள், கற்றதன் பயன் என்பன பலவற்றை ஒரே குறளில் அவர் ஒருங்கே தொகுத்துணர்த் தினர். கற்பது முதன்மை, அதனைவிடக் கற்ற தற்குத் தக்கபடி நிற்பது முதன்மை, எனத் திருவள்ளுவர் கட்டுரைத்தார். 'கற்க கசடறக் கற்பவை; கற்றபின் நிற்க அதற்குத்தக' என்பது திருக்குறள். இதனைக் காந்தியடிகள்

இனிது பின்பற்றினர் எனலாம். பகவத் கீதை, துளசிதாசரின் இராமாயணம் முதலிய கற்கத் தகும் நூல்கள், பலவற்றையும் அவர் கற்ருர். கற்ற வழி சற்றும் பிறழாது நின்ருர். கற்ற நூல்களின் வழி நிற்றலின் வாயிலாகத் தமது வாழ்க்கையையே மாற்றியமைத்து வளமுடைய தாக்கிக் கொண்டார். டால்ஸ்டாய் எழுதிய 'கடவுளின் அரசு உன் உள்ளத்தில் உள்ளது' ( The kingdom of God is Within You ); டேவிட் தோரே எழுதிய 'கொடுங்கோன்மைக் குக் கீழ்ப்படியாமை' ( Civil Disobedience ), ஜான் ரஸ்கின் எழுதிய 'கடையருக்கும்விடுதலை' ( Unto This Last ) என்னும் நூல்கள், அவர் தம் வாழ்க்கையிற் பெருமாறுதல்களை உண்டாக் கின. சமயத் துறையில் டால்ஸ்டாயின் நூலும், அரசியல் துறையில் டேவிட் தோரேயின் நூலும், பொருளியல் துறையில் ஜான் ரஸ்கின் என்பவரது நூலும், காந்தியடிகளின்கொள்கை நெறிக் கருத்துக்களை உருவாக்கின. 'கற்க, கற்றபின் நிற்க அதற்குத் தக' என்னும் திரு வள்ளுவரின் கட்டளையைக் காந்தியடிகள் முழு தாக நிறைவேற்றியருளினர் எனலாம்.

### (12) கடவுளுணர்வு :

திருவள்ளுவர் கற்றதனலாய பயன், இறைவனின் நற்றாள் தொழலே என்றும்; தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தலே மனக் கவலைகளை மாற்றும் வழி என்றும் அறி வுறுத்தினர். காந்தியடிகள் இத்தகைய கடவுள் உணர்ச்சியில் மிகவும் தலைசிறந்திருந்தார். "எனது தேசபக்தி என்னுடைய சமயத்திற்குக் கீழ்ப்படிந்து செல்வதே ஆகும்" ( My patriotism in subservient to my Religion) என்று, அவர் அருளிச் செய்தார். கடவுளன் பில் அவர் மிகவும் தலைசிறந்து விளங்கினர். 'காற்றும் நீரும் இன்றிக் கூட நான் உயிர் வாழ்வேன்; ஆனல் கடவுளின் நினைவு இன்றி வாழ என்னல் ஒரு சிறிதும் இயலாது. நீங்கள் என் கண்களைப் பறித்து விடலாம். என் மூக் கினை அறுத்துவிடலாம். இவைகள் சற்றும் என்னைக் கொன்று விடமாட்டா. ஆனல் இறை வனிடத்து எனக்கு உள்ள நம்பிக்கையை மட்டும் நீங்கள் போக்குவீர்களாயின், அப்பொழுதே யான் இறந்தொழிந்து போவேன். இறைவனின் உண்மையில் எனக்குள்ள உறுதியானது இமய மலையைப் போல அசைக்க முடியாததாகவும், அதன் கொடுமுடிகளில் உள்ள பனிப் படலங் களைப் போலத் தூயதாய்த் தெளிவாகவும் உள்ளது. கடவுளுணர்ச்சி மட்டும் எனக்கு இல் லாமற் போயிருந்தால், யான் எப்போதோ கிறுக்குப் பிடித்துப் பித்தனகி விட்டிருப்பேன்' என்பது காந்தியடிகளின் கனிவுரை.

### (13) காட்சிக்கு எளிமை :

திருவள்ளுவர் காட்சிக்கு எளியவர், இனிய வர். அங்ஙனமே காந்தியடிகளும் ஆகுலம் மிக்க ஆடையணி வகைகளை அறவே வெறுத் தொழித்தார். மிகவும் எளிய ஏழை உழவன் ஒருவன், உடுக்கும் நான்கு முழத் துணியையே அவர் உடுக்கமுற்பட்டார். பக்கிங்காம் அரண் மனையில் ஐந்தாம் ஜார்ஜ் அரசரையும், அரசி யாரையும் காணச்சென்ற போதும், மிக எளிய உடையிலேயே அடிகளார் சென்ருர். காலில் மிதியடியும், இடுப்பில் நான்கு முழத்துண்டும், மேலே ஒரு வெள்ளைப் போர்வையும் தவிர, அவர் வேறு எதனையும் அணியவில்லை. 'ஈது என்ன?' என நண்பர் ஒருவர் வினவியதற்கு, 'எனக்கும் சேர்த்துத்தான் மிக ஏராளமான ஆடை அணி வகைகளை மாட்சிமை மிக்க அரச ரும் அரசியாரும் அணிந்து கொண்டு வந்துள் ளனரே' என அடிகளார் மறுமொழி நவின்ருர். 'மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப் பறுக்கல் உற்ருர்க்கு உடம்பும் மிகை' என்ற திருவள்ளுவரின் கருத்தையே, காந்தியடிகளும் கொண்டிருந்தார். எளிய உடையிலும் கூட, அவர் அரசர்களுக்கெல்லாம் அரசர்போல இணையற்று விளங்கினர். ( Kingliest of all Kings ).

வட்ட மேசை மாநாட்டிற்குச் சென்ற போது, அரண்மனை போன்ற எத்தனையோ விடுதிகள், அடிகளார்க்காகக் காத்திருந்த போதிலும், இலண்டன் மாநகரின் கிழக்கு மூலை யிலுள்ள கிங்ஸ்லி ஹால் என்னும் தொழிலாளர் களுக்குரிய எளிய விடுதியிலேயே, ஒரு சிறிய அறையில் மகிழ்ச்சியுடன் தங்கினர். அனைவருக் கும் காட்சிக்கு எளியவராக விளங்கிய, கடவுட் டன்மை உடையவராகவும் திகழ்ந்தார். எவரி டமும் எந்தக் காலத்திலும் அவர் கடுஞ்சொற் பேசியதே இல்லை. ( He never spoke a harsh word to any one ); 'இடுக்கண் வருங் கால் நகுக' என்று திருவள்ளுவர் அருளிச் செய்த படி, எத்தனை இடுக்கணும் தொல்லையும் நெருக் கடிகளும் நேர்ந்தாலும், அவர் தம் திருமுகத் தில் எப்போதும் புன்முறுவல் பூத்துப் பொலிந் திருந்தது. ( His tender face never lost its benign and bewitching smile' ).

### (14) நடை முறை யுணர்வு :

திருவள்ளுவர் வெறும் நீதி நூலாசிரியர் மட்டும் அல்லர். நீதி நூலாசிரியர்களிற் பலர் குறிக்கோளாளராக இருப்பரே அன்றி, நடை முறை அறிவுத் திறன் ஒரு சிறிதும் உடையவர் களாக இரார். ஆனல் திருவள்ளுவரோ அத்த கையவர் அல்லர். அவர் நடைமுறை அறிவுத் திறனில் நன்கினிது தேர்ந்த ஒரு பெருங் குறிக்கோளாளர். 'தென்புலத்தார் தெய்வம் விருந்து. . .' என்னும் குறளில், ஒருவன்தான் உளனய் நின்றே எல்லா அறங்களையும் செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்பிக் கொள்ளுதலையும் கூட, ஒரு சிறந்த அறமாக விதித்திருத்தல் ஒன்று கொண்டே, திருவள்ளுவரின் நடைமுறை அறிவுத் திறனை, நாம் செவ்விதின் தெளிந்து கொள்ளலாம். 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' என அவர் அருளிச் செய்த திருக்குற ளும், இவ்வுண்மைக்குச் சான்று பகரும். காந்தி யடிகளும் இத்தகைய ஒரு பெரும் நடைமுறை வல்ல குறிக்கோளாளரே யாவர் ( I am not

---

"Great and eminent men have monuments in bronze and marble set up for them but this man of divine fire managed in his lifetime to become enmeshed in millions and millions of hearts".

—*Jawaharlal Nehru*

a visionary. I claim to be a practical idealist). அறிஞர்கள் பற்பலரும் தம் அறிவினால் ஆராய்ந்து, அறிவிற்கு ஒவ்வாதனவும், நடைமுறைக்கு இயையாதனவும் ஆகும் என மறுத்து, மயங்கித் தடுமாறிய திட்டங்கள் பலவற்றை வகுத்துக் காந்தியடிகள் திறம்படச் செயற்படுத்திக் காட்டித், தமது நுண்மாண் நுழைபுலத்தைப் பலகாற் புலப்படுத்தியுள்ளார். காந்தியடிகளின் அரும்பெரும் தொண்டின் திறத்தினாலேயே, இந்திய மக்கள் சிறிதும் எதிர்பாராத நிலையிலும், இந்தியாவிற்குச் சுதந்திரம் எளிதிற் கிடைத்து விடுவதாயிற்று.

## (15) ஒழுக்கத்தின் விழுப்பம் :

திருவள்ளுவர் தமது திருக்குறளில் ஒழுக்கத்தையே பெரிதும் வற்புறுத்தினார். ஒழுக்கம் விழுப்பம் தரலான், அதனை நாம் உயிரினும் மேலானதாக மதித்துக் காத்தல் வேண்டும் எனப் பணித்தார். உலக நூலாசிரியர்களுள், திருவள்ளுவரைப் போல ஒழுக்கத்தை மிக மிக வற்புறுத்தியவர் வேறு எவருமே இல்லை எனலாம். அறிஞர்களிற் பலர், அரசியலுக்கும் தனி மனிதனின் ஒழுக்கத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்றே, எத்துணையோ நெடுங்காலமாகக் கருதியும் கூறியும் வந்தனர். ஆனால் காந்தியடிகளோ, மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் ஒழுக்கம் மிக மிக இன்றியமையாதது என வலியுறுத்தினார். திருவள்ளுவர் மனம் மொழி மெய் என்னும் மூன்றின் உண்மையைப் பெரிதும் வற்புறுத்தினார். காந்தியடிகள் அவர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அங்ஙனமே வாழ்ந்து காட்டினார்.

## (16) வாழ்க்கைக் கலை :

திருவள்ளுவர் ஒரு பெரும் கவிஞர், தலைசிறந்த கலைஞர்! காந்தியடிகள் கவிஞர் அல்லர் எனினும், அவரது வாழ்க்கை ஒரு சிறந்த அரும்பெரும் கவிதையாகவே அமைந்து திகழ்ந்தது. ஒரு வகையிற் காந்தியடிகளைச் சிறந்த பெருங் கலைஞரே ஆவர் என நாம் துணிந்து கூறலாம். 'வாழ்க்கையின் தூய்மையே உண்மையான உயர்ந்த கலையாகும். பயிற்சி அளிக்கப் பெற்ற குரலினின்று நல்ல இசையை வெளிப்படுத்தும் திறனைப் பலரும் எளிதிற் பெற முடியும். ஆனால் வாழ்வின் தூய்மையிலும் ஒருமையிலும் இருந்து, தெய்வீக மயமான ஓர் உயரிய இசையை எழுப்பிப் பரப்புதல், எளிதில் இயல்வதொன்றன்று'. காந்தியடிகளின் பலவகைச் செயல்களும், முற்போக்கான எழில் மிக்க நல்லிசைப் பாடலாகவே விளங்குவனவாயின. அவர் பேசிய ஒவ்வொரு சொல்லும், அவர் நிகழ்த்திய ஒவ்வொரு உறுப்பசைவும், அந்நல்லிசைப் பாடலுக்கு மிகவும் பொருந்திய இனிமை பயந்தன. தம்மை அறியாமலே ஒரு முழு நிறைவான பெருங்கலைஞராகப் பிறங்கினார் அவர்! வாழ்க்கையை நடத்துவது எங்ஙனம்? என்னும் கலையை, அவர் சிறப்புறக் கற்றுப் பழகித் தேர்ச்சி பெற்று விளங்கினார். உண்மையும் நன்மையும் அவர்தம் வாழ்வியற் கலையைப் பெரிதும் சிறந்தோங்கி மிளிரச் செய்தன. அதனால் அவர் அமர்ந்த இடம் கோயில் ஆயிற்று; நடந்த நிலம் புனிதம் அடைந்தது.

திருவள்ளுவர் வாழ்க்கைக் கலைக்கு இலக்கணம் வகுத்தார். காந்தியடிகள் வாழ்க்கையைக் கலையாக வாழ்ந்து காட்டினார்.

## (17) உயிராற்றல் :

திருவள்ளுவர் தமது திருக்குறளில், படைமாட்சி, படைச் செருக்கு என்னும் இரண்டு தலைப்புக்களை வகுத்துள்ளாராயினும், வெறும் படையாற்றலைக் காட்டிலும், பண்பு நலம் மிக்க உயிராற்றல் (Soul-force) தான், எல்லாவற்றையும்விட வலிமை வாய்ந்தது என்பதனைச் செவ்விதின் உணர்ந்திருந்தார். வாளை எடுத்தவன் வாளாலேயே மடிவான். படைபலத்தைவிட ஆன்ம பலமே மேலானது. 'படைகொண்டார் நெஞ்சம் நன்று ஊக்காது' என்பது அவர் தம் துணிவு. திருவள்ளுவர் உயிராற்றலின் உயர்வையும் சிறப்பையும் மிகச் செவ்வையாக உணர்ந்திருந்தார். 'ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி', 'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்' என்னும் குறள்களால், உயிராற்றலின் ஒப்புயர்வற்ற மேன்மையைத் திருவள்ளுவர் உணர்ந்துணர்த்தியிருத்தல் காணலாம்.

திருவள்ளுவரின் செந்நெறியைப் பின்பற்றியே, காந்தியடிகளும் உயிராற்றல் அல்லது ஆன்ம பலத்தின் மேன்மையினைப் பெரிதும் உணர்ந்து விளக்கிப் பரப்பினார். 'ஆன்ம பலத்தைப் பயன்படுத்தி அறப்போர் நிகழ்த்தும் சத்தியாக்கிரகிகள், முழுப் பிரமச்சரியம் கடைப்பிடித்தல் வேண்டும். வறுமையை வலிந்து ஏற்றல் வேண்டும்; உண்மையையே பின்பற்ற வேண்டும்; அஞ்சாமையைப் பயிலுதல் வேண்டும். கடவுளுக்கு அஞ்சுகிறவன் வேறு மனிதர் எவர்க்கும் அஞ்சத் தேவையில்லை' என அறிவுறுத்தி வந்தார். திருக்குறளும் 'அஞ்சாமையல்லால் துணைவேண்டா' எனக் கூறியிருத்தல் கருதற்பாலது. ஆன்ம பலத்தின் மேன்மையைக் காந்தியடிகள், தாம் பெரிதும் போற்றி வழிபட்ட இராமபிரானின் வரலாற்றுத் தத்துவ நுட்பத்தைக் கொண்டே, பின்வருமாறு விளக்குகின்றார். 'இராமன் வெறும் மனிதன்; அவன் துணையாகக் கொண்டவைகளோ குரங்கின் திரள்கள் ; அவனது பகைவனாகிய இராவணனோ, அசுர பலம் கொண்டவன்; பத்துத் தலைகளை உடையவன். அவனது இலங்கை மாநகரமோ, நாற்புறமும் கொந்தளிக்கின்ற கடல் சூழ்ந்தது; வலிமையான மதிற் பாதுகாப்புக்களை உடையது. இத்தகைய

---

"All his manifold activities became progressively a symphony and every word he spoke and every gesture that he made fitted into this and so unconsciously he became the perfect artist, for he had learnt and mastered the art of living. . . . Where he sat became a temple and where he trod was hallowed ground."

—*Nehru.*

வலிமை மிகுந்த இராவணனை, இராமபிரான் வெற்றி பெற்றதனால், உடலாற்றலைவிட உயிர் ஆற்றலே எவ்வாற்ருனும் மேலானது, என்பது புலனாகின்றதன்றோ?, என்றெல்லாம் காந்தியடிகள் உணர்த்தியருள்கின்றார்.

## (18) இன்னா செய்தார்க்கும் நன்னயம் :

திருவள்ளுவர், தீங்கு செய்பவர்க்கும் நாம் நன்மையே செய்தல் வேண்டும்; அங்ஙனம் செய்யாத வழி, நம்முடைய, சால்புடைமையினால் யாது பயன்? என்கின்றார். 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு?' என்பது திருக்குறள். காந்தியடிகள், திருவள்ளுவரினுடைய திருக்குறளை அடியொற்றி ஒழுகினார். தமக்குத் தீங்கு செய்தவர்களையெல்லாம் மன்னித்தார் ; தம்மைத் தாக்கியவர்களையெல்லாம் பொறுத்தருளினார். அவர்களின் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு அறவே மறுத்துவிட்டார். தம்மீது குண்டு வீசிய (20—1—1948) அறிவற்ற இளைஞனையும், எவ்வகையாலும் ஒரு சிறிதும் கொடுமைப்படுத்துதல் ஆகாது என்றும், அவனைத் திருத்தி நல்வழிப்படுத்தவே முயல வேண்டும் என்றும், காவல் துறைத் தலைவரைக் காந்தியடிகள் வேண்டிக் கொண்டதை நாம் அறிவோம்.

> தன்னரிய திருமேனி
>         சதைப்புண்டு தவிப்பெய்திப்
> பன்னரிய பெரும்பாடு
>         படும்போதும்; 'பரிந்து, எந்தாய்!
> இன்னதென அறியகிலார்
>         தாம்செய்வது; இவர்பிழையை
> மன்னியும்' என் றெழிற்கனிவாய்
>         மலர்ந்தார்நம் அருள்வள்ளல்!
>
> —இரட்சண்ய யாத்திரிகம்.

எனத் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்தருளுமாறு, இயேசுபிரான் இறைவன்பால் வேண்டிக் கொண்டதனை நினைவூட்டும் வகையில், காந்தியடிகளின் செயலும் அமைந்திருந்தமை காணலாம்.

## (19) சான்ருண்மை :

தென்னாப்பிரிக்காவில் தம்மைச் சிறையில் அடைத்த ஜெனரல் ஸ்மட்ஸ் அவர்களையும் காந்தியடிகள் பெரிதும் நேசித்தார். தமது ஆன்ம பலத்தால் அவருடைய படை பலத்தை வெற்றி கொண்டார். தாம் விதித்த நிபந்தனைகளையெல்லாம் அவர் ஏற்றுக்கொண்டு உடன்படுமாறு செய்தார். அரசியலில் மாறுபட்டாலும், அடிகளாரின் அகிம்சை அருளியலுக்கு ஜெனரல் ஸ்மட்ஸ் அவர்கள் அடி பணிந்தார். அவர் இறுதி வரையில் அடிகளார்பால் மிக்க தோழமைத் தொடர்பே கொண்டிருந்தார். காந்தியடிகள் மறைந்தபொழுது, ''இத்தகைய சிறந்த சான்றோர்பால் யான் அப்போதும் கூட மிக உயரிய மதிப்புக் கொண்டிருந்தேன். ஆயினும், என்னுடைய தலைவிதி, அவருக்கு மாறுபட்டு நிற்க வேண்டிய நிலையில் அமைந்துவிட்டது'' என அவர் கழிவிரக்கம் கொண்டு புகழ்ந்து போற்றிப் பாராட்டியிருத்தல், நினைந்து மகிழத் தக்கது. நியட்ஸ்கி என்னும் தத்துவப் பேராசிரியர், 'ஒரே ஒரு உண்மைக் கிறித்தவர்தான் இருந்தார். அவரும் சிலுவையில் இறந்துவிட்டார்' என ஒரு சமயம் நுண்ணிதின் வியந்து குறிப்பிட்டார். காந்தியடிகள் தேச நலத்திற்காகத் தமது உயிரையே தியாகம் செய்ய நேர்ந்ததனைக் கண்டிருந்தால், அவர் தம்முடைய கூற்றைச் சிறிது மாற்றித் திருத்தி அமைத்துக் கொண்டிருப்பார் எனலாம். தேச நலத்திற்காக உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் ஒப்படைத்து, இறுதியில் ஒரு புனித உயிர்த் துறவி (Martyr) ஆகவும், காந்தியடிகள் பெரும் பேறு பெற்றார். 'நத்தம் போற்கேடும் உளதாகும் சாக்காடும் வித்தகர்க் கல்லால் அரிது' என்னும் திருக்குறளுக்குக் காந்தியடிகளே சிறந்த எடுத்துக் காட்டாவர் எனலாம்.

## முடிவுரை :

இங்ஙனம் திருவள்ளுவருக்கும் காந்தியடிகளுக்கும் இடையே, எத்துணையோ பல ஒப்புமை இயைபுகள் உண்டு. இவ்விரு பெருமக்களையும் நாம் நம்முடைய வாழ்க்கைக்குரிய வழிகாட்டிகளும் அருளாசிரியர்களுமாகக் கொண்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, உய்ய முயலுவோமாக, வாழ்க வள்ளுவம்! வளர்க காந்தியம்! !

[சென்னைத் திருமயிலைத் திருவள்ளுவர், திருக்கோயிலில் நிகழ்ந்த திருக்குட முழுக்கு விழாவினை ஒட்டி, இக்கட்டுரை இங்கு வெளியிடப் பெறுகின்றது.]

—ஆசிரியர்.

---

" What is the meaning of Rama, a mere human being, with his host of monkeys, pitting himself against the insolent strength of ten-headed Ravana, surrounded in supposed safety by the raging waters on all sides of Lanka. Does it not mean the conquest of physical might by spiritual strength ?"

—*Mahatma Gandhi*,
—*To Every Englishman*, 1920.

" It was my fate to be antagonist of a man for whom even then I had the highest respect ".

—*J. C. Smutts:*

" Nietzche uttered once the piercing paradox ' There has been only one Christian and he died on the Cross '. Perhaps if the frenzied philosopher had lived long enough to observe the manner of life of his other guru, he would have qualified his celebrated quip"

—*Lewelyn Powys.*

# தருபவன் ஒருவன் வேண்டும்

''ஒருவனே டொருத்தி ஒன்றென்று
உரைத்திடும் உலகம் எல்லாம்,
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே,
தருபவன் ஒருவன் வேண்டும்;
தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே'' —சித்தியார்.

**முன்னுரை :**

மனிதனுக்கு எத்தனையோ பல வகையான உணர்ச்சிகள் உண்டு. அவைகளுள் இறையுணர்வும் ஒன்று. நம்மையும் அறியாமல் நமக்குள்ளே அஃது அமைந்து கிடக்கின்றது. கடவுள் இல்லை என்று சாதித்து வாதிப்பவர்களுக்கும் உள்ளே கூட, அவ்வுணர்வு அமைந்து கிடக்கத்தான் செய்கின்றது. ஆனால் அஃது அவர்கள் பால், எதிர்மறை முறையில் ( Perverted way ) செயற்படுகின்றது. கடவுளை இகழ்பவர்களும் கூட, தாங்கள் பின்பற்றும் தலைவர்களைக் கடவுளைப் போலவே பாவித்து, ஒரு வகையில் ஆர்வமிக வழிபாடு செய்து வருதலைக் காண்கின்றோம். புத்தர் பெருமான், கடவுளுண்மை பற்றி ஏதும் வற்புறுத்திக் கூறிற்றிலர். ஆயினும், அவருக்குப் பின் வந்த பௌத்தர்கள், அவரையே கடவுளாகக் கருதி, அவர் மீது கடவுள் தன்மைகளை ஏற்றி, அவரையே கடவுளாக வழிபடத் தலைப்பட்டனர் ; அவர் தம் திருவுருவங்களைக் கடவுளின் திருவுருவங்களைப் போலவே, நிற்றல்—இருத்தல்—கிடத்தல் ஆகிய பல்வேறு நிலைகளிலும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். 'ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தம்மின் வேறல்ல; இரண்டும் ஒன்றே' என்னும் கொள்கையினையுடைய ஆதிசங்கரர் தாமும், மனித குலம் உய்ந்து ஈடேறுவதற்குக் கடவுள் உணர்வும் வழிபாடும் இன்றியமையாதன என்று கண்டு, தாமே அவற்றைக் கடைப்பிடித்து உலகுக்கு வழிகாட்டியருளினர்(1).

ஆதி சங்கரர் பாடியருளிய பஜகோவிந்தம், சுப்பிரமணிய புஜங்கம், சௌந்தர்ய லஹரி, சிவானந்த லஹரி முதலிய சிறந்த துதி நூல்கள், அவர்தம் எல்லையற்ற பக்திச் சிறப்பினை இனிது விளக்கும்.

நம்மை விட அறிவிலோ ஆற்றலிலோ செல்வத்திலோ பதவியிலோ சிறந்துயர்ந்து திகழ்பவர்களைக் காணுங்கால் எல்லாம், இயல்பாகவே நமக்கு ஒரு வகை வியப்பும், உவப்பும், அச்சமும், அடக்கமும் ஏற்படுகின்றன. அவர்களைத் தொழுது வணங்கி, அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற முயலுவது, பொதுவான நல்ல மனித இயல்பாகவே யாண்டும் காணப்படுகின்றது. இவ்வியல்பின் உணர்ச்சியும் சிறப்பும் மிக்க நிலையே, கடவுள் உணர்ச்சி எனலாம். நாம் நம்முடைய பலவகைக் குறைகளையும், சிறுமைகளையும் உணரத் தலைப்படுகின்றபோது, நம்மிலும் மேலான உயர்ந்த பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய பரம்பொருள் ஒன்று உண்டு என்று, நாம் உணரப் பெறுகின்றோம். அத் தெளிந்த மன நிலையினைத் தான், கடவுளுணர்ச்சி அல்லது இறையுணர்வு என்று குறிப்பிடுகின்றோம்.

**இறையுணர்வு :**

மனித வாழ்வில் சில சில உணர்வுகள், நம்மிடையே சில காலம் வரையில் மறைந்து கிடந்து, பின்னர் வெளிப்பட்டு வளர்ந்து செயற்படுகின்றன. உதாரணமாக, 'பால் உணர்வு' (Sex-instinct) என்பதனைக் குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட வயதில், பருவத்தில் அஃது ஏற்பட்டே தீர்கின்றது. குழந்தைமை நிலைமையிலும், இளம் பிள்ளைமை வயதிலும், பால் உணர்வு பெரிதும் தோன்றுவதில்லை. அப்போது அதனை நாம் இழிவாகவும் அருவருப்பாகவும் கூட நினைக்கின்றோம். ஆனால் காளைப் பருவம் அடையுங்கால், நம் மனப்பான்மை மாறுகின்றது. பாலுணர்வின் ஆற்றலை நாம் பாங்குற உணரப் பெறுகின்றோம். நாம் விரும்பினாலும் வெறுத்தாலும், உடன்பட்டாலும் மறுத்தாலும், எப்படியேனும் பாலுணர்ச்சி நம்மிடை அரும்பியே விடுகின்றது!

அது போலவே, ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஏதேனும் ஒரு சூழ்நிலையில், நம் மனித வாழ்வில், எங்ஙனமேனும் நமக்குக் கடவுள் உணர்வு தோன்றி விடுகின்றது. முதலில் நாம் கடவுள் உணர்வின் அருமை பெருமைகளையும், அநுபவங்களையும் அவசியத்தினையும் உணராமல் இருந்த போதிலும், பின்னர் உணர வேண்டியவர்கள் ஆகிவிடுகின்றோம். அப்பொழுதுதான் நம்முடைய முன்னைய அறியாமையும் பிழையும் விளங்குகின்றன. நமது பேதைமை நிலையினை அறிந்து கொண்டு, பின்னர் நாமே நாணமுற்று வருந்துகின்றோம். இதனையே,

''கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பெனினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்;
கணவன்அருள் பெறின்முனே சொன்னவாறு என்
கருதி நகை ஆவள்; அது போற் [றெனக்
சொன்னபடி கேட்கும் இந்தப் பேதைக்கு
நின்கருணை தோற்றிற் சுகாரம்பம் ஆம்...

எனத் தாயுமான சுவாமிகள் அழகுறக் குறிப்பிட்டருளியிருத்தல் காணலாம்.

1. "What is most curious is that a philosopher, such as **SANKARA**, the most decided monist, and the upholder of Brahman, as a neuter, as the cause of all things, is reported to have been a worshipper of idols and to have seen in them despite all their hideousness, symbols of the Deity, useful as he thought, for the ignorant, even though they have no eyes as yet to see what is hidden behind the idols, and what was the true meaning of them." —*Max Muller.*

### திருநாவுக்கரசர் :

திருநாவுக்கரசரும் இத்தகையதொரு செய்தியினையே, தம்முடைய அநுபவமாகக் குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசர், தம் இளமைப் பருவத்திற் சிலகாலம், சமண சமயம் சார்ந்திருந்தார். கடவுளில்லை என்றும் அவர் கட்டுரைத்து வந்தார் போலும்! ''ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே'' என்று, அவரே கூறி இரங்குமாறு போல, இறைவனைப் பழித்துப் பேசிக் காலத்தைக் கழித்து வந்தார் அவர்! அவருக்கும் வாழ்க்கையில் ஏதோ ஒரு குறித்த சூழ்நிலை எய்தியது; பக்குவம் வந்தது. அவர் அறிவும் தெளிவும் அடைந்தார். இறையுணர்ச்சி பெற்றார். கடவுளைத் தேடி எங்கெங்கோ அலைந்தார். எங்கும் உள்ள கடவுள், தம் உள்ளத்திற்குள்ளே இருப்பதைக் கண்டு உணர்ந்தார். கடவுள் தம் உள்ளத்திலேயே எழுந்தருளி வீற்றிருக்கவும், அவர் இல்லை என்று பிறழ நினைத்துக்கொண்டு, இதுகாறும் அவரைப் புறங்கூறி இகழ்ந்து வந்தோமே! நம் இகழ்வுரைகளை யெல்லாம், இறைவன் நமக்குள்ளே நம்மோடு ஒன்றி உடனிருந்து, இதுவரையிற் கேட்டுக் கொண்டு அன்றோ இருந்திருக்கின்றார்! நாம் எத்தகைய தவறு செய்தோம்?'' என்று நினைத்துக் கழிவிரக்கம் கொள்கின்றார்!

''கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்!
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடன்இருந் தறிதி என்று
வெள்கினேன்! வெள்கி நானும்
விலாஇறச் சிரித்திட் டேனே!''

### உடலமைப்பும், இறையுணர்வும் :

இறையுணர்வு பெறுவதற்கு நாம் வேறு பிற சாதனங்களோ, சான்றுகளோ தேட வேண்டுவதில்லை. நம்முடைய உடம்பின் அமைப்பினை ஒரு சிறிது உன்னிப் பார்த்து உணர்ந்தாலுங்கூட, நமக்குக் கடவுளுணர்ச்சி ஏற்படுதல் திண்ணம்.

''நமது மனித உடம்பில் 600 தசை நார்கள், 1,000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள், 550 இரத்த நாளங்கள், 16 சதுர அடிப் பரப்புடைய மென்தோல், 15 லட்சம் வியர்வைக் கோளங்கள், மூச்சுப் பையில் தேன்கூடு போன்ற 70 கோடி கண்ணறைகள், $3 \times 10^{12}$ நரம்புச் செல்கள், 300 லட்சம் வெள்ளை யணுக்கள், $18 \times 10^{13}$ சிவப்பணுக்கள், 2,50,000 தலைமயிர்கள் ஆகியவை உள்ளன. 70 ஆண்டுகளில் நமது இதயம் 250 கோடி தடவைகள் துடிக்கின்றது. 5,00,000 டன் இரத்தத்தை வெளியேற்றி உடம்பிற் பரவச் செய்கின்றது. நாள்தோறும் 36 அவுன்சு அளவு உமிழ் நீர் சுரந்து விழுங்கப்படுகின்றது. 120 முதல் 240 அவுன்சு வரை வயிற்றிற் செறிநீர் ஊறி, உணவைச் செறிப்பித்துக் கிருமிகளைக் கொல்லுகின்றது.(2)''

இதுபோன்ற எத்துணையோ பல வியத்தகு செயல்களை யெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது, நாம் கடவுள் உணர்ச்சி அடையப் பெறுதல் திண்ணம்.

### எமர்சன் :

''கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை ஒரு சிறிது உன்னிப் பார்த்தாலே நமக்குப் புலனாகும். நமக்கு மேற்பட்ட இயற்கைச் சட்டம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது தான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஏதோ நம்மால்தான் எல்லாம் நடப்பது போலக் கருதிக் கொண்டு, நாம் மேற்கொள்ளும் முனைப்பு மிக்க செயல்கள், ஒரு வகையில் தேவையில்லாதனவும் பயனற்றனவுமே யாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில்தான், நாம் வன்மையுடையவர்களாகின்றோம். செருக்கற்ற பணிவுடைமையினால்தான், நமக்குத் தெய்விக நிலை கிடைக்கின்றது. நம்பிக்கையும் அன்புமே நம்முடைய ஏராளமான கவலைச் சுமைகளினின்று நம்மை விடுவித்து, நமக்கு நலம் விளைவிக்கின்றன. ஓ! என் அன்பிற் சிறந்த உடன்பிறப்பாளர்களே! கடவுள் இருக்கின்றார்''

''இயற்கைப் பொருள்களினுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திற்கு மேலும், கடவுள் என்ற ஓர் உயிர்ப் பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மை இயக்கி நிற்கின்றது. உலக அமைப்பை, நாம் ஏதும் பிறழச் செய்து விடாதபடி, அதுதான் கவனித்துக் கொள்ளுகின்றது. உலகப் பொருள்களிலெல்லாம், அது தன்னுடைய ஆற்றல் மிக்க கவர்ச்சித் திறனைப் பாய்ச்சி, ஊடுருவச் செய்துள்ளது. அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும்பொது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றோம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்த முற்படும்போது, அது நம் கைகளைப் பிணித்து விடுகின்றது. அல்லது நம்மையே தாக்குமாறு செய்கின்றது. உலகப் பொருள் அமைப்புகள், செயல்கள் யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்கு உணர்த்தி, நம்பிக்கை கொள்ளச் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றன (3)'' என்று, ரால்ஃப்

---

(2) "There are in the human body 600 muscles, 1000 miles of blood vessels, 550 arteries, 16 square feet of skin, $1\frac{1}{2}$ million sweat glands, 700 million cells in honeycomb fashion in the lungs, $3 \times 10^{12}$ nerve cells, 30 million white corpuscles, $18 \times 10^{13}$ red corpuscles, and 2,50,000 hairs on the head. In 70 years, the heart beats 2,500 million times and lifts 5,00,000 tons of blood. 3 pints of saliva are swallowed daily and the stomach generates 5 to 10 quarts of gastric juice daily which disgest the food and destroys the germs."
—*Louis Leguen.*

(3) "A little consideration of what takes place around us every day would show us that a higher law than that of our will, regulates events ; that our painful labours are very unnecessary altogether fruitless ; that only in our easy, simple, spontaneous action are we strong, and by contenting ourselves with obedience we become divine. Belief and love will relieve us of a vast load of care. O ! My brothers ! God exists.

There is a soul at the centre of nature and over the will of every man, so that none of us can wrong the universe. It has so infused its strong enchantment into nature that we prosper when we accept its advice ; and when we struggle to wound its creatures, our hands are glued to our sides, or they beat our own breasts. The whole course of things goes to teach us faith."
—*Ralph Waldo Emerson.*

வால்டோ எமர்சன் என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் கூறுவதும், ஈண்டு நம்மனோர் அறிதற்கு உரியது.

### தமிழ்ச் சான்றோர்கள் :

இறையுணர்ச்சி உடையவர்களாக விளங்குதல், ஒரு சிறந்த பண்பு. பெரியவர்கள் எல்லோரும் அதனைச் சிறந்த குணங்களுள் ஒன்று என மதித்துள்ளனர். ''குலன் அருள் தெய்வங்கொள்கை, கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை'' என்னும் நூற்பாவில், கடவுளுணர்ச்சி ஆகிய தெய்வங் கொள்கையும், ஓர் இன்றியமையாத சிறந்த பண்பாக வற்புறுத்தப் பெற்றிருத்தல் காணலாம்.

''உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்''

எனத் திருவள்ளுவரும், நாத்திகர்களைச் சுட்டிக் கடிந்து கூறியுள்ளார்.

திருமுருகாற்றுப் படையில், ஆசிரியர் நக்கீரர் கடவுளுணர்ச்சி யில்லாதவர்களை ''முரணுநர்'' (243) எனக் குறிப்பிட்டு இழித்துரைக்கின்றார்! புறநானூற்றுச் செய்யுள் (29) ஒன்றில், 'புண்ணிய பாவங்கள் இல்லை என்று அழித்துச் சொல்லும் கொடிய தீயவர்களுடன் நீ எஞ்ஞான்றும் சேராதே!' என்னும் கருத்தில்,

''நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இனன் ஆகிலியர்!''

என உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் பெருமான், சோழன் நலங்கிள்ளி என்னும் அரசனுக்கு அறிவுரை கூறிப் பாடியருள்கின்றார்!

மாணிக்கவாசகர், தம் திருவாசகத்தில் 'போற்றித் திருவகவல்' என்னும் சிறந்த பகுதியில்,

'ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்''

எனக் கூறி வருந்துகின்றார்.

''நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே!
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்;
தடைஒன் றின்றியே தன்அடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே!''

எனத் திருநாவுக்கரசர், நமக்குச் சிறந்த எச்சரிக்கை செய்தருள்கின்றார். ''காரணகாரிய வாதங்களைக் கொண்டு, உங்கள் அறிவினாற் கடவுளை நீங்கள் சோதித்து அறிய முற்படாதீர்கள். நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு மனம் பற்றி வாழ்மின்கள். அதனால் உங்களுடைய மாபெரும் துக்கங்கள் எல்லாம் மாய்ந்து நீங்கி யொழிந்து, நலமுற்று வாழப் பெறுவீர்கள்!'' என்று ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன் எங்கள்
சோதி!
மாதுக்கம் நீங்கலுறுவீர்! மனம்பற்றி வாழ்மின்!
சாதுக்கள்மிக்கீர்! இறையே வந்து சார்மின்களே!

### காந்தியடிகள் :

''உலகம் எங்ஙனும் ஓர் ஒழுங்குமுறை நிலவுகின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும், உலகில் வாழ்கின்ற ஒவ்வோர் உயிரையும், மாற்ற முடியாத ஆற்றல் மிக்க ஒரு பெருஞ் சட்டம், ஆட்சி புரிந்து வருகின்றது. அஃது ஒரு குருட்டியற் சட்டம் அன்று. ஏனெனில், குருட்டியற் சட்டமாயின், உயிரும் அறிவும் உடைய பொருள்களின் இயக்கத்தை வரையறை செய்து நடத்த, அதனால் இயலாது. எனவே, வாழ்வனைத்தையும் ஒரு வரையறை செய்து நடத்துவிக்கும் அந்தச் சட்டம்தான், கடவுள். சட்டமும், சட்டத்தை வகுப்பவனும் ஒன்றே. நாம் அறிந்து கொள்ளமை காரணமாகச் சட்டத்தினையோ, அதனை வகுத்தவனையோ, இல்லை என்று சொல்லுவது பொருந்தாது. உலகில் நிலவும் அரசின் நெறியினை அறியாமையினாலோ, இல்லை என்று சொல்லுவதனாலோ, நமக்கு ஏதும் பயன் விளையாது. அது போலவே நாம் கடவுளை இல்லை என்பதனால், நமக்கு அவர்தம் சட்டங்களினின்று விடுதலை ஏற்பட்டுவிடாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதனால், நம் வாழ்க்கை தொல்லைகள் இன்றி, எளியதும் இனியதுமான அமையும். அங்ஙனமே கடவுளின் இயற்கைச் சட்ட திட்ட நெறிமுறைகளுக்கும், நாம் கட்டுப்பட்டு ஒழுகினால், நம்முடைய வாழ்க்கைப் பயணம் எளிமையும் இன்பமும் நிறைந்ததாக அமைந்துவிடும்'' (4) எனக் காந்தி அடிகள் அறிவுறுத்துகின்றார்.

### முடிவுரை :

இங்ஙனம் சான்றோர்கள் எல்லோருமே, ஒரு முகமாகக் கட்டுரைத்து, வற்புறுத்தி அறிவுறுத்தியருளுதலைக் காண்கின்றோம். ஆதலின் நாம் அனைவரும் இறையுணர்வு உடையவர்களாகத் தூய வாழ்க்கை வாழ்ந்து, நலம் பெற முயலுவோமாக!

---

(4) "There is orderliness in the universe ; there is an unalterable Law governing everything and every being that exists or lives. It is not a blind law ; for no blind law can govern the conduct of living beings.

That law, then, which governs all life is God. Law and the Law - Giver are one. I may not deny the Law or the Law - Giver because I know so little about It or Him ;

Just as my denial or ignorance of the existence of an earthly power avail me nothing, even so my denial of God and His law will not liberate me from its operation. Whereas humble and mute acceptance of divine authority makes life's journey easier even as the acceptance of earthly rules makes life under it easier."

"—*Mahatma Gandhiji.*"

# திருமயிலைப் புராணம்



## (முற்றொடர்ச்சி)

(வேறு)

பாயிரம்நாட் டுடன்நகரம் பொதிய மேலோர்
பகர்தருநற் றலவிசிட்டப் பொழிப்புரையே, கயிலை
ஏயதலத்து உமைசாபம் உமைபூசை வேதம்
எழிற்குமர வேள்விளங்கு கலைமடந்தைகேள்வன்
மேயபுகழ் முனிவர்களும் சுரரும் ஆடும்
வியன்தீர்த்த மான்மியம், மேல் உயிர்கள் உய்யும்
தூயதிரு விழாச்சிறப்புச் சருக்கம் ஈறாச்
சொல்சருக்கம் பதின்மூன்றாய்த் தொகுத்திந் நூலே.

பாயிரத்துடன் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, பொதிய மலையில் வாசமாயிரா நின்ற அகஸ்திய முனிவரால் சொல்லப்படுகின்ற தவ மான்மியச் சருக்கம், கயிலாய கிரியினிடத்துப் பார்வதி தேவியாருக்குச் சம்பவித்த சாபச் சருக்கம், பார்வதியார் அந்தத் தலத்தில் வந்து பூசை செய்த சருக்கம், வேதங்கள் பூசித்த சருக்கம், பிரகாசியா நின்ற சரஸ்வதி கணவனாகிய பிரமதேவன் பூசித்த சருக்கம், தவத்தால் கீர்த்தி பொருந்திய முனிவர்களுந் தேவர்களும் ஸ்நானம் செய்த தீர்த்த விசேடச் சருக்கம் என்னும் இவை முதல், உலகத்தில் உயிர்கள் பிழைக்கும்படியான பரிசுத்தமாகிய திருவிழாச் சருக்கம் ஈறாகச், சொல்லுகின்ற சருக்கங்கள் பதின்மூன்றாக இப்புராணத்தைத் தொகுத்து,

எந்நிலமும் தொழுமயிலைப் புனிதன் சீர்த்தி
யாவையும்ஓர் நூலாக்கி அந்நூல் தன்னில்
மன்னுபா யிரச்சிறப்புச் சருக்கம் முதலாய்
ஞானம்வளர் திருவிழாச் சருக்கம் ஈறாய்த்
துன்னியசீர்ப் பெருஞ்சருக்கம் பதின்மூன் றாகத்
தூயசருக் கங்கள்தனில் தோய்ந்த யாவும்
பன்னும்அறு நூற்றறுபான் ஆக்கி வைக்கப்
பகர்ந்தனன்; இந்நூற் பெயரும் பகர்வாம் கேண்மோ.

எந்த உலகத்தாருந் தொழுகின்ற திருமயிலையில் வீற்றிருக்கும் கபாலீசருடைய மான்மியங்களை யெல்லாம் ஒரு புராணமாக்கி, அப்புராணத்தில் பொருந்திய பாயிரச் சருக்கம் முதலாக மெய்ஞ்ஞானம் வளர்தற்கு ஏதுவான திருவிழாச் சிறப்புக் கூறும் சருக்கம் ஈறாகக் கீர்த்தி பொருந்திய பதின்மூன்று சருக்கமாகவும், அவ்வாறு பொருந்திய சருக்கங்களிலே அடங்கிய பாடல்கள் அறுநூற்றறுபதாகவும் செய்தமைத்தோம். இந்நூற் பெயரும் சொல்லுகிறோம் கேண்மின். இதிலே தொடைநோக்கிப் பொதுப்பாயிரஞ் சிறப்பாக்கப்பட்டது.

(வேறு)

கூறரும் பொருள் இதென்றே
குறுமுனி புகலச் சான்றோர்
தேறிய வடநூல் தன்னைத்
தென்னூல் அதாகச் செய்த
வேறுசீர்க் காதைக் கிங்ஙன்
எவன்பெயர் என்னில் என்றும்
வீறுசேர் மயிலைமூதூர்ப் புராணமாய்
விளம்பும் மாதோ!

யாவருக்கும் சொல்லுதற்கரிய பொருள் இது என்று அகத்திய முனிவர் சொல்ல, அதை முனிவர்கள் கேட்டுத் தெளிந்த சமஸ்கிருத பாஷையிலிருக்கும் புராணத்தைத் தமிழ்ப் புராணமாகச் செய்த பெருமை மிகுந்த இந்தச் சரித்திரத்திற்கு என்ன பெயரென்றால் எந்நாளும் புகழ் விளங்கிக் கொண்டிருக்குந் திருமயிலைப் புராணமென்று சொல்லப்படும்.

பூமரு வுயிர்க்கும் வாசப்
பொதும்பர் விண்டொட விளங்கும்
மாமயிலைப் புராணம்
வகுத்த யாப்பிலக்கணத்தில்
நாமமாம் பாவினத்துள் நலம்
பொருந்துறுப் பிற்சொல்லும்
ஏமமாம் விருத்தந் தன்னால்
இசைத்தனன் தகைமைத் தாயே.

மலர்கள் தேனைப் பொழிகின்ற வாசனையுள்ள சோலைகள் ஆகாயத்தை அளாவும்படி விளங்காநின்ற பெருமை தங்கிய திருமயிலையின் புராணத்தை, இலக்கணங்களில் ஒன்றாக வகுத்த செய்யுள் இலக்கணத்தில் வழங்கும் பெயரையுடையவாகிய பாவினங்களில், நன்மை மிகுந்த உறுதிப் பாட்டுடனே சொல்லுகின்ற இன்பமுள்ளதான விருத்தப் பாவினாலே, தகுதியுடையதாகக் கூறினேன்.

(வேறு)

முன்சொல் ஆயினும்வட
சொலைத்தென் சொலாய்மொழிதல்
என்சொல் ஆயினும்அப்
பொருள்கிடைத்த லாலிகழார்
நன்சொல் ஆயினும்பொருள்
பழுதாயிடின் நவையாம்
புன்சொல் ஆயினும்நற்
பொருள் சேர்ந்திடிற் புகழே.

முன்னோர்கள் வாக்கியமாயிருந்தாலும், சமஸ்கிருத பாஷையைத் தமிழ்ப் பாஷையாகச் சொல்லுதல் என்னுடைய சொல்லயிருந்தாலும், இதில் அந்தச் சமஸ்கிருத பாஷையில் அமைந்திருக்கும் அப்பொருள் கிடைப்பதனாலே இகழமாட்டார்கள். நல்ல மொழிகளாய் இருந்தாலும் அவைகளால் சொல்லப்படுகின்ற பொருள் குற்றமுள்ளதாயிருந்தால் அந்தச் சொற்களுங் குற்றமுள்ள சொற்களேயாம். அற்பமான சொற்களாயிருந்தாலும் அவற்றில் நல்ல பொருள்கள் சேர்ந்திருக்குமானால் புகழுள்ள சொற்களேயாம்.

பாயிரம் முற்றும்.

(ஆகவிருத்தம்—16)

## நாட்டுச் சருக்கம்

இண்டை வார்சடை எம்பிராற்கு அன்பராய்
அண்டர் போலும் அறிஞர் சிறந்திட
விண்ட மாமலர் மேவுதன் சோலைசூழ்
தொண்டை நாட்டணி சொல்லத் தொடங்குவாம்.

இண்டை மாலையைத் தரித்த நீண்ட சடையினை உடைய எமது கடவுளாகிய பரமசிவத்துக்கு அன்பர்களாகிய தேவர்களை ஒத்த சான்றோர்கள் நிறைந்திருக்க, மலர்ந்த புட்பங்கள் பொருந்திய குளிர்ச்சியுள்ள சோலைகளால் சூழப்பட்ட, தொண்டை நாட்டின் சிறப்பினை இனிச் சொல்லத் தொடங்குவோம்.

மேலும் நாவினைப் பற்பல
படைப்பினும் விளங்கத்
தாவில் கண்செவி பற்பல
வுறினும் அத்தனி நாட்டு
ஓவி லாவணி சொற்றிடக்
கண்டு கேட்டுருக
யாவரா யினும்இசையுமோ
முழுவதும் இசையா.

வசனிக்கும்படி பொருந்திய நாக்களை அனேகமாகப் படைத்தாலும், பொருள்கள் எல்லாம் நன்றாகத் தெரியும்படி பழுதற்ற அனேகங் கண்களைப் படைத்தாலும், சத்தங்கள் கேட்கும்படி அநேகம் செவிகளைப் படைத்தாலும், அந்த ஒப்பில்லாத நாட்டினுடைய நீங்குதலில்லாத அலங்காரங்களை யெல்லாம் சொல்லவும் காணவும் கேட்டு மனமுருகவும் எவர்களாயினுங் கூடுமோ முழுவதும் கூடாது.

முந்த நாட்டிய அருணையை நினைத்திடின், முயங்கும்
பந்தநாட் டினையொழிந்து அருணாட்டினிற்படர்வார்
எந்தநாட் டினும்இல்ல தோர்அதிசயம் இனையது
அந்தநாட் டினிலுண்டு அதன்பெருமை யாரறிவார்?

முதன்மையாகச் சொல்லப்பட்ட அருணாசலத்தை நினைத்தவர்கள் பாசபந்தத்தைக் கூடிய மாயா பிரபஞ்சத்தை ஒழிந்து மோட்ச நாட்டினிற் சேர்வார்கள். எந்த நாட்டிலும் இல்லாத இப்படிக் கொத்த அற்புதங்கள் அந்தத் தொண்டை நாட்டினில் உண்டு. ஆதலால் அதனுடைய பெருமையை யாவரறியத் தக்கவர்கள்.

பூமகட்கு ஒருகோயி லாய், அருந்தவம் புரியும்
நாமகட்கு ஒருகழகமாய்க், கலையெலாம் நடாத்தச்
சேமமுற் றவராயினுந் தெரிசிக் கின்முத்தி
யாம்வடப் பெயர்வன மும்அந்நாட்டி
லுண்டுஅறையில்

திருமகட்கு ஒப்பற்ற ஆலயமாகியும், அருமையாகிய தவத்தைச் செய்யும் சரசுவதி தேவி சாத்திரங்களை யெல்லாம் ஆராய்ச்சி செய்யக் கல்விச்சாலையாகியும், சிற்றின்பத்தைப் பொருந்தினவர்களாயினும் தரிசித்தால் முத்தி கிடைக்கும்படியான திருவாலங்காடு என்னுந் தலமும், சொல்லுமிடத்து அந்தத் தொண்டை நாட்டில் உண்டு.

சித்தர் கின்னரர்கிம் புருடேசர்கள் சிறந்த
முத்தர் வானவர் மொய்த்துள கயிலைபோல்முன்னம்
அத்தர் வேடனுக்குஅளித்த தென்காளத்தி அருள்
சேர்
நித்தர் தென்கயிலாயம் அந்நாட்டிடை நிகழும்.

சித்தர்கள் கின்னரர் கிம்புருடேசர்கள் சிறப்புற்ற முத்தாத்மாக்கள் தேவர்கள் என்னும் இவர்கள் யாவரும் ஸ்ரீகண்ட மூர்த்தியைத் தரிசிக்கும் பொருட்டு வந்து நெருங்கியிருக்கின்ற கயிலாயகிரி போல்வதாய்ப் பரமசிவம் ஆதியில் வேடுவராகிய கண்ணப்ப சுவாமிகளுக்கு மோட்ச சாம்பிராச்சியம் பிரசாதித்தருளிய ஸ்ரீகாளத்தி மலையாகிய அருட்சத்தி வடிவங் கொண்ட பரமசிவம் வீற்றிருக்கும் தென் கயிலாயமும் அந்தத் தொண்டை நாட்டினிடத்தில் விளங்கிக் கொண்டிருக்கும்.

காணிற் போகமாம் பதமெலாம் வழங்கிடும்கலந்தே
பேணிற் கூறரும்முத்தியை அளித்திடும் பெரிதுஞ்
சேணிற் போய்நிமிர்ந்து அயில்கொடு கந்தவேள்
திகழ்ந்த
வாணிக் கோர்பதி தணிகைமாமலையும் அங்கமரும்.

தரிசன மாத்திரத்தில் போகம் நிறைந்துள்ள சொர்க்க பதவி முதலாகிய பதவிகளைக் கொடுப்பதாயும், அவ்விடத்தில் வாசமாயிருந்து தொண்டு செய்து கொண்டிருந்தால் சொல்லுவதற்கரிய மோட்ச சாம்பிராச்சியத்தைத் தந்தருளுவதாயும், மிகவும் ஆகாயம் வரையில்போய் உயர்ச்சியை உடையதாயும், வேலாயுதம் ஏந்திக் கொண்டு சுப்பிரமணியக் கடவுள் விளங்கிக் கொண்டிருக்கும் உறுதிப் பாட்டினுக்கு இசைந்ததாயும் இருக்கின்ற பதியாகிய திருத்தணிகை மலை என்னும் க்ஷேத்திரமும் அந்தத் தொண்டை நாட்டில் இருக்கின்றது.

ஆன நான்மறை புகழ்தரத் தாண்டவம்ஆடும்
ஞான நாயகன் சுந்தரற் காகவே நயந்த
வானம் ஓங்கிய மகிழடி சேவை யால்மருவும்
மேல் நலந்திகழ் ஒற்றிமாநகர மும்விளங்கும்

பரமசிவம்போல நித்தியத்துவ முள்ளதாகிய நான்கு வேதங்களும் புகழ்ந்து துதி செய்யும்படி பத்மதாண்டவம் செய்தருளும் ஞான சொரூபமுள்ளவராகிய தியாகராஜ சுவாமியார், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பொருட்டு விருப்பமுற்று அமர்ந்த ஆகாயத்து அளவு ஓங்கிய மகிழடி சேவையுடனே பொருந்தி மேன்மையமைந்த எல்லா நன்மைகளும் உடைய திருவொற்றியூர் என்னுந் தலமும் அந்தத் தொண்டை நாட்டில் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

விளங்கும் மூவருந் தேவரும் முனிவரும் வியந்தே
உளங்கொள் அன்புடன் வழுத்துவர் அத் தலத்
துறையிற்
களங்க வல்வினைத் தொகையெலாம் பறித்திடுங்
கணிப்பில்
வளங்கள் ஈந்திடும் திருமுல்லை வாயிலும் மருவும்.

பிரம விஷ்ணு உருத்திரர்கள் என்று சொல்லப்பட்ட மும்மூர்த்திகளும் மற்றுமுள்ள தேவர்களும் முனிவர்களும் மகிழ்ச்சியுற்று உள்ளத்திற்கொண்ட அன்புடனே துதி செய்யத் தக்கதும் அந்தத் தலத்தில் வாசமாயிருந்தால் குற்றமுள்ள வலிய வினைக் கூட்டத்தைத் தீர்க்கத் தக்கதும், அளவில்லாத வளங்களை அருளிச் செய்யத் தக்கதுமாகிய திருமுல்லைவாயில் என்னுந் தலமும் அந்தத் தொண்டை நாட்டில் பொருந்தி யிருக்கின்றது.

—தொடரும்.

# ஆலயத் தத்துவ விளக்கம்

திரு. குமாரசாமி குருக்கள், அச்சுவேலி

நாம் முற்பிறவிகளிலே செய்துகொண்ட தவம் காரணமாக அருமையாகப் பெற்ற மனிதப் பிறவியினல் வரும் பயன், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சிவபுண்ணியங்களைச் செய்து மெய்யன்புடன் சிவபெருமானை வழிபட்டு, பரமபுருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலேயாம். சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் சிவலிங்கம் முதலிய திருமேனியையும், குருவையும் மெய்யடியார் திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும் நாம் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் வெண்ணெய் போல் விளங்கி நிற்பர். மற்றைய இடங்களிலெல்லாம் பாலில் வெண்ணெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினலே நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை, குருலிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடுதல் வேண்டும்.

ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்ருர். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மை ஞானம் பெற்று முத்தியடைவர்.

சிவபெருமானுடைய திருவடிகளை நினையவொட்டாமல் அயர்ப்பிக்கும் மும்மல அழுக்கை ஞான நீரால் கழுவி அயராத அன்பைச் செய்யும் அடியாரோடு கலந்து கூடி மல மயக்கம் நீங்கும்படி அன்பு மிக்குடைய அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்புடையோரே சீவன் முத்தராவரென ஞானசாத்திரங்கள் கூறும் உண்மையாம். ஆலய வழிபாடு செய்து பெரும் பேறெய்திய மார்க்கண்டேய முனிவர் இதற்குச் சான்ருவர்.

ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மாக்களுக்கு உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்துமாறு திருவுளம் கொண்ட உமாதேவியார் காஞ்சிபுரம் முதலிய தலங்களிலும், விநாயகக் கடவுள் திருச்செங்காட்டங்குடி முதலிய தலங்களிலும், சுப்பிரமணியக் கடவுள் வேளூர் முதலிய தலங்களிலும் ஆலயம் அமைத்துப் பூசித்தார்கள். திருநந்தி தேவர், அகத்திய முனிவர், பிரமா, விட்டுணு, நவக்கிரகங்கள் ஏனைய முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள் முதலிய பற்பலரும் ஆலய வழிபாடு செய்து போக மோக்ஷங்களைப் பெற்ருர்கள். அஃறிணைப் பொருளாகிய சம்பாதி, சடாயு, என்னும் பட்சிகளும், சிலந்தி, பாம்பு, யானை முதலியவைகளும் ஆலய வழிபாட்டால் முத்தியடைந்தன.

சைவாலயங்களிலே நித்திய பூசை, பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலிய கிரியைகள் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த சிவாகம விதிப்படியே நடைபெறத் தக்கன. இவையெல்லாம் வேறெந்த நூல்களிலும் விதிக்கப்படவில்லை.

திருக்கோயிலும் ஆங்கே நடைபெறும் பூசை ஆகியனவும்அகவழிபாட்டின்உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாத கருவிகளாயுள்ளன. மலநோயை நீக்கும் வைத்தியநாதராகிய சிவபெருமான், ஆலயங்களையும் பிரதிட்டை பூசை உற்சவாதிகளையும் செய்யுமாறு விதித்திருத்தல். அப்புற வழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அந்தர்யாக பூசையின் உண்மையை உணர்ந்து செய்து, சிவஞானம் மேலிட்ட விடத்துப் பரமுத்தியிற் சேர்ந்தருளுதற் பொருட்டாம். இவ்வுண்மை தேவாலயங்களிலே அமைக்கப்பட்டுள்ள மண்டபங்களாலும், தூபி, பிராகாரம், கோபுரம் முதலியவற்ருலும் உணரப்படும்.

சரீரத்திலே ஆருதாரங்கள் அமைந்திருத்தல் போல, புறத்தே காணப்படும்ஆலயத்திலும் கருப்பகிரகம் முதலிய மண்டபங்கள் ஆருதார சொரூபமாய் விளங்குகின்றன. திருக்கோயிலிலுள்ள ஐந்தாம் ஆவரணத்தால் அன்னமய கோசமும், நான்காம் ஆவரணத்தால் பிராணமய கோசமும், மூன்ரும் ஆவரணத்தால் மனேமயகோசமும், இரண்டாம் ஆவரணத்தால் விஞ்ஞான மய கோசமும், முதலாம் ஆவரணத்தால் ஆனந்த மய கோசமும் அறியப்படும். ஆகலின் பஞ்சாவரணங்களும் பஞ்சகோசங்களைக் குறிப்பனவாம். மூன்று பிராகாரமுள்ள ஆலயங்களில் அவை தூலம், சூக்குமம், காரணம் என்னும் முச்சரீரங்களையும் குறிக்கும். இரண்டு பிராகாரம் உள்ளனவாயின் அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும்.

கோபுரத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிகளும் இறைவனது தூலத் திருமேனியின் ஒவ்வோர் உறுப்பைக் குறிப்பன. கோபுரத்தில் ஈசுவரனது பராக்கிரம லீலா விநோதங்களும், அவரது அதிகாரம் பெற்ற பிரம விட்டுணுவாதியாய தேவர்கள், அட்ட திக்குப் பாலகர், சூரிய சந்திரர் முதலியோர்களது உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனல் பரமேசுவர

னது கடவுட்டன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்பு செய்ய வேதுவாகும்.

தூபியானது பிருதுவி தத்துவம் முதல் முப்பத்தாறு தத்துவங்களாலும் கற்பிக்கப்பட்ட இருதய கமலத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் உண்மையைக் குறிக்கின்றது. தூபியும் கோபுரமும் தூல லிங்கமெனவும், விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்கும லிங்கமெனவும், அதற்கு முன்னுள்ள பலி பீடம் பத்திர லிங்கம் எனவும் படும். இவ்வுண்மை நோக்கித் திருமந்திரம்.

''தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே''

என்று அருளிச் செய்தார்.

சிவலிங்கம், நந்தி, பலிபீடம் என்னும் மூன்றனுள் சிவலிங்கம் பதியும், நந்தி பசுவும், பலிபீடம் பாசமுமாகக் கொள்ளப்படும். ஆலயங்களிலே சிவலிங்கமும் அதற்கு நேராக நந்தியும் பலிபீடமும் இருக்கின்றன. அவை மூன்றும் நேராகத் தாபிக்கப்பட்டிருத்தலால் அவை அநுதிநித்தியமாய் உள்ளன என்னும் உண்மை உணரப்படும்.

**சிவலிங்கம் :**

சிவ சாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம் என்னும் நான்கும் ஒன்றையொன்று பற்றி ஐந்தாவதாகிய கன்ம சாதாக்கியத்தை அடைந்திருத்தலின், இதுமற்றைய சாதாக்கியங்களிலும் விசேடமுடையது. கன்ம சாதாக்கியம் நாத மயமான லிங்கமும், பிந்து மயமான பீடமும் கூடியதாய்ப் பஞ்சகிருத்தியத்தை உடையதாய் இருக்கும். கன்ம சாதாக்கியர் சிவலிங்கமும் பீடமுமாய் இருப்பினும், ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும், பதினைந்து திருக்கண்களுமுடைய தியான ரூபியாய் இருப்பர்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியான பூசா நிமித்தமாக அருவுருவத் திருமேனியைத் தாங்கிய நிலை ஆவுடையாளுடன் கூடிய இலிங்கமாம். இலிங்கத்திலே சிருட்டி காலத்தில் தோற்றமும், சங்கார காலத்தில் ஒடுக்கமுமாம். சங்கார காலத்தில் சமஸ்த சேதனசேதனப் பிரபஞ்சங்களும் ஒடுக்கி, சிருட்டி காலத்தில் அங்ஙனம் உற்பத்தியாகின்றமையால் இலிங்கமெனப்படும் எனச் சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

படைத்தல் முதலியனவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய பரமேசுவரப்பிரபாவமே லிங்கமெனப்படுமெனினும் அமையும். லிங்கமென்னும் சப்தமானது சித்திரித்தல் எனப் பொருள்படுகின்ற ''லிகி'' என்னும் தாதுவினின்றும் பிறந்தமையால் சிவபெருமான் சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களாற் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்றார் என வருணபத்ததி யுடையார் கூறுவர்.

ஞான சத்தியாகிய சிவலிங்கத்தின் கீழ்க் காணப்படும் ஆவுடையாள் கிரியா சத்தியைக் குறிக்கும். பரவெளியைக் குறிக்கும் சிவலிங்கத்திலே எப்பொழுதும் ஓர் அசைவு உண்டு. அதுவே பராசக்தி யாகும். ஆன்மாக்களின் பாசத்தைக் கெடுப்பதற்காக அசைதற் சத்தி லிங்கத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அவ்வசைவு லிங்கத்தில் உண்டென்பதை உணர்த்துவதற்கு ஆவுடையாள் இலிங்கத்தைச் சுற்றிக் கிழடங்கி அமைந்திருக்கின்றது. ஆவுடையாளின் ஒரு பக்கத்திலே நீண்டிருப்பதாகிய கோமுகியானது ஆன்மாக்களைத் திருநோக்கம் செய்கின்ற குறிப்பாக அமைந்திருக்கின்றது. அவ்விலிங்கம் பிரம பாகம், விஷ்ணு பாகம், உருத்திர பாகம் என்னும் மூன்று பாகங்கள் உடையதாயிருக்கும். அவற்றுள் பிரம பாகம் நபுஞ்சகலிங்கமும், விஷ்ணுபாதம் ஸ்த்ரீ லிங்கமும், உருத்திர பாகம் பும்லிங்கமும்ஆகும். ஆண் ரூபம், பெண் ரூபம், நபுஞ்சக ரூபமாய் இருப்பது, அவன், அவள், அதுவாக இருக்கும் உலகத்திலேயுள்ள உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளும் தம்மிடத்திலே தோன்றி நின்றொடுங்குகின்றன என்பதை யுணர்த்துதற்காகும்.

(பிரதிட்டா காலங்களில் முதல் திரிகண்ட நியாசம், மூர்த்தி மூர்த்தீசுவர நியாசம்முதலிய நியாசங்களைச் செய்து மேல் பரிசாகுதி செய்வதும் இப்பாவனை பற்றியதே ஆகும்.)

சிவலிங்கமே பிரணவ முதற் பொருள். இதன் சோதித் தன்மையே அகர, உகர மகரமாயிருக்கும். அகரம் சிவமும், உகரம்சத்தியும், மகரம் கலைவடிவுமாம். நாத விந்துக்கள் அகர உகரங்கள் அடங்கும். அகரம் கண்டமும், உகரம் கோமுகியும், மகரம் வட்டமுமாம். பிரணவம் இலிங்கமுமாயிருக்கும்.

அகார முதலா அனைத்து மாய்நிற்கும்
உகார முதலா உயிர்ப்பெய்தி நிற்கும்
அகார உகார மிரண்டு மறியில்
அகார உகார மிலிங்க மதாமே.

—திருமந்திரம்.

சத்தியும் சிவமுமாய தன்மையிவ்
வுலகமெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு
முணர்குண குணியுமாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ்
வாழ்க்கையெல்லாம்
இத்தையு மறியார் பீடலிங் கத்தினியல்பு
மோரார்.

—சிவஞான சித்தியார்,

லிங்கமென்பது சிவமேயாம். சிவத்துக்குப் பெயராகிய லிங்கமென்னும் பதம் உபசாரத்தால் பக்குவம் நோக்கி ஆன்மாக்களின் தியான பூசா நிமித்தம், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைவம் முதலியனவற்றிற்கும் வழங்கப்படுகின்றது.

**மந்திரத் திருமேனி :**

உலகத்துக்கு முதற் காரணம் சுத்த மாயை, அசுத்த மாயை என்பன. இவற்றுள் மேலாகிய

சுத்த மாயையில் சிவசத்தி சேர்ந்து நிற்றலானும் அச்சுத்த மாயையிலே தோன்றிய காரணத்தினுலும் பயன்கொடுத்தற் பொருட்டுச் சிவசத்தி அதிட்டித்தலானும், பிரதிட்டை அக்கினி காரியம் முதலியவற்ருல் வழிபடுபவர்களுக்குப் போக மோட்சத்தைக் கொடுத்தலானும், ஆகமங்கள் சிவபெருமானுக்கு மந்திரத் திருமேனியை விதந்து கூறுகின்றன. அவற்றுள்ளும் பஞ்சப் பிரம மந்திரமானது மந்திரங்களுக்கு மூலமானதாலும், பிரதம சிருட்டி ஆரம்பத்தில் முதலிற்றேன்றியதாலும், சிவபெருமானுக்குத் திருமேனியாக விதந்தெடுத்துக் கூறியதென அறிக. ஈசானம் முதலிய மந்திரங்கள் சிவபெருமானுக்குச் சிரம், முகம், இருதயம், குய்யம், திருவடிகள் என்பனவாம்.

மந்திர மதனிற்பஞ்சமந்திரம் வடிவமாகத்
தந்திரஞ் சொன்னவாறிங் கென்னெனிற் சாற்றக் கேணீ
முந்திய தோற்றத்தாலு மந்திர மூலத்தாலும்
அந்தமில் சத்தியாதிக் கிசைத்தலு மாகுமன்றே

—சிவஞான சித்தியார்.

சதாசிவ மூர்த்தியினுடைய திருமேனி ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக அறிந்து இரட்சிக்கும் குணமாகிய மந்திரம் ஆகையால் மந்திரரூபமாகிய ஞானசத்தி வித்தியாதேகம் எனப்படும்.

**மூன்று கண்கள் :**

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் அதிட்டிக்கின்றவர் தாம் என்பதையும், காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணுக்கினியம் என்னும் முத்தீ வேள்வியில் அவை யாவும் தம்மிடத்தே பொருந்தியுள்ளன என்பதையும், எல்லாக் கருமங்களையும் அறிந்து செய்யும் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திகளையும் உடையவர் தாமென்பதையும் மூன்று கண்கள் குறிக்கின்றன.

''சுடர்மூன்றுங் கண்மூன்ருக் கொண்டான் முன் காண்''

—அப்பர்.

''முக்கண னென்பது முத்தீ வேள்வியிற்
ருெக்கதென் னிடையென்ப தோர்சுருக்கே''

—பட்டினத்தடிகள்.

''............இவர் தாம்
எல்லாம் மறியுமியல்பது நயனம்''

—சதாசிவரூபம்.

**ஐந்து திருமுகங்கள் :**

பரமசிவனது சுத்த குணங்களாகிய ஈசானம் முதலிய ஐந்தும், கரும சாதாக்கிய ராகிய சதாசிவமூர்த்திக்குத் திருமுகங்களாம்.

ஐந்து நிறங்களையுடைய ஐந்து திருமுகங்களைச் சிவபெருமான் கொண்டது, பஞ்ச கிருத்தியத்துக்குக் காரணரும், பஞ்சகருத்தாக்களை அதிட்டிப்பவரும் தாமென்பதை அறிவித்தற்காகும்.

ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களும், அனுக்கிரகம், மறைத்தல், சங்காரம், காத்தல், படைத்தல் என்னும் ஐந்தொழிலையும் செய்யும் சத்திகளெனத் தத்துவத் திரய நிர்ணயம் செப்புகின்றது.

**திரிசூலம் :**

சிருட்டித் தொழிலுக்குக் காரணமாகிய செனனி, போகங்களில் நியதி செய்வதாகிய ரோதயித்திரி, சங்கார கிருத்தியத்துக்குக் காரணமாகிய ஆரிணி என்னும் முச்சத்தி வடிவவாகிய சூலப்படையைச் சிவபெருமான் ஏந்தியருளியது, முத்தொழிலுக்கும் முதல்வரும், மும்மலங்களை நீக்குபவரும் தாமென்பதை யுணர்த்தும் உண்மையாகும்.

''மூன்று மூர்த்தி யுணின்றியலுந் தொழில்
மூன்று மாயின மூவிலைச் சூலத்தான்''

—அப்பர் சுவாமிகள்,

''கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந் துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகரா—யேற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை''

—திருவாசகம்.

**புன்முறுவல் :**

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவகைத் துயரையுங் கெடுத்தருளுங் காரணமாக இளமையாகிய புன்முறுவலைக் கொண்டருளினர். ''இடர் மூன்றழித்தருளுமிள முறுவன் முகமலரிலங்க'' என்பது சிவதருமோத்தரம். சந்திரன்சர்வஞ்ஞத்துவரூபம், பத்துத் திருக்கரங்கள் பத்துத் திக்குகள் என்றும், திரிசூலம் முக்குணம் என்றும், பரசு சத்தியமென்றும் சொல்லப்படும். வாள் ஈசுவரனுடைய பராக்கிரமமாகும். வச்சிரம் பேதிக்கப்படாத சத்தியாகும். சங்கார சத்தியாகிய அக்கினி பாசங்களைச் சாம்பராக்குவதாகும். நாகத்தின் கெம்பீர வடிவான சத்தி எல்லோரையும் நியமிப்பதாகும். மணியினது ஓசை மந்திர ரூபத்தை அறிவிப்பதாகும். அபயம் சமஸ்த லோகங்களையும் காக்கும் சத்தியாகும் எனக் காமிகாகமத்திலும், கட்டுவாங்கம் பிரதாபமென்றும், அபயம் அனுக்கிரகமென்றும், பாசம் மாயா சொரூபமென்றும், அங்குசம் விவர்ணகுணமென்றும் மணி நாததத்துவ ரூபமென்றும், வாதுளாகமத்திலும் வருவனவற்றால் இவ்வுண்மை தெளியப்படும்.

**சிலம்பும் வீரக்கழலும் :**

சிலம்பையும் வீரக் கழலையுந் தரித்தமை ஆன்மாக்களைச் சோரமாகத் தன்வசப்படுத்துகின்ற முன்னை வினைகளை வென்று பிறவித் துன்பத்தை நீக்குவர் என்பதை உணர்த்துவதற்காகும்.

''வீட்டின்ப
வெள்ளத் தழுத்தியிருந் தாளினுமடியா
ருள்ளத்தினும் பிரியா வொண்சிலம்பும்—கள்ளவினை
வென்றுபிறப் பறுக்கச் சாத்திய வீரக்கழலும்''

—போற்றிப்பஃறொடை

''நெஞ்சலஞ் சலமரும் பிறவிநீடு வினையிற்
சஞ்சலஞ் சலமகன்ற தனதன்பர் குழுவை
அஞ்சலஞ் சலெனுமஞ் சொலென விஞ்சுசரண்மேற்
செஞ்சிலம் பொடுபொலங் கழல்சிலம்ப மிகவே''

—கந்தபுராணம்

சிவபெருமான் இவைகளை அணிந்தருளியமை தனது பிரயோசனங் கருதியன்று. எதற்காக அணிந்தருளினரெனில், ஆன்மாக்கள் அஞ்ஞான வளர்ச்சியினால் தாம் பிரமமென நினைத்து அகந்தைகொண்டு நரகத்திலுழலாது பதியுண்மையறிந்து, தம்மை அடைந்து உய்யும்படி கொண்டருளிய உண்மையே யாகும்.

''ஆதலாற்றனை வியப்பதற் கன்றவை யணிதல்
ஈதலாதொரு திறமுள தியாவரு மெவற்கும்
நாதனேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்
தீதெலாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே''

—கந்தபுராணம்

என்பதனுற் றெளியப்படும்.

**சிவாசனம் :**

பிருதுவி தத்துவ முதல் குடிலா சத்தியந்தமான முப்பத்தாறு தத்துவங்களையும், இருநூற்றிருபத்து நான்கு புவனங்களையும் உறுப்புக்களாக உள்ளதும், அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பதுமாசனம், விமலாசனம் என்னும் பஞ்சாசனங்களையுடையதும் ஆகிய பெருமை வாய்ந்தது சிவமூர்த்திக்குஆசனமாம்.

**விளக்கம் :**

பிருதுவி தத்துவம், தாமரைக் கிழங்கு. அது நிவிர்த்தி கலையால் வியாபிக்கப்பட்டு ஆதார சத்தியின் சிரசிலிருக்கும். சல தத்துவம் கிழங்கை நெகிழ்விக்கும். அக்கினி தத்துவம் ஒன்றுபடுத்தி நீரை இழுக்கும். வாயு தத்துவம் இயக்கிக் கூட்டும். ஆகாச தத்துவம் இடங் கொடுக்கும்.

சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தமென்னும் ஐந்து தத்துவங்கள் தாமரையின் முளையாகும். வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்துத் தத்துவங்களும் நாளத்திலுள்ளாக இருக்கும் ஒன்பது துளை வடிவங்களாகும். மனம், அகங்காரம், புத்தி என்னும் தத்துவங்கள் அகத்தில் நின்று தொழிற்படுத்தும். புத்தியின் பாவாட்டகங்கள் சிம்ஹ வடிவாயிருக்கும். பிரகிருதி தத்துவம், புருட தத்துவம், அராக தத்துவம், வித்தியா தத்துவம், கலா தத்துவம்: நியதி தத்துவம், கால தத்துவம் என்பன தாமரையின் நாள வடிவாகும். இத் தத்துவங்களிலுள்ள புவனங்கள் நாளத்தின்முட்களாகும். அசுத்த மாயா தத்துவம் புறவிதழாகும்.

சுத்த வித்தியா தத்துவத்தில் அட்ட வித்தியேசுவர ரூபங்களாகிய எட்டுத் தளங்கள் இருக்கும். ஈசுவரம், சாதாக்கிய மென்னும் இவ்விரு தத்துவங்களும் அறுபத்து நான்கு கேசர வடிவாயிருக்கும். கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளிலுமுள்ள அறுபத்து நான்கு கேசரங்களில் வாமை முதலிய எட்டுச் சத்திகளிருப்பர்.

சத்தி தத்துவம்அக்கேசரங்களுக்குள்ளாகப் பொருந்திய பொகுட்டு வடிவாம் சிவதத்துவம், ஐம்பது பீச வடிவாயிருக்கும். ஐம்பது வர்ணுத்துவாவும் ஐம்பது பீசங்களுக்கும் அதிதேவதைகளாக இருப்பர். கர்ணிகையின்நடுவில்பிரணவ ரூபமான சத்திமண்டலமிருக்கும். அதில் சிவபெருமான் எழுந்தருளி இருப்பர். இப்படிப் பரமசிவனுக்கு ஆசனமாகிய பதுமத்தை ஆதார சத்திக்கு மேல் பிருதுவி தத்துவ முதல் குடிலை பரியந்தம் வியாபித்துள்ளதாகச் சிந்திக்கவேண்டும். இம்முறை அறிந்து தியானித்துக் கற்பிக்கும் ஆசனமே சிவாசன கற்பனமாகும்.

''பதுமாதனந்
தாணுற வீற்றிருப்பர் சதாசிவர்
தத்துவத் தவிசினு கந்தே''

—சிவதருமோத்தரம்.

**சோடசோபசாரம் :**

ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சன்னிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம் ஐபசமர்ப்பணம், ஆராத்திரிகம் என்பன சோடசோபசாரங்கள்.

**ஆவாகனம் :**

ஆவாகனமானது பூசையின் பொருட்டுச் சிவபெருமானை லிங்கம் முதலியவற்றில் வரவழைத்து அபிமுகமாகச் செய்வதென்னும் பாவனையாகும்.

எங்கும் வியாபித்திருக்கும் கடவுளை ஆவாகனஞ் செய்வது எங்ஙனமெனில், விறகு முழுவதும் நிறைந்திருக்கும் நெருப்பைக் கோலினுற் கடைய அது ஓரிடத்திலே பிரகாசித்தல்போல, எங்கும் நிறைந்திருக்கும் கடவுளைச் சிரத்தையுடன் ஓரிடத்தில் அழைத்து அபிமுகமாகச் செய்வதென்க.

**—தொடரும்**

# நிறைபெரும் புலமையர், மறைமலை அடிகளார்

(நூற்றாண்டு விழாக் கட்டுரை)

ந.ரா. முருகவேள், M. A., M. O. L.

**முன்னுரை :**

மறைமலை அடிகளார் (1876-1950), தமிழகப் புலமைவானில் ஒரு பெரும் ஞானஞாயிறு எனச் சுடர்விட்டுத் திகழ்ந்து வைகியிருந்த, ஒப்புயர்வற்ற பெருஞ்சான்றோர் ஆவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழிகளிலும், ஆழ்ந்து நுணுகி முதிர்ந்த பெரும் புலமை மிக்கவராக மறைமலை அடிகளார் விளங்கியிருந்தார். ''தென்சொற் கடல்கடந்து, வடசொற்கு எல்லை தேர்ந்து, ஆங்கிலத்தின் கரை கண்டவர்'' என நாம் ஒரு வகையில் அடிகளாரைக் குறிப்பிடுதல் பொருந்தும். திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியில் பாடுமாறு போல, ''நாமகள் நலத்தையெல்லாம் நயத்துடன் பருகித் திகழ்ந்தவர்'' அடிகளார் எனலாம்.

''யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமையர்''

எனத் திருமுருகாற்றுப்படையில், ஆசிரியர் நக்கீரனார் பாடிய வரிகள், அடிகளார்க்கு மிகவும் ஏற்புடையனவாகும். சிலப்பதிகாரத்தில் ''இமிழ் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் தமிழ் முழுது அறிந்த தலைமையன்'' என இளங்கோவடிகள் பாடிய வரிகளும், அடிகளார்க்குப் பெரிதும் பொருந்தி நிற்கும்.

**தமிழ் முழுதறிந்த தலைமையர் :**

தமிழ்த் தென்றல் திரு வி. கலியாணசுந்தரனார் அவர்கள், ''மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்; தமிழ் நிலவு; சைவ வான். தமிழே சிவமாகவும், சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகின்றேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞான சம்பந்தர். திருஞானசம்பந்தரிடத்து மறைமலை அடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை. தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு.''

''மறைமலையாரின் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும். அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது; எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது; நூல், பல நூலாசிரியன்மாரை அளித்தது. 'அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்' என்று கூறல் மிகையாகாது'' என்றும்; ''அற்றை நக்கீரனாரும், பிற்றைச் சிவஞான முனிவரும், இற்றை மறைமலை அடிகளார் ஆகத் திரண்டு ஓர் உருக் கொண்டு வந்துள்ளனர்'' என்றும்; வியந்து போற்றிச் சிறப்பிப்பாராயின், மறைமலை அடிகளார் மாட்சிமை எத்தகையதென்று நாம் எண்ணியுணரலாம்.

**தமிழ்த் தாயின் தவப் புதல்வர் :**

நெடிய சிவந்த திருவுருவம். திண்ணிய சிவந்த பொன் மேனி. அழகிய இனிய அறிவு ஒளிவீசும் முகம். சிவம் பழுத்துத் திருநீறு ஒளிரும் நெற்றி. அந் நெற்றியில் அழகிய சந்தன குங்குமத் திலகங்கள். குயிலினும் இனிய மெல்லிய குரல். கல்லாடை புனைந்த கவின்மிகு தோற்றம். பழமையும் புதுமையும் ஒருங்கு விரவிய பண்பு நலம். இவை அனைத்தும் ஒருங்கினிது அமைந்து திகழ்ந்த தோன்றலார் தாம், மும்மொழிப் புலமை வேந்தராகிய மறைமலை அடிகளார்!

தமிழ்த் தாயின் தவப் பெரும் புதல்வராகத் தோன்றியருளிய சான்றோராகிய மறைமலை அடிகளார், திருமந்திர நூல் அருளிச் செய்த, திருமூலர் பெருமானைப் போல,

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்னும் உணர்வும் குறிக்கோளும் உடையவராக விளங்கி, தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும், அரும்பெரும் தொண்டுகள் பலப் பல ஆற்றியுள்ளார்.

**பல்கலைக் குரிசில் :**

தமிழ்ப் புலவர்கள் தொன்றுதொட்டு வாழையடி வாழையாக எத்தனையோ பலர் விளங்கியிருந்தனர் ஆயினும், தமிழ்ப் புலமை உலகில் மறைமலை அடிகள் பலவகைகளில்

தனிப் பெருஞ் சிறப்புற்றவராவர். தமிழில் இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம், கவிதை, உரைநடை, வரலாறு, கல்வெட்டு, உரைவரைதல், மறுப்பெழுதுதல், மொழி பெயர்ப்புச் செய்தல், புதினம் புனைதல், நாடகம் இயற்றல் முதலிய பற்பல துறைகளிலும், அடிகளார் தமது அறிவு இலச்சினைகளைப் பொறித்தருளியுள்ளார். ஆலிவர் கோல்டு ஸ்மித் என்னும் அறிஞரைப் பற்றிச் சாமுவேல் ஜான்ஸன் என்பவர் கூறியதுபோல, அடிகளார் தாம் தொட்ட எந்தத் துறையினையும் அழகு படுத்திப் பொன் வண்ணம் ஆக்கினர். மெக் காலே பிரபுவைப் பற்றி, வில்லியம் மாக்பீஸ் தாக்கரே என்பவர் குறிப்பிடுவது போல, அடிகளாரும் ''ஒரு சிறு சொற்றொடர் அமைப்பதற்குக் குறைந்தது இருபது நூல்களை நுண்ணிதின் ஆராய்ந்தார். இயற்கை எழிற் புனைவு உரையாக ஒரு வரி எழுதுவதற்குக் குறைந்தது நூறு கல் தொலைவு பயணம் செய்தார்'' ("To write a single sentence, he consulted atleast twenty books; to write a line of description, he travelled atleast hundred miles'') என்று நாமும் கூறலாம்.

**ஆராய்ச்சிப் பேரறிஞர் :**

தமிழில் முதன் முதல் இக்கால ஆராய்ச்சி நெறி முறைகளைத் தழுவி, அரிய பெரிய நூல்கள் இயற்றியவர் அடிகளாரே யாவர். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே, அடிகளார் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப் பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி போன்ற ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டிருத்தல், அடிகளாரின் நுண்மாண் நுழைபுலத்தினை விளக்கப் போதியதாகும். அடிகளாரின் ஆராய்ச்சி நூல்களும் கருத்துக்களும், பழமை நலமும், புதுமை எழிலும் பொலிந்து, பயில் வார்க்குப் பெருநலம் பயப்பனவாகும்.

மறைமலை அடிகளார் அஞ்சாநெஞ்சுடைய சிந்தனையாளர் ( Fearless thinker ), மூலமுதல் முன்னோடியான ஆராய்ச்சி அறிஞர் (Original and Pioneer Researcher), முன்னைய பிழைக் கொள்கைகளை கடிந்து களைந்தொழித்தவர் ( Precedent breaker ). அவர்தம் நூல்கள் ஒவ்வொன்றும் ''ஆயிரம் அறிஞர்களைச் சிந்திக்கச் செய்யும் ; பதினாயிரம் நாவலர்களைப் பேசவைக்கும்; குறைந்தது ஒரு நூறாண்டுக் காலம் ஆற்றல் மிக்க எழுத்தாளர்களை எழுது மாறு ஊக்கி இயக்குவிக்கும் என்பது திண்ணம்'' ("His words are sure to set a thousand minds a-thinking; ten thousands a-talking; and atleast a century of able pens a-writing.")

**வடமொழிப் புலமை :**

மறைமலை அடிகளார், தமிழில் எத்துணைப் புலமை உடையவரோ, அத்துணை அளவிற்கு ஒத்த புலமையை, வடமொழி ஆங்கிலம் என்னும் இருபிற பெரு மொழிகளிலும் கூட, உடையவராதலின், தமிழறிஞர் வரிசையில் மட்டும் அடிகளை வைத்துக் கருதுதல் பொருந்தாது.

''நாடன் என்கோ? ஊரன் என்கோ?
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ?
யாங்கனம் மொழிகோ? ஓங்குவாட் கோதையை!
புனவர் தட்டை புடைப்பின், அயலது
இறங்குகதிர் அலமரு கழனியும்,
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ஒருங்கு எழுமே?''

என்று, புறநானூற்றுப் புலவர் ஒருவர், 'சேர அரசனாகிய கோதையின் சிறப்பினை யாங்ஙனம் மொழிகேன்?' என, மருண்டு மயங்கியவாறு போலவே, பல்கலைக் குரிசில் ஆகிய மறைமலை அடிகளாரைத் தமிழ்ப் புலவர் என்பதோ, வட மொழி வல்லவர் என்பதோ, ஆங்கில அறிஞர் என்பதோ, என்னவென்று கூறுவதென்று அறியப் பெறுமல், நாமும் மயங்கித் தயங்க வேண்டும் நிலையில் அடிகள் திகழ்கின்றார். வடமொழியில் உள்ள பல்வேறு வேதம், ஆகமம், உபநிடதம், மிருதி, பிராமணம், இதிகாசம், புராணம் என்னும் பல நூல்களையும், அடிகள் முறையாகக் கற்றுத் துறை போயவர் என்பது, அவர் தம் நூல்கள் பலவற்றிலும் ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பெறும் மேற்கோள்களாலும், மொழி பெயர்ப்புப் பகுதிகளாலும், தெள்ளிதின் விளங்கும்.

வடமொழிப் பெருங் கவிஞராகிய காளி தாசர் எழுதிய சாகுந்தல நாடகத்தின்பால், அடிகளார் கொண்டிருந்த நயப்பும் வியப்பும் எல்லையற்றனவாகும்.

''இன்பொளிர் வேனிற் காலத்
தெழில்மலர் கனிகள் மற்றும்
மன்பெருங் கவர்ச்சி மிக்க
மகிழ்ச்சிநல் விருந்தூண் மண்விண்
என்பவை எலாம்சேர்ந் தொன்றைச்
'சகுந்தலை' எனும்ஓர் பேரால்
நன்றுற நவில்வேன்! யாவும்
தனிஅதில் அடங்கும் நன்றே!''

—தமிழாக்கம், ந.ரா.மு.

என்று, கெத்தே ( Goethe ) என்னும் ஜெர்மானிய நாட்டுப் பெருங்கவிஞர் போற்றியவாறு போலவே, அடிகளும் சாகுந்தலத்தினைப் பெரிதும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து இன்புறுவர். துஷ்யந்தன் சகுந்தலையை முதன் முதலாகக் கண்டு வியந்து காதல் கொண்டு நலம் புனைந்துரைத்ததாகச், சாகுந்தல நாடகத்தில் காளிதாசர் இயற்றியுள்ள அழகிய சுலோகத்தினை,

''மோவா மலரோ? நகங்களை யாத
முழுமுறியோ?
ஆவா கருவி துருவாது பெற்ற
அருமணியோ?

நாவாற் சுவையாப் புதுநறவோ? செய்த
நற்றவங்கள்
தாவாது ஒருங்கு திரண்டு வந்தால்அன்ன
தையலரே!''

என்றும்; சகுந்தலை துஷ்யந்தன்பால் காதல் கொண்டு, தனது உயிரினும் இனிய தோழியர்க்கு, அக்காதல் நிலையினைத் தாமரை இலை ஒன்றில், தன் கைந்நகத்தால் எழுதிக் காட்டியதாகக் காளிதாசர் இயற்றிய சுலோகத்தினை,

''இரக்கமிலா அரசே! நான்
என்செய்வேன்? இரவுபகல்
எரிக்கின்றான் எழிற்காமன்
என்னுடலை; நின்மேலே
பெருக்கின்ற தென்காதல்;
பேதையேன் நின்நெஞ்சம்
இருக்குமாறு உணர்ந்திலேன்;
எனக்கதனை இயம்புதியே''

என்றும் அழகுற மொழிபெயர்த் தருளியிருக்கும் திறம் ஒன்றே, 'ஒரு குழிசிச் சொன்றிக்கு ஓர் அவிழ் பதமாம்' (தாலிபுலாகம்) என்னும் முறைமை பற்றி, அடிகளாரின் அரிய சிறந்த வடமொழிப் புலமையை உணர்ந்து கொள்ளப் போதிய சான்றாகும். **ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள்** அவர்கள், அடிகளாரின் சாகுந்தல நாடக நூலைப் பயின்று சிறந்த ஆய்வுக் கட்டுரை எழுதும் கல்லூரி மாணவர்களுக்குப் பரிசு வழங்குவதற்கு ரூபா ஐயாயிரம் மூலதனம் அமைத்திருத்தல், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரிய செய்தியாகும்.

**ஆங்கிலப் புலமை :**

தமிழறிஞர்கள் வேறு எவர்க்கும் அமையாத, தனிப் பெருஞ் சிறப்பும் வீறும் அடிகளார்க்கு அமைந்தமை, அவர்தம் அளப்பரிய ஆங்கிலப் புலமையின் முதிர்ச்சியேயாகும். தமிழ் அறியாதாரும், தம் தமிழ் நூல்களின் அருமை நுண்மைகளை உணர்ந்து கொள்ளுதற் பொருட்டுத் தம் நூல்கள் பலவற்றிற்கு, ஆங்கிலத்தில் விரிந்து பரந்த சிறந்த முகவுரைகள் வரைந்திருப்பதும், தம் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஏராளமான அரிய பெரிய ஆங்கில நூல்களை மேற்கோளாக எடுத்தாண்டிருப்பதும்,. அடிகளின் அரிய சிறந்த ஆங்கிலப் புலமையினைப் பாங்குற உணர்த்தும். தமிழில் தாம் எழுதும் சிறந்துயர்ந்த செவ்விய நடைநலம் சிறிதும் குன்றாதவாறு, அடிகளார் ஆங்கிலத்திலும் எழுத வல்லவராவர். ஆங்கிலக் கவிஞருள் தலைசிறந்தவரான செகப்பிரியரின் நாடகங்கள் பலவற்றையும், அவற்றிற்கு அறிஞர்கள் பற்பலர் செய்துள்ள அரிய நுண்ணிய ஆராய்ச்சி உரைகளையும், தாமே மிக முயன்று அழுந்திப் பயின்றவாற்றால், தாம் பெற்ற அறிவின் திறனைச் சாகுந்தல நாடக ஆராய்ச்சியில், அடிகள்விளங்கக் காட்டியிருக்கின்றார் !* ஆங்கிலத்தில் உரை நடை எழுதுதலில் வல்லவராய்ப் பெயர் பெற்றுத் திகழ்ந்திருந்த ஜோசப் அடிசன் ( Joseph Addison ) என்பவரின் கட்டுரைகளைச் ''சிந்தனைக் கட்டுரைகள்'' என்னும் பெயரால், தீவிய செந்தமிழில் இயற்கை ஓவியக் காட்சிகள் ஆங்காங்கே அழகுற மிளிர்ந்து அமைய, அடிகளார் தெளிவுற மொழிபெயர்த்திருக்கின்றனர். இன்னோரனைய நூல்களெல்லாம், மொழிபெயர்க்கும் திறம் இனையதென, நம்மனோர்க்கு விழுமிதின் உணர்த்தும் மேம்பாடு உடையனவாகும். மரணத்தின் பின் மனிதர் நிலை, மனித வசியம், ( Personal Magnetism ), யோக நித்திரை ( Hypnotic Sleep, Clairvoyance ), தொலைவில் உணர்தல் ( Telepathy ), மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை, பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், என்பன போன்ற பேராராய்ச்சிப் பெரும்பயன் நூல்கள், அடிகளார் தாமே அவற்றின் முன்னுரைகள் சிலவற்றில் குறித்திருப்பது போல, இதற்கு முன்பு வேறெவராலும் எழுதப் படாமல், அடிகள் ஒருவராலேயே தமிழில் முதன் முதற் புதிய முறையில் விரிவாகவும், திருத்தமாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்ட விழுமிய நூல்களாகும். The Conception of God as Rudra, Samkhya and Saiva Siddhanta, Ancient and Modern Tamil Poets, Who the Originators of yoga, Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge முதலிய ஆங்கில நூல்களும் பிறவும், அடிகளாரின் ஆங்கில மொழிப் புலமையினைச் செவ்விதின் உணர்த்தும். அறிவுக் கடல் (The Ocean of Wisdom), கீழ்த்திசை நாட்டுச் சித்த நெறிக்குயில் (Oriental Mystic Myna) என்னும் ஆங்கிலத் திங்கள் இதழ்களையும், அடிகளார் சில ஆண்டுகள் நடத்தி வந்துள்ளார்.

**உரை நடை :**

தமிழ் மொழியில் தொன்றுதொட்டு எல்லாக் கலை நூல்களும், பெரும்பாலும் கவிதை நடையிலேயே அமைந்து வந்துள்ளன. அதனால் தமிழில் போதிய அளவு உரைநடை வளரவில்லை என்னும் ஒரு குறைபாடு இருந்து வந்தது. அதனை மாற்றிப் போக்கியருளிய சிறப்பு, மறைமலை அடிகளார்க்கு உண்டு. தூய இனிய அரிய சிறந்த இலக்கியச் செந்தமிழ் நடையில் தேன் ஊற்றொழுக்கெனவும், அமிழ்த வெள்ளம் பெருக்கெடுத்தாலெனவும், பயில்வார் உள்ள

---

* "(1) " I have been reading critically not only the plays of Kalidasa and Shakespeare, but also the Commentaries on their plays........especially the very interesting and illuminating shakespearean Commentaries produced by Ulrici, Gervinus, Schlegel, Swinburne, Dowden, Brooke, Bradley, Symons, Hudson, Moulton, Corson, Brandes and others.

In this life no one can experience a pleasure comparable in its height, amount and intensity to the intellectual and aesthetic pleasure which a study of these celebrated commentaries afford. The pleasure given by these is equal only to that yielded by the plays themselves, nay, I may venture to say that it is even a degree higher than that.................."

*—Maraimalai Adigal*

மெல்லாம் கொள்ளை கொள்ளும் பான்மையில், இழுமெனும் மொழியான் விழுமியது பயின்று, அழகிய ஓசை நலம் அமையும்படி, தடைவிடை கிளந்து தருக்க நெறிமுறைகள் பிறழாமல், தாமே புதிது படைத்துப் புணர்க்கும் முழு மணி அனைய விழுமிய தனித் தமிழ்க் கலைச் சொற்களும், குறியீடுகளும் சொற்றொடர்களும் விரவி, அரும்பெறல் ஆராய்ச்சிக் கருத்துக்கள் பொதுள, இடையிடையே சான்றோர்களின் முதுமொழிகளை மடுத்து, அழகுற எழுதப்பெறும் அடிகளின் உரைநடை அழகின் அருமையையும் இனிமையையும் என்னென்பது! பரிமேலழகரின் அரிய உரைநடை இனிமையும், நக்கீரரின் தருக்க நெறி பிறழாத் தடைவிடை நலமும், சேனாவரையரின் கருத்துத் திட்ப நுட்பமும், சிவஞான முனிவரரின் சொற்றொடர் நீட்சியும் மறுப்புரை மாட்சியும், பிறவுமெல்லாம் ஒருங்கு கலந்து இயைந்து, சிறந்துயர்ந்த செந்தமிழ் உரைநடை எழுதும் திறனுடையர் அடிகள். தமிழ்மொழி இனிமை நலம் வாய்ந்தது என்னும் உண்மையினை, அடிகளாரின் அழகிய உரைநடையைப் பயில்வதனால், யாவரும் செவ்விதிற்றெளியலாம். அடிகளாரின் உரைநடையைச் சுவைத்தவர்கள், ''இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்றாற் போன்ற, ஒரு வகை யுணர்வு எய்தப் பெறுவர் எனலாம். தமிழில் உரைநடை அமைப்பிற்கும், வளர்ச்சிக்கும், அடிகள் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியதாகும்.

**சைவ சித்தாந்தம் :**

மறைமலை அடிகளார்க்கு உரிய மாட்சி மிக்க சிறப்பியல்புகள் பலவற்றுள், அவர் புரிந்துள்ள சமயப் பெருந்தொண்டு, தலைசிறந்ததொன்றாகும். அடிகளார் வெறும் தமிழ்ப் புலவர் மட்டும் அல்லர். மிகச் சிறந்த சமயப் பெருஞ் சான்றோரும் ஆவர். சமய உணர்வும், நம்பிக்கையும், ஆராய்ச்சியும், பண்பாடுகளும் வளர்வதற்கு, அடிகளார் தம் வாழ்நாள் முழுவதும் அளப்பருந் தொண்டுகள் ஆற்றியுள்ளார். அவர்தம் பேச்சும் மூச்சும், எழுத்தும் செயலும், வாழ்வுமெல்லாம், சமய வளர்ச்சிக்குப் பெருந் துணை புரிந்துள்ளன! அவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றிலும் சமய நறுமணம் கமழும். கடவுள் நம்பிக்கையும், வழிபாடும் மிக மிக இன்றியமையாதன என்று, அடிகள் தம் நூல்களில் ஆங்காங்கு விவரித்து எழுதி வற்புறுத்திச் செல்வர்.*

நம் இந்து சமயத்தை மட்டுமே யன்றி, இசுலாமியம், கிறித்தவம், சமணம், பௌத்தம் முதலிய சமய நூல்களையும், அடிகளார் நன்கு பயின்று போற்றியவராவர். ஒரு சிலர் 'எம் மதமும் சம்மதம்' என்று வாயளவிற் கூறி, எம்மதத்திலும் சம்மதமும் நம்பிக்கையுமின்றி ஒழுகுதலையே, தம் மதமாகக் கடைப்பிடிப்பர். அடிகளார் அத்தகையவரல்லர். எல்லாச் சமயங்களையும், சமய நூல்களையும் பயின்று உணர்ந்து, போற்றிச் சமயக் காழ்ப்பு அற்ற சான்றோராக, அடிகளார் விளங்கியிருந்தார். எனினும், அடிகளார் நம் தமிழகத்திற்குரியதும், தாம் தோன்றியதும் ஆகிய சைவ சமயத்தின்பால், எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். சைவம் தமிழ் என்னும் இரண்டும், அடிகளாரின் இரு கண்களாய், அவர்தம் பேச்சும் மூச்சுமாக விளங்கின எனலாம்.

அடிகளார் நம் தென்றமிழ்நாடு முழுவதும் மட்டுமின்றி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்கும் சென்று ஆங்காங்கே செந்தமிழ்ச் சொன்மாரி பொழிந்து, தமிழ் மக்களுக்கு உணர்ச்சியும் விழிப்பும் ஊட்டி, தமிழ்ப் பயிர் செழித்தோங்கச் செய்ததோடு, தாம் துறவு நிலை புகுந்த சில நாட்களுக்கெல்லாம் (1911), வடநாடு முழுவதும் சென்று சுற்றி, கல்கத்தா, காசி, ஹரித்துவாரம், துரோணாசிரமம், தில்லி, மதுரா, பம்பாய், செகந்திராபாத் முதலான பற்பல நகரங்களில் நிகழ்ந்த கீழ்த் திசைக் கலை மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டு, ஆங்கிலத்தில் விரிவுரைகள் நிகழ்த்தி, ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் முதலிய சமய அமைப்புக்களைச் சேர்ந்த மக்கள் வியப்பும் நயப்பும் மயக்கும் மிக எய்தும் வண்ணம், சைவ சித்தாந்தத் தத்துவத்தின் மேன்மையும், தமிழ் மொழியின் சிறப்பும் விளங்குமாறு, விரிவுரைகள் நிகழ்த்திப் போந்துள்ளார். சைவசித்தாந்த ஞானபோதம், சிவஞான போத ஆராய்ச்சி, பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், தமிழர் மதம் போன்ற அரும் பெறல் ஆராய்ச்சிப் பெரு நூல்கள், அடிகளார் ஆங்காங்கு அவ்வப்பொழுது நிகழ்த்திய விரிவுரைகளின் விளைவே யாகும்.

பௌராணிக நெறிச் சூழல்களிலும், சமய தத்துவ வாத பூசல்களிலும், சாதி குலச் சழக்குகளிலும் தட்டுணுப்புப் பட்டுத் தடுமாறிக் கிடந்து வந்த சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினை, அறிவியல் நெறியின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கிப் பரப்புதற்கு முனைந்தவர் மறைமலை அடிகளாரே யாவர். ''மெய்ப்பொருள் நூற்றுறையிலும், இயற்கைப் பொருள் நூற் றுறையிலும், அண்மைக்காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ள மேலைநாட்டு முடிபுகள் யாவும், வேறு பிற எந்தப் பழைய அல்லது புதிய சமயத்துக்கோ, மெய்ப்பொருள் நூற் கொள்கைக்கோ உரியன அல்லாமல், சைவ சித்தாந்தம் ஒன்றிற்கே உரிய அடிப்படைக் கொள்கைகள் எல்லாவற்றின் உண்மையையும், உயர்வையும் மெய்ப்பித்து நிறுவுவதற்குப் பல வகைகளிலும் முழுவதாக ஒத்து நின்று துணையாகி அரண் செய்கின்றன''. ''சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கைகள், ஜான் ஸ்டுவர்ட் மில், ஜேம்ஸ் மார்ட்டின் யூ, வில்லியம் ஜேம்ஸ், எஃப்.சி.எஸ். ஷில்லர், ஜேம்ஸ் வார்ட், பெர்க்ஸன், ஈக்கன், ஹென்றி டிரம் மாண்ட், ஜேம்ஸ் சல்லி முதலிய தற்கால

---

* "Even though the following work gives an elaborate treatment to health-subjects, yet it is not done in the cold light of purposeless materialistic science. On the other hand, ideas common to all religions and philosophies are brought in to enliven and ennoble the subject and I trust that, after reading it once, one would find his or her mind greatly refreshed and exalted."

—*Maraimalai Adigal.*

ஐரோப்பிய அமெரிக்க நாட்டுச் சிந்தனையாளரின் கருத்துக்களுக்குப் பெரிதும் ஒத்து விளங்குகின்றன''* என்பது, அடிகளார் தம் நூல்கள் பலவற்றிலும், ஆங்காங்கே வற்புறுத்தி விளக்கும் உண்மையாகும்.

சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினை வளர்த்துப் பரப்புவதற்காக, வட இந்தியாவில் உள்ள ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் என்பவற்றைப் போல, நம் தமிழ் நாட்டிலும், சைவ சித்தாந்த மகா சமாஜம் என்னும் மாபெரும் சமயப் பேரவையினை, அடிகளார், திருப்பாதிரிப் புலியூர் சிவத்திரு ஞானியார் சுவாமிகள் முன்னிலையில், 1905ஆம் ஆண்டு தொடங்கினார். அஃது இன்றளவும் நின்று நிலவி வளர்ந்தோங்கி, சைவத்திற்கும் தமிழிற்கும் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக அரும்பெரும் தொண்டுகள் ஆற்றி வருகின்றது.

**நல்ல தமிழ்நடை இயக்கம் :**

மறைமலை அடிகளார், தமிழ் மொழிக்குப் புரிந்துள்ள சிறந்த தொண்டுகளுள் ஒன்று, அவர் தம் தனித்தமிழ் இயக்கமாகும். தனித்தமிழ் இயக்கம் எந்தப் பிறமொழியின் மீதும் பகைமை உணர்ச்சி கொண்டதன்று. தமிழ் மொழியைச் சிதைத்துச் சீரழிக்காமல், தூய இனிய நல்ல நிலையில் போற்றிக் காப்பாற்றுதல் வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். ''இஞ்ஞான்று பலவகைப்பட்ட நூல்கள் எழுதுவோரும், நூல்கட்கு உரை வகுப்போரும், வடசொற்களையும், பிற சொற்களையும் தாம் எழுதும் தமிழில் ஒரு வரைதுறையின்றி, மிகவும் கொச்சை நடைப்பட நுழைத்துப் புகுத்தி, அவ்வாற்றால் தமிழின் தீஞ்சுவையையும், அஃகா வளத்தையும், கலங்காத் தூய்மையையும், பழுதுபடுத்தி அதனை அழித்து வருதல் கண்டும்; பொருள்களைத் தெரித்தற்கு வேண்டிய அளவு சொற்கள் இல்லாமல் பலவகைக் குறைபாடுகள் உடையதாக இருக்கும் ஆங்கில மொழியைப் பிறமொழிக் கலப்பில்லாமல் வழங்குவது பெரிதும் வருத்தமே என்றாலும், அம்மொழிக்குரிய ஆங்கில நன்மக்கள் இயன்ற மட்டும் அதனைத் தூய்மையாகவே வழங்க வேண்டுமென்று கட்டுரைத்து வருதல் கண்டும்; மற்றை மொழியின் உதவியை வேண்டாமல் தனித்து இயங்கவல்ல சொல் வளமும், பொருட் செழுமையும் உடைய நம் செந்தமிழ் மொழியை, அதற்கே உரிய சொற்களால் வழங்காமல், அயல் மொழிச் சொற்களை அதன் இடையிடையே நுழைத்து, அதன் அழகையும் வலிமையையும் சிதைத்தல் பெரியதொரு குற்றமாகும்'' என்பது அடிகளார் கருத்து. ''ஆங்கிலத்தில் பேசினாலும், தமிழில் பேசினாலும், அல்லது வேறெந்த மொழியில் பேசினாலும், நம்முடைய எண்ணங்கள் அம்மொழியிற் பிறந்து வளர்ந்த மக்கள் அனைவருக்கும் தெளிவாகப் புரியும்படி, எளிய ஆனால் தூய நடையில் பேசுதல் வேண்டுமேயன்றி, அதன்கண் பல்வேறு மொழிகளின் கொச்சை நடைக் கலவைச் சொற்களைக் கொணர்ந்து நுழைத்து, அம்மொழியின் அழகையும் இயல்பையும் சிதைத்துச் சீரழித்தல் கூடாது'' † என்பது, அடிகளாரின் கொள்கை. நடுவு நிலையுடைய நல்லறிஞர்கள் அனைவரும் இதனை இகழாது ஏற்பர் என்பது திண்ணம்.

தமிழ் மொழியானது, இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், அண்மைக் காலத்தில் தோன்றிய ஒரு சில புதின ஆசிரியர்களால், பெரிதும் சிதைந்து சீரழிந்து ஒருவகைக் கலவைக் கொச்சைநடைக்கு இழிந்து கொண்டிருந்தது. புதினங்கள் என்ற பெயரால், இழிந்த கருத்தும், இழிந்த நடையும் கொண்ட, பலவகை இழிந்த கதைநூல்கள் தோன்றலாயின. புற்றீசல் எனப் பெருகிய அப்புதினக் கதை நூல்களால், தமிழ் நடை பெரிதும் சிதைந்து வந்தது ! ||

அவற்றின் தீய விளைவுகளைத் தடுத்து நிறுத்தி நம் தமிழ்மொழிக்கு அழகும் ஆக்கமும் பெருகி ஓங்கும் வகையில், மறைமலை அடிகளார் புதினத் துறையிலும் ஒருவகைப் புதுமையும் புரட்சியும் தோற்றுவித்து, குமுதவல்லி அல்லது நாகநாட்டு அரசி என்னும் மொழிபெயர்ப்புப் புதின நூலையும், கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் இனிய புதின நூலினையும் இயற்றியருளினார். தனித்தமிழ் இயக்கத்திற்கும், புதினக்கலை நூல் வளர்ச்சிக்கும், இந்நூல்களால் விளைந்த நலங்கள் பலப்பல. அடிகளாரின் கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி என்னும் புதின நூல்களைத் தம் இளமையிற் படித்ததின் பயனாகவே, தமக்குப் புதினக் கதை நூல்கள் எழுதுதலில் ஆர்வத் துடிப்பு உண்டாயிற்று என்று, அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும், ஒரு சமயம் குறிப்பிட்டார்கள் என்றால், அந்நூல்களின் அருமைபெருமைகளை யாவரும் இனிதுணரலாம்.

**சீர்திருத்தச் செம்மல் :**

ஒரு காலத்தில் தமிழ் அறிஞர்கள் என்றால், பெரும்பாலும் ஏளனம் செய்தற்குரியவராகவே இருந்து வந்தனர். தமிழறிஞர்களில் பெரும்

* "The recent developments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to Saiva Siddhantha but not to any other religion or philosophy, ancient or modern.... The fundamental and most important principles of the Saiva Siddhantha, bear close resemblance to modern European and American thought as developed by John Stuart Mill, James Martineau, William James, F. C. S. Schiller, James Ward, Bergson, Eucken, Henry Drummond, James Sully and others."

† "Whether you speak English, or whether you speak Tamil or any other language, you must learn to use it in such a simple but chaste manner, without making abominable mongrel sort of Colloquial and ungrammatical tit-bit words of mixture of different languages, so as to make your ideas quite unintelligible to the people who are born and bred in that languages."

*—Maraimalai Adigal.*

|| "In most of the Tamil novels that I have come across, I find neither plot nor character delineation, neither a representation of life nor a chaste and felicitous diction of language. The story turns chiefly upon love-passion—the love in its most degraded and gross earthly form."

*—Maraimalai Adigal.*

பாலோர் பழமையையே பெரிதும் போற்றி, எப்புதுமையையும் இகழும் இயல்பினராக இருந்துவந்தனர். ஆனால் அடிகளாரோ, ''தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா : இன்று தோன்றுவன எனும் எவையும் தீதாகா'' என உணர்ந்து, முன்னைப் பழமைக்கும் பழமையினராய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியராய், நல்லதன் நலனும், தீயதன் தீமையும் திறன்தெளிந்து ஆராய்ந்து கடைப்பிடிக்கும் சால்பு உடையவராகத் திகழ்ந்தார். சாதிச் செருக்கு, சமயக் காழ்ப்பு, மூடப்பழக்க வழக்கங்கள் முதலியனவற்றை ஒழித்து, நல்ல பகுத்தறிவுக் கொள்கையும், சீர்திருத்தச் செந்நெறியும், அறிவியல் நெறிப்போக்கும், ஆராய்ச்சி மனப்பான்மையும், மக்களிடையில் வளர்வதற்கு அடிகளாரின் நூல்கள் பெரிதும் துணை புரிந்துள்ளன. அடிகளார் ஆழ்ந்த கடவுட் பற்றுடையவராயினும், கடவுளின் பெயரால் நிலவிவரும் மூடப் பழக்கவழக்கங்களைப் பெரிதும் கடிந்து ஒதுக்கும் இயல்பினர். கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, **சாதி வேற்றுமையும் போலிச்சைவரும், பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், சீர்திருத்தக்குறிப்புக்கள், தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும்** முதலிய நூல்கள், அடிகளின் சிறந்த சீர்திருத்தச் செந்நெறியினை விளக்கும். அண்மைக் காலம் வரையில் சைவர்களுக்குள்ளேயே எத்தனையோ பல சாதி குலப்பிரிவுகள் மிகுதியாக இருந்து வந்தன. சைவர்களுக்கிடையில் சமய உணர்வைக்காட்டிலும், சாதி உணர்வே பெரிதும் தலை எடுத்தோங்கி நின்றிருந்தது. அந்நிலையில்,

''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்''

என்று திருநாவுக்கரசரைப் போல அறைகூவி, சாதி வேற்றுமைச் சழக்கினைக் கடிந்து, மக்கள் எல்லோரும் இறைவனின் புதல்வர்களாய் அன்பும் ஒற்றுமையும் கொண்டு வாழ்தல் வேண்டும் என்பதனை, அடிகளார் பெரிதும் வற்புறுத்தி வந்தார்.

ஒரு காலத்தில், சைவவுலகில், திருவாசகத்திற்கு உரைவரைதல் கூடாது என்னும் ஒரு வகைக் குருட்டுக் கொள்கை நிலவி வந்தது. 1921ஆம் ஆண்டில், அன்பர்கள் சிலர் வேண்டிக் கொண்டபடி, திருவாசகத்திற்கு அடிகள் உரை எழுத முற்பட்டார். அப்போது அதனை எதிர்த்து ''திருவாசக வேதாசல விரிவுரை மறுப்பு'' எனச் சைவர்கள் பலர், மறுப்பு நூல்கள் வெளியிட்டுப் பூசல்கள் விளைவித்தனர். அவற்றிற்கெல்லாம் அடிகளார் சிறிதும் அஞ்சிற்றிலர். அதன் பயனாகவே, இன்று திருவாசகத்திற்குப் பல உரை நூல்கள் வெளிவந்துள்ளன. ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட அடிகளார் எழுதியுள்ள '' **மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்** '' என்னும் நூல், ஒருபெரும் ஆராய்ச்சிக் கருவூலம் ஆகும். அந்த ஒரு நூலைப் பயில்வதன் மூலமே, நாம் எத்தனையோ பல நூல்களைப் பயின்ற அறிவும் தெளிவும் பெறலாம்.

**மாணவ மணிகள் :**

ஒரு சிறந்த ஆசிரியரின் பெருமை, அவர்பால் பயின்று அறிவு நலம் பெற்று, உலகம் புகழத் தக்க நிலையில் உயர்ந்தோங்கி விளங்கும் மாணவர்களின் மாட்சிமையைக் கொண்டு, அளவிட்டு அறியப்பெறும். அந்நிலையிலும், அடிகளார் ஒப்புயர்வற்ற அரும்பெரும் சான்றோராகத் திகழ்கின்றார். அவர்பால் கற்றுப் பயின்று பழகி அறிவாற்றலில் சிறந்தோங்கித் திகழ்ந்து புகழ் எய்தியிருந்த மாணவர்கள் பற்பலராவர். திருவாளர்கள் நாவலர் ச. சோமசுந்தரபாரதியார், திரு வி. கலியாணசுந்தரனார், தணிகை மணி இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப்பிள்ளை, திருப்புகழ்மணி டி.எம். கிருட்டிணசாமி ஐயர், மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் டாக்டர் பி. சுப்பராயன், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், திவான்பகதூர் ஆர். வி. கிருட்டின ஐயர், இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை, இந்திய விடுதலை இயக்கச் சான்றோர், சி. என். முத்துரங்க முதலியார், பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார், ஆசிரியர் இளவழகனார், நாரண துரைக்கண்ணனார் முதலிய எத்துணையோ பலர், அடிகளிடம் தமிழ் பயின்று சிறந்த பெருமக்களாவர்.

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

அடிகளார், ''கற்றவர் பயிலும் நாகைக் காரோணம்'' எனத் திருநாவுக்கரசரால் புகழப்பெற்ற நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள, காடம்பாடி (காடவர்கோன்பாடி) என்னும் சிற்றூரில், சோழியச் சைவ வேளாளர் குலத்தில், சொக்கநாத பிள்ளை என்னும் தந்தையாருக்கும், சின்னம்மையார் என்னும் தாயாருக்கும் மைந்தராகத் தோன்றினார். முதலில் மகப்பேறு இன்றியிருந்த அவர்கள், ஒரு துறவியார் பணித்தபடி, சென்னைக்கு அணித்தேயுள்ள திருக்கழுக்குன்றம் என்னும் சிவத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து, மலைவலம் புரிந்து வழிபட்டதன் பயனாக, அடிகளார் அவர்களுக்கு மைந்தராகத் தோன்றினார். ஆதலின் திருக்கழுக்குன்றத்து இறைவனின் நினைவாக, இவருக்குத் தாய் தந்தையர்கள் வேதாசலம் எனப் பெயரிட்டனர். இப்பெயரே பிற்றை நாளில், அடிகள் துறவறம் பூண்டபொழுது, சுவாமி வேதாசலம் எனவும், தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்த பொழுது மறைமலை அடிகள் எனவும் வழங்குவதாயிற்று. அடிகளார் தம் இளமைக் காலத்தில் நாகை வெசுலியன் கிறித்தவ உயர்நிலைப்பள்ளியில் பயின்று வந்தார். பின்னர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவராய், நாகையில் வாழ்ந்திருந்த புத்தகக் கடை வே. நாராயணசாமி பிள்ளையிடம் தமிழ் நூல்கள் பலப்பல பயின்றார். பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களும், இவ்வாசிரியரிடமே தம் இளமையில் கல்வி பயின்றார். இதனால் அடிகளார்க்கும், சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பும் நட்பும் ஏற்பட்டது. மேலும் அந்நாளில் 'சைவசித்தாந்த சண்ட மாருதம்' எனப் பெரும்புகழ் பெற்று விளங்கியிருந்த சென்னை, சூளை ஸ்ரீலஸ்ரீ சோம

சுந்தர நாயகர் அவர்களின் அரிய தொடர்பும் அடிகளார்க்கு இளமையிலேயே இயல்பாக வாய்த்தது. ஸ்ரீலஸ்ரீ நாயகரவர்களின் அரும் பெரும் உதவியினுலேயே, அடிகளார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாள ராகும் பேறு பெற்ருர். அப்போது இவருடன் இவருக்கு மூத்த நிலையில் உடனிருந்து பணி யாற்றியவர், பரிதிமாற் கலைஞர் என்னும் சூரிய நாராயண சாஸ்திரியார் ஆவர்.

சோமசுந்தரநாயகரவர்களின் உதவியால் இளமையிலேயே இவர் பற்பல சமயவாத நூல்களை எழுதி வெளியிட்டார். அவற்றுள் மெய்கண்ட சிவதோஷண பரிகாரம் என்பது குறிப்பிடத் தக்கதாகும். துகளறுபோதம் என்னும் சைவசித்தாந்த சாத்திர நூலுக்கும், திரு. சோமசுந்தரநாயகர் அவர்கள் பணித்தபடி ஓர் அரிய விரிவுரையை வரைந்துள்ளார். அது மாதவச் சிவஞானசுவாமிகளின் உரையினை ஒத்துள்ளது என்று நாயகர் அவர்களால் பெரிதும் புகழப் பெற்றது. அடிகளார் கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றுவதற்காகச் சென்னை வந்த சில ஆண்டுகள், கிழமைதோறும் திருவொற்றியூர்க்குச் சென்று வழிபட்டு வந் தார். ஒரு சமயம் அவர்க்கு நேர்ந்த வயிற்று வலி தீரும்பொருட்டு, நேர்ந்துகொண்டு, திரு வொற்றி முருகர் மும்மணிக்கோவை என்னும் சிறந்த கவிதை நூலைப் பாடினர். அரசஞ் சண்முகனர் போன்ற அந்நாளைய பெரும்புலவர் கள், அந்நூலின் சிறப்பினை விதந்து வியந்து போற்றிப் புகழ்ந்தனர்.

தமது ஆசிரியராகிய சோமசுந்தர நாயகர் மறைந்தபொழுது, 'சோமசுந்தரக் காஞ்சி', 'சோமசுந்தரநாயகர் வரலாறு', 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' முதலிய சிறந்த நூல்கள், அடிக ளாரால் இயற்றப் பெற்றன. கிறித்தவக் கல் லூரியில் *1898* முதல் *1911* வரையில் பதின் மூன்று ஆண்டுகள் அடிகளார் தமிழ்ப் பணியாற் றினர். கல்லூரி மாணவர்க்குத் தாய்மொழிப் பாடம் வேண்டுவதில்லை என அப்பொழுதிருந்த சென்னைப் பல்கலைக்கழக ஆட்சியாளர்கள் முடிவுசெய்தனர். அதன் பயனுகத் தமிழ் அறிஞர் பலர் வேலை வாய்ப்பை இழந்தனர். அடிக ளார்க்கும் அந்நிலை ஏற்பட்டது. எனினும் ஆங்கிலம் தமிழ் வடமொழிஎன்னும் மும்மொழி களிலும் சிறந்த புலமை பெற்றிருந்ததனுல், உயரிய பதவிகள் பல அடிகளாரைத் தேடி வந்தன. ஆனுல் அவற்றையெல்லாம் ஏற்காமல், அடிகள் தமிழ்ப்பணியும் சமயப்பணியுமே ஆற்றி வர விரும்பினர். திருமுருகன் அச்சுக் கூடம் ஒன்று நிறுவினர். ஞானசாகரம் என்னும் திங்கள் இத்ழினைத் தொடங்கி நடத்தினர். அதன் வாயிலாகவே அடிகளாரின் நூல்கள் பலவும் வெளிவரலாயின.

இளமையிலேயே தந்தையை இழந்த அடி களார், தம் தாயாரின் வேண்டுகோட்படி, தமது மாமன்மகள் சௌந்தரவல்லி என்னும் அம்மையாரை மணந்து, இல்லற வாழ்வு மேற் கொண்டார். தமக்குப் பிறந்த புதல்வர்கள் நால்வருக்கும், சைவசமய குரவர்களாகிய நால்வரின் பெயரையே வழங்கினர். தமது புதல்வியர் இருவருள் ஒருவருக்கு நாகப்பட்டி னத்து இறைவியின் நினைவாக நீலாம்பிகை என்றும், திருக்கழுக்குன்றத்து இறைவியின் நினைவாகத் திரிபுரசுந்தரி என்றும் பெயரிட் டார். தமது மற்ருெரு புதல்வனுக்குத் தமது வழிபடு கடவுளாகிய அம்பலவாணரின் பெயரை அமைத்தார். *1911*-ஆம் ஆண்டு முதல் சென்னைக்கு அருகேயுள்ள பல்லவபுரத்தில் தமக்கென ஒரு வளமனை அமைத்துக்கொண்டு, இறுதிநாட்காலம் வரையில், அங்கேயே நலமுற வாழ்ந்து வந்தார். *15—7—1876*இல் தோன்றிய அடிகளார், *15—9—1950* அன்று, சிவபிரான் திருவடிநிழலிற் சேர்ந்தார்.

**முடிவுரை :**

மறைமலை அடிகள் ஒரு பெரும் கல்விக் கடல். 'கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்' எனக் கவியரசர் கம்பர் வினவுவது போல, அடிகளாரின் அளவற்ற அருமை பெருமைகளை, நாம் அளவிட்டு ஆராய்ந்து அறிந்து கூறுதல் இயலாது. அவர் ஒரு தனி மனிதரல்லர். ஒரு மாபெரும் நிறு வனம் எனத்தக்க சிறப்புடையவர். கொள்கை களுக்கும் குறிக்கோள்களுக்குமே வாழ்ந்தவர். ''மானுடம் இவர்தாம் அல்லர், நற்பெருந் தெய்வம்'' என்று போற்றத்தக்க நிலையில், வாழ்ந்த மாட்சிமை உடையவர். அவர் தாமே சொந்தமாக வாங்கி வைத்துக் கற்றுப் பயன் படுத்திய ஆயிரக்கணக்கான நூல்கள், இன்று சென்னை இலிங்கிச் செட்டித் தெருவிலுள்ள மறைமலை அடிகள் நூலகமாக அமைந்து, ஆராய்ச்சி அறிஞர்களுக்குப் பெரிதும் பயன் பட்டு வருகின்றன. அயல் நாடுகளிலிருந்து போதரும் ஆராய்ச்சி அறிஞர்கள், அந்நூலகத் தொகுப்பையும் அமைப்பையும் கண்டு வியந்து மகிழ்கின்றனர். ஒப்புயர்வற்ற பெரும் ஆராய்ச்சிப் புலமை அறிஞராக விளங்கியிருந்த அடிகளாரின் அருமை பெருமைகளை விளக்கும் ஓர் அரும்பெறல் நிலையமாக மறைமலை அடிகள் நூலகம் இயங்கி வருகின்றது. அதன்கண் உள்ள அடிகளாரின் நூல்கள் ஒவ்வொன்றையும் எடுத்து நோக்குந்தோறும், அடிகளார் போல ''இனி யார் உளரோ? முன்னும் இல்லை'' என்னும் நினைவே நம்மனோர்க்கு எழுகின்றது. அடிகளாரின் நூல்களைப் பயில்வோம். அவர் தம் புலமையைப் போற்றுவோம். கொள்கை களைக் கடைப்பிடிப்போம். அவர் தம் நெறி நின்று ஒழுகி உய்வோம்.

வாழ்க மறைமலை அடிகளார் புகழ்!

வளர்க அவர்தம்சைவத்தமிழ் நெறி!

தனித்தமிழ் இயக்கத் தந்தை!
சைவசித் தாந்தச் சான்ருேர்!
முனைத்தநற் கொள்கை வீரர்!
மும்மொழிப் புலமை வேந்தர்!
மனித்தருள் தெய்வம் போன்ற
மறைமலை அடிக ளார்தம்
எனைப்பல சிறப்பும் போற்றி,
இனிதவர் நெறிநின் றுய்வாம்!

—ந. ரா. முருகவேள்

# பக்தி இலக்கியத்தில் அணிகள்

திரு. செ. வைத்தியலிங்கன், எம்.ஏ., எம்.லிட்., அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

உலகத்திலேயே அழகுணர்வு கொண்ட மக்கள் தம்மையும் தம்மைச் சார்ந்த பொருள்களையும் கவர்ச்சிக்காகப் பெரிதும் அணிசெய்து கொள்கிருர்கள். புறத்தே அணிசெய்து கொள்ளப்பயன்படும் அழகுப் பொருள்கள் பலவற்றுள் பொன்னுலும் மணியாலுமான ஆபரணங்களே ஒளி தந்து நெடிது நிற்பவை; மங்கலச் சிறப்பு மிக்கவை. அணிசெய்யப் பயன்படும் ஆடகம், சாம்புநதம், கிளிச்சிறை, சாதரூபம் என்னும் நால்வகைப் பொன்னும், வெள்ளியும்; வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம் ஆகிய ஒன்பான் மணிகளும்; சங்குகளும், தந்தமும் பிறவும் பண்டு தொட்டே தமிழர்களால் அறிந்து பயன்படுத்தப்பட்டன. சிறப்பாகக் கடறு பயந்த பொன்னும், கடல் பயந்த முத்தும் பவளமும், மலை பயந்த மணியும் ஒருவழிச் சேர்க்கப்பட்டு அருவிலை நன்கலம் அமைத்து அணிந்து மகிழ்ந்தனர் மக்கள். இதனுல் எவ்வெவற்றை ஒருங்கிணைத்து அழகுணர்வினையும் நன்மைப் பொலிவினையும் வளர்த்துக் கொண்டார்கள் என்பதையும் அறியலாம்.

பொன்னிலே மணியைப் பதித்து இழைத்துச் செய்தவை 'இழை' எனப்பட்டன. பிறகு இழை என்ற சொல் பொதுவாக அணி; அஃதாவது, ஆபரணத்தைக் குறிக்கலாயிற்று. வயது, இடம், தகுதி, இயல்பு. உறுப்பமைப்பு முதலியவற்றிற்கு ஏற்றவகையில் பல்வகைப்பட்ட அணிகள் அணிந்து களித்தனர் மக்கள்.

ஆடவர், மகளிர், குழந்தை ஆகியவர்கள் எல்லோருமே இழையணிய விரும்பினர்; என்ருலும் மகளிர்க்கே இழைகளில் பெரிதும் ஈடுபாடு உண்டு என்பது இலக்கியத்திலே இலக்கண அடிப்படையுடன் மகளிரைச்சுட்டும், 'ஒள்ளிழை', 'நேரிழை', 'ஆயிழை', 'சேயிழை', 'ஏந்திழை', இலங்கிழை'', 'அணியிழை', 'மாணிழை' போன்ற சொற்களால் அறியலாம். தமிழர்கள் பொதுவாகவே, அணிகளில் ஈடுபாடு கொண்டிருந்ததனுல்தான், அணிகள் பல அமைந்துள்ள தம் ஐம்பெருங்காப்பியங்களையும்; இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை: நான்மணிமாலை, நவமணிமாலை, தசமாலை முதலிய செய்யுட்களையும், அணிகளின் பெயராலமைத்து அழகுத் தமிழன்னைக்குப் பொலிவு பொங்கப் பூட்டி மகிழ்ந்தனர். விலையுயர்ந்த அணிகளை அணிவதன் மூலம் மக்கள் தம் பொருளியல் தகுதியே உயர்வதாக எண்ணும் எண்ணமும், தோன்றியுள்ளது. அறங்கூறும் சான்ருேர்களும் 'அணி' என்னும் சொல்லை வைத்துக் கொண்டுதான் உயர்ந்த பண்புகளின் பெருமையைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

''பணிவுடையன் இன்சொல னுதல் ஒருவற்
கணி யல்ல மற்றுப் பிற''

''கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்ருேர்க் கணி''

போன்றவற்றைச் சான்ருகக் காண்க. பொதுவாக, அணிகளைப் பற்றி ஆய்கின்ற போது, மக்கள் தம் உள்ளம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் வழிவழி வளர்ச்சியே புலப்படுகின்றதெனலாம்.

### பக்தி இலக்கியங்கள்

சமய அடிப்படையிலே அறியாமையிருள் கடிந்து இறையுணர்வு தொடர்பாக மனிதன் தன்னைத்தான் உணர்ந்து உய்தி பெற வழிகோலும் நூல்களாகிய சாத்திரம், தோத்திரம், சரித்திரம் போன்றவையே சமய நூல்கள் ஆகும். சமய அருளாளர்கள் ஆத்ம போத முதிர்ச்சியால் திருவாய் மலர்ந்தருளியதோத்திரங்கள்; அஃதாவது, பாசுரங்களே பக்திப் பனுவலாகும். என்ருலும், இறையருள் நிமித்தம் சமயப் புலமை மிக்க அருளாளர்கள் செய்தருளிய பெரிய புராணம் போன்ற வரலாற்றடிப்படையிலமைந்த சமயக் காப்பியங்களையும், பிள்ளைத் தமிழ், உலா போன்ற பாவனைக் காப்பியங்களையும் விரிந்த பொருளில் பக்தி இலக்கியம் எனக்கொண்டு அவற்றிலே காணப்படும் அணிகலன்களையும் சிறிது காண்போம்.

### தெய்வ அணிகளும், மக்கள் அணிகளும், பிற அணிகளும்

பக்தி இலக்கியத்தை ஊன்றிப் பார்த்தால் தெய்வத்திற்கெனச் சிறப்புடைய அணிகளும், மக்களுக்கெனச் சிறப்புடைய அணிகளும், தெய்வத்திற்கும் மக்களுக்கும் பொதுவாகவுள்ள அணிகளுமாகக் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். கௌத்துபம், சியமந்தகம், சூளாமணி, சூடாமணி போன்ற தெய்வீகஅணிமணிகள் அளவில் ஒளியுடையவை மட்டுமல்ல; பல அரிய செய்திகளையே பின்னணியாகக் கொண்டவை.

இருக்கு மறையில்குறிப்பிடப்படும்'காந்தி' எனும் கவர்ச்சிமிக்க அணி தற்கால 'நெக்லஸ்'

போன்ற இறுகிய கழுத்தணி. இவ் அணியை எல்லாத் தெய்வ மூர்த்தங்களிலும் காணலாம் எனக் கருதுகிறார் கலைச்சுவைஞர் திரு வி. கோபாலன். அவரே, 'ஆபரணங்கள் பூண்டு அழகு மிளிர மங்கல மாட்சிமை புரியும் இறைவனின் கோலங்கள் பல. சிவபெருமான், திருமால், முருகன், தேவியர்கள் ஆகியோருக்குச் சிறப்பாக உரிய பல ஆபரணங்களைப் பற்றிச் சில்ப சாஸ்திரத்தில் 'மானஸாரம்', 'சில்பரத்னம்' ஆகிய நூல்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. தெய்வ மூர்த்தங்களுக்குச் சிறப்பாகப் பதினைந்து வகை ஆபரணங்கள் உரியவை என்று கூறுகிறது 'சில்பரத்னம்' எனும் நூல் எனவும், குறிப்பிடுகின்றார்.

பண்டைக் காலத்தில் வாழ்க்கை வளம் நிறைந்த மக்கள், முடிமுதல் அடியீறாக மணியாலும் பொன்னாலுமான அணிகளை யணிந்து களிப்புற்றனர். காலச் சுழற்சியிலே மக்கள் தம் சிந்தனையில் சிறிது மாறுபாடு ஏற்பட்டது. பொன்னைத் திருமகளாகவும், நவமணிகளை நவக்கிரக விருப்பப் பொருள்களாகவும் பாவித்துப் பொன்னணிகளையும் மணிகளையும் உடலெங்கும் அணிந்து கொண்டாலும் காலில் அணியும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை; பெரும்பாலும் காலில் வெள்ளியாலான அணிகளைத்தான் அணிகின்றார்கள். ஆனால், தெய்வ மூர்த்தங்களுக்கு மட்டும் காலிலும் பொன்னணியிட்டுப் பூரிப்படைகிறார்கள்.

'இனிய நாத சிலம்பு புலம்பிடும், அருண ஆடகக் கிண்கிணி தங்கிய அடி தாராய்' என்ற திருப்புகழ் காண்க.

கலைஞர்கள் மனக்கண் கொண்டு தெய்வங்கள் அணியும் அணிகளாகத் தியான சாதனையால் உணர்ந்து அமைப்பாய் வடித்தெடுக்கின்றார்கள். மூர்த்தங்கள் வடித்தற்குக் காரணமான தியான சுலோகங்களைப் படிப்பதே ஓர் இன்ப அனுபவமாகும். கலைஞர்கள் தாம் அமைக்கும் சிலைகளிலும் ஓவியங்களிலும் காட்டிடுகின்ற அணிகள் அழியாத தெய்வீகப் பொலிவுடன் அமைதற்குக் காரணம், அவர்கள் தம் தூய யோகக் காட்சியேயாகும். இன்ன இன்ன அணிகள் இவ்வாறுதான் அமைக்க வேண்டுமென்ற குறிப்புக்கள் நூல்களில் காணக் கிடைக்கின்றன.

சிலைகளில் இயற்கையாகவே ஆடைகளையும், அணிகளையும் அமைத்திருக்கும் போது அவற்றை மறைத்திடும் வகையில் ஆடையணிகள் அணிவது தேவையும் பொருத்தமும் உண்டா என்று கலைச் சுவைஞர்கள் சிலர் வினவுகின்றனர். இந்த எண்ணம் பற்றிச் சமயச் சான்றோர்கள் சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுக்க வேண்டும்.

பல் பிணியும் சின்னாள் வாழ்வுமுடைய மக்கள் மதிப்பு மிக்க அணிகளை அணிந்திருந்து, தாமும் அவ்வணிகளும் இருந்த இடம் தெரியாமல் போய் விடுதலைக் காட்டிலும், அழியாப் பெருமையுடன் பன்னெடுங் காலத்திற்குத் தெய்வீக ஒளி பரப்பும் தெய்வ மூர்த்தங்களின் மேல் அணிகள் ஒளி பரப்பட்டும் என்று நினைத்தார்கள். எனவே மாநிலம் புரந்த மன்னர்களும், வழங்கவே பிறந்த வள்ளல்களும், விலை மதிப்பரிய பல அணிகளைப் பல கோயில் தெய்வங்களுக்கு ஈடுபாட்டுடன் வழங்கி, மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தவர்களாய்த் தம் புகழ் நிறுவியுள்ளார்கள்.

தெய்வங்களுக்கும், மக்களுக்கும், தொடர்புள்ள விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், தேர்களுக்கும் மணிபதித்த பொன்னணிகளையும் வெள்ளியணிகளையும் அணிந்து மகிழ்ந்திருக்கின்றனர். பிற அணிகளுடன் மணிப் பொன்னோடை (நெற்றிப் பட்டம்) யானைக்குச் சூட்டி மகிழ்ந்ததற்குப் பல குறிப்புக்களைக் காணலாம். பசுவிற்குப் பல அணிகளை அணிவித்த குறிப்புக்கள் திருவிளையாடற் புராணத்தில் காணலாம். திருமால் ஊர்தியாகிய கருடனுக்கும் பல அணிகளுண்டு என்பதைப் பரிபாடலில் காணலாம்.

தலைக்கும், கழுத்திற்கும், தோளிற்கும், கைக்கும், இடைக்கும், காலுக்குமாய் அணிகள் பலவகைப்பட்டன.

## தலையணிகள்; முடி

திருநிறை தெய்வங்களுக்கும், தெய்வீகப் பொலிவு நிறை மன்னர்களுக்கும் பொருந்திய சிறந்த அணியாகிய முடியினைக் காண்போம். முடிகளில் பல வகைகள் உண்டு. சுடர் மணியாலும் பொன்னாலுமாக்கப்பட்டு, நெடிய திருமாலுக்கணியும் திருமுடியானது, தாமரை மொட்டினைப் போன்று கூம்பியும் உயர்ந்தும் காணப்படுவதாகும்.

''அடர் பொன் முடியானை..''

என்பார் நம்மாழ்வார்.

''மன்னு மணிமுடிநீண் டண்டம்போய்..''

என்றும்:

''தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்''

என்றும் பாடிப் பரவுகின்றார் பேயாழ்வார்.

பேரொளி கொண்டிலங்கும் திருமாலின் முகச் சோதியையும், திருமுடிச் சோதியையும் இணைத்துப் பார்த்து, 'முடிச் சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ' என வாயூறிப் பூரித்துப் போகிறார் நம்மாழ்வார்.

சிவன் தலையிலே திங்கள், சூளாமணி, கொன்றை, கங்கை, நாகம், தும்பை, எலும்பு, கொக்கிறகு, ஊமத்தப்பூ முதலிய பல்பொருள்கள் இருப்பினும், மணியாலும் பொன்னாலும் அமைக்கின்ற சிவன் திருமுடியானது பிறையணிச் சோதிச் சடையமைப்பாகவே பெரும்பாலும் அமைக்கப்பட்டது. பிறகு சோதிமிகு சூளாமணி சூடிய திருமுடியாதவும் பொற்

158621

கொன்றை சூடிய திருமுடியாகவும் கலையமைப் புடன் பலவாறாக முடியமைப்பில் வளர்ச்சி யேற்பட்டது.

''ஆதியந்த மில்லா வடிகள் திருமுடிமேல்
சோதி மணிமகுடம் சூட்டியே''
(கடம்பர் கோயில் உலா)

''பெருமான் எரிபோல் ஒளிவிடு சடைமா முடியின்
இருக்கும் மதிக்கடவுள்''

(அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்)

''வெளியமதியந் தவழுமுடி விளங்குங் கதிர்
செம்பவளமாலை'' ( ஷை )

''பிற்பகரும், சூளாமணிசேர் முடிகவித்து''
(திருக்கைலாய ஞானவுலா)

''பைம்பொற் கொன்றைத், தொடைகொண்ட
வார்சடை
அம்பலத்தான்'' (கோயில்நான்மணிமாலை)

நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே திரு முடிக்கவினை,

''ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி''

என இயம்புகின்றார். இதனால், தாமம், முகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என (முடிக்குச் செய்யுஞ் சிறப்புடைய தொழில் திறமெல்லாம் முற்றுப்பெற்ற திருமுடியோடே கூடிவிளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாட்டு ஒளியழகினை உடையமணி எனப் பொருள் நுட்பம் காணலாம்.

தேவர்களெல்லாம் முடியணிந்த சிறப்பு உடையவர்களே யெனினும், அவர்கள், திருமாலையும் சிவனையும் உமையையும் பணிந்து ஏத்தும் திருமுடிகளையே சூடியுள்ளனர் எனலாம்.

''நாற்பால
வேதத்தான்வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பணிந்து''
(பேயாழ்வார்-மூன்றாம் திருவந்தாதி)

''விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தோய்ப்ப.....''
(காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி)

''முதுவானவர்தம் முடித்தொகைகள் கழியாக்
கழற் றில்லைக் கூத்தன்'' (திருக்கோவையார்)

''பஞ்சி திருத்துஞ் சிறடிகள்
பதிந்த சுவடு தொறும் இமையோர்
பணிகால் மோலி நிறைபுரள''
(அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்)

அன்றியும், வானவர்களுக்கு முடிமணியாகச் சிவன் விளங்குகிறான் என்ற குறிப்பினை, 'சூளாமணி உம்பர்க் காயவன்' எனும் திருக்கோவையார்க் குறிப்பாலும் உணரலாம். முடியினைச் 'சுழியம்' என்று அழைத்த குறிப்பு, பெரிய புராணத்தில், 'சுந்தரச் சுழியம் சாத்திச் சுடர் மணிக் கலன்கள் சாத்தி' எனச் சுந்தரரைக் குறிப்பிடுதலால் காணலாம்.

மண்ணாளும் மன்னர்தம் முடிகளும் பெருமதிப்புடையனவாக வழி வழி வந்தன. முடியும் செங்கோலும் ஆட்சியுரிமையைக் காட்டும் சிறந்த அடையாளங்களாகவே கருதப் பட்டன.

''சுடருங்காசு, குயின்று உயர் மகுடம்
சூட்டும் செல்வமும்
கொள்வென் யானே''

என்பது இராமயணத்திலே பரதன் கூற்று. தோற்ற மன்னர்தம் முடிப்பொன்னைக் கொண்டு வென்று வாகை சூடிய மன்னன் ஆரம் செய்து மார்பிலணிந்து கொள்வதும், கழல் செய்து காலில் அணிவதுமாகிய குறிப்புக்களைப்பதிற்றுப் பத்து போன்ற பண்டைத் தமிழிலக்கியங்களில் காணலாம்.

**பிற தலையணிகள்**

சீதேவி எனப்படும் தெய்வ உத்தி, வலம்புரி, மகரப் பகுவாய், மகர வலயம், மகரம்: மகரத் திருவணி, முஞ்சம், சுட்டி, நுதற்பட்டம் தொய்யகம், மத்தக நித்திலம், சூடிகைபோன்ற அணிகள் தலையிலும், நுதலிலும் அணியப் பெற்றுப் பல்வகைக் கோணங்களில் தலையழகினை மிகுதிப்படுத்தின.

சூரர மகளிர் தெய்வ உத்தி, வலம்புரி எனப்படும் தலைக்கோலங்களோடு திலக மணங் கமழ் நெற்றியிலே சுறாவினது அங்காந்தவாயாகப் பண்ணின தலைக்கோலத்தையும் அணிந் திருந்தனர்.

''தெய்வ உத்தியோடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சி''

என வருணிக்கிறது திருமுருகாற்றுப்படை. தெய்வ நலம் நாடும் நன்மகளிர் நுதல் நடுவிற்கு மேற்பகுதியிலே, அஃதாவது, தலைவகிர் எடுக்கும் முன்புறத்திலே திருமகள் தங்குவதாக எண்ணுவது மரபு. அந்த இடத்திலே நெய் யிட்டு முழுகுவதும், குங்குமமிட்டு ஒளியுடைய அணி அணிவதும் வழக்கம். எனவே, அவ் வகையாக அணியப் பெற்றதே 'தெய்வ உத்தி' எனும் சீரிய அணியெனலாம். மகரப் பகுவாய், மகர வலயம், மகரம், மகரத் திருவணி எனப் படும் பெயர்களெல்லாம் ஒரே அணியைக் குறித்தனவா, வெவ்வேறு அணியைக் குறித் தனவா என்பது ஆய்விற்கு உரியது.

''எறி மகர வலயம் அணிதிகழ் நுதலியர்''

என்பது பரிபாடல்.

''மகரமும் வாளிகளும் சுட்டியும்''

என்பது பெரியாழ்வார் வாக்கு.

''திவளக் கதிர்விடு கொண்டை திருத்திச்
செஞ்சுடர் வாள் மகரந்
திருவணி யக்கடல் மகரமெனத் தனி
செருகி....''

(அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்)

''வலஞ்சுழி உந்திய திணைபிரி புதல்வர்
கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇ'' (பரிபாடல்)

சிவன் திருமுடியைத் தொடர்ந்து கீழே நெற்றிச் சுட்டியும், நுதற் பட்டமும் காணப்படுதலைச் சேரமான் பெருமாள் நாயனார்,

''சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டி சேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்து''

எனத் திருக்கைலாய ஞான உலாவில் குறிப்பிடுகின்றார். நுதற்பட்டம் என்பது திருநீற்றுப் பட்டைப் போலத் தில்லை ஆடல் வல்லானுக்கு இன்றும் அணியப் படுகின்ற 'திரிபுண்டரம்' எனும் அணியாயிருக்கலாம். சுட்டி என்பது தலையின் முற்பகுதியினின்றும், நுதலின் மேற்பகுதியிலே தொங்கலாக அணியும் அணியெனலாம்.

''பெண்ணிற் கரசி திருநுதற் பொற்
பிறைமேற் சுட்டி யொன்றணிந்து''

என்று கூறுகிறது பிரபுலிங்க லீலை. 'தொய்யகம்' எனும் தலையணியைப் பரிபாடல் குறிப்பிடுகிறது. முத்தாலான 'மத்தக நித்திலம்' என்பதனை,

''துறையே, முத்துநேர்பு புணர்காழ் மத்தக நித்திலம்
பொலம்புனை அவிரிழை''

என வரும் பரிபாடற் பகுதியால் உணரலாம்.

கம்பராமாயணத்தில், 'சூடல் நீத்தன சூடிகை' எனக் கூறப்படுகிறது. சூடிகை எனும் தலையணியானது, கலித் தொகையிலே கூறப்படும் 'வயந்தகம்' போன்ற தலையணியாய்த் தலையில் செருகப்படும் அணியாய் இருக்கலாம். பொன்னால் மலர் செய்து வெள்ளி நாரால் தொடுத்தமைக்கும் பொன்னரி மாலையைக் கழுத்தணியாகப் பயன்படுத்தியதோடு தலையணியாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

''கேடில்சீர்ப், பொன்னரிமாலை தலைக்கணிந்து''

என்பது திருக்கைலாய ஞான உலா.

அன்றியும், சூர்யப் பிரபை, சந்திரப் பிரபை என இக்காலத்தில் கூறப்படும் தலையணிகளையும் முன்பு அணிந்திருந்த குறிப்புக்கள் கிடைத்திருக்கின்றன.

திருவெங்கை உலாவில் ஓர் இனிய காட்சியினைக் காண்போம். சந்திரன் ஒருவனையே தலைக்கணிந்த ஈசனின் மனத்தைக்கவரமங்கைப் பருவ நங்கையொருத்தி நினைக்கிறாள். இறைவனை விடத் தன்னை அழகுபடுத்திக் கொள்ள விரும்புகிறாள். சந்திரப் பிரபை சூரியப் பிரபை எனும் தலையணிகளைச் சந்திர சூரியர்களாகவே பாவித்து அணிந்து கொள்கிறார்களாம்.

'மொய்த்தபுகழ்
ஈசற்குத் திங்களொன்றே யென்றுகதி ரும்பிறையும்
வாசக் குழல்முன் வகுத்தணிந்தாள்''.

என்னே கற்பனை!

## மூக்கணிகள்

தமிழ் நாட்டிலே மகளிர் மூக்குத்தியும் புல்லாக்கும் அணிந்திருந்தமை பற்றிச் சுவைபடக் காணலாம். திருக்குற்றாலத்திலே இளமங்கையர்கள் முத்து மூக்குத்தி அணிந்திருந்ததை,

''மூக்கெழுந்த முத்துடையார் அணிவகுக்கும்
நன்னகர மூதூர் வீதி''

எனத் திரிகூட ராசப்பக் கவிராயர் குற்றாலக் குறவஞ்சியில் குறிப்பிடுகிறார். அதே நூலில், 'பல்லின் அழகை எட்டிப் பார்க்கும் மூக்கிலொரு முத்தினாள்' என்ற குறிப்பும் உளது. பிரபுலிங்க லீலையில் மாயையை அலங்கரிக்கும் போது புல்லாக்கு (மூக்கணி) அணிந்த குறிப்பு வருகிறது. மாயையின் ஒளியுடைய வெண் பற்களுக்கு நிகராகத் தான் இல்லாமையால், முத்து நிந்தைக்கு ஆளாக வேண்டியுள்ளதாம். எனவே, பல்லின் மீது பழியுண்டாகும் வண்ணம் பல்லின் திருமனை முற்றமாம் வாய்க்கெதிரே தூக்கிட்டுக் கொண்டு தொங்குவது போல் இருக்கிறதாம். என்னே கற்பனை வளம்!

திருவெங்கை உலாவில் மங்கைப் பருவத்தினள் ஒருத்தி,

''முயங்கு முரோணி முழுமதியோ டென்ன
வயங்கு கொடி மூக்கார மாட்டி''

நிற்கிறாள் என்பது, காண்க.

## காதணிகள்

ஆடவரும் மகளிரும் குழந்தைகளும் காதணிகள் அணிந்திருந்தமை பண்டுதொட்டே இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓலை, தோடு, குழை, கொப்பு, தமனியக் கொப்பு, குதம்பை, குண்டலம், செவிப்பூ, வாளிகள் முதலிய பல பெயர்களில் காதணிகள் இருந்தன. இயற்கையோடியைந்து வாழ்ந்த தமிழ் நன் மக்கள் செடி கொடி மரங்களில் காணப்படும் தளிர்களையும் மலர்களையும் அணிகளாக அணிந்திருந்த பழக்கத்தினால், தாம் புதியனவாகப் பொன்னாலும் தந்தத்தாலும் சங்காலும் அமைத்துச் செய்த அணிகளிலும் பூவேலைப் பாட்டினை விரும்பினார்கள்; அந்தத் தொடர்பாகப் பெயர்களிட்டும் அணிகளைக் குறித்தனர்.

"கடுத்து வாழ்தர வொருத்திபொன் னோலைகா
தணிந்தாள்''
(பிரபுலிங்கலீலை)

''தோடுடைய செவியன்.....''
(திருஞானசம்பந்தர் தேவாரம்)

''கொப்பழகு குழை மடந்தை பள்ளியறை தானி
ருந்து
கோயில் புகும் ஏகாந்த சமயம் சகியே''
(திருக்குற்றாலக் குறவஞ்சி)

''தண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்
கோர்
தமனியக் கொப்பு மிட்டு''
(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

''பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணம்....''
(திருவிளையாடற் புராணம்)

''அழிதகன் குறுகுவான்முன் னங்கயற் கண்ணி
தந்தக்
குழையிரு காதுங் சோத்து''
(திருவிளையாடற்புராணம்)

''தோளில் மகரக்குழை தவழ''
(திருச்செந்தூர் முருகன்பிள்ளைத்தமிழ்)

மகளிர் வடிந்து வீழ்காதினராக (காதில் தொளை களைப் பெரியனவாகத் தாழ்த்தி வளர்த்துக் கொள்பவராக)ப் பயன்படுத்தும் அணிக்குக் கடிப்பு என்பது பெயர். பிறகு, தாழ்ந்து தொங்குமாறு அமைந்த காதுகளில் கனங்குழை அணிவர் என்பது,

''கடிப்பிடு காதில் கனங்குழை தொடர''

என்பதால் அறியலாம்.

திருமங்கை ஆழ்வார் ''மின்னுமா மணி மகர குண்டலங்கள் வில்வீசு மென்கின்றுளால்'' எனக் கண்ணபுரத் திருமாலைப் பரவுகிறார். நம்பியாண்டார் நம்பி, ''காதில் கனவயிர குண்டலங்கள் சேர்த்தி'' என ஆளுடையபிள்ளை யார் திருவுலா மாலையில் குறிப்பிட்டு மகிழ் கிறார்.

''வெய்ய குதம்பை வளர்த்தகலை
விழுநீர் வள்ளைக் காதினிடைந்

துய்ய பசும்பொன் பணிகுயின்ற
துணைத்தோ டமையத் தோன்றினாள்''

என்ற பிரபுலிங்க லீலைப் பகுதி காண்க. 'வாளிகள்' என்பதைக் காதணியாகக் கொண்டு பாடுகிறார் பெரியாழ்வார்.

சிவபிரான் இசைகேட்கும் பெருவிருப்பங் காரணமாக இசைவல்ல அசுவதரர் கம்பளர் ஆகியோரை (அல்லது, தும்புரு, நாரதரை)க் காதணிகளாகவே கொண்டணிந்துள்ளான் என் பதை:

''இன்னிசை வீணை யிருவோ ரிசைந்தாடப்
பொன்னூசல் போற் குழைகள் பூட்டியே''

எனக் குறிப்பிடும் கடம்பர் கோயில் உலாவால் உணரலாம். இதனால், குழையானது தொங்கி யாடும் காதணி என்பது தெளிவாகும். கர்ணப் பூ என இக்காலத்தில் வழங்கும் செவிப் பூவினை யணிந்த குறிப்பை,

'சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே' என்ற ஆண்டாள் திருப்பாவையில் காண்க.

## கழுத்தணிகளும், மார்பணிகளும்

மக்கள் பலரும் வானவில்லைப் போல வண்ண ஒளிபரப்பும் மணிகள் அழுத்திய பொன் ஆரங்களையும், சங்கு தந்தம் முதலியவற்றாலான மார்பணிகளையும் கழுத்தணிகளையும் தம் தகுதிக்கேற்ப அணிந்து மகிழ்ந்தனர். 'வடங் களும் குழைகளும் வான வில்லிட, நீலமாலை வருதலைக்' கம்பர் கூறுகிறார்

''வில்லும் பணி புனைந்து வல்லிக் கமுகை வென்ற
கழுத்தினாள்'' (திருக்குற்றாலக் குறவஞ்சி)

''பொன்னின்மா மணியார மணியாகத் திலங்குமா
லென் கின்றுளால்''
(திருமங்கையாழ்வார் முதல் திருமொழி)

''ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்''
(திருமுருகாற்றுப்படை)

பொன்னாலான சங்கிலியைத் தொடர் என்றே குறிப்பிட்டுள்ளார். கொக்கி(கயில்) இட்டுப் பிணைக்கவும் தெரிந்திருந்தனர்.

''கட்டிய கயிலணி காழ்கொள் வோரும்'' என்பது பரிபாடல். கழுத்தில் அணியும் மாலை யானது ''கண்டாவளி'', ''கண்டமாலை'' ''கண் டிகை'' என அழைக்கப் பெறுதலைத் திருவிளை யாடல் புராணம், பெரிய புராணம் ஆகியவற் றில் காணலாம். முத்துமாலை சிறப்பாக 'ஆரம்' எனப்பட்டது. முத்துக்களை அணிவதால் குளிர்ச்சியோடு உடலுக்கு ஊற்றின்பமும் உண் டாகுமென்பதைத் தமிழர்கள் பண்டே உணர்ந் திருந்தனர்.

''தழைக்கு நீள்கதிர்த் தண்முத்த மாலை''

என்று திருவிளையாடற் புராணம் குறிப்பிடுதலைக் காண்க. பொற் கம்பியை வளைத்துச் செய்த கழுத்து வளையமாம் 'காறை' எனும் கழுத் தணியைப் பெரியாழ்வார் கூறுகிறார்.

தில்லைச் சிற்றம்பலத்திலே சீரிய திருநாளில் பலநிற முடைத்தாகிய நவமணி மாலையின் திர ளாலே இரவு பகலாவதை மணிவாசகர்,

''இன்னற வார்பொழிற் றில்லைநகரிறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக லாம்பல் விளக்கிருளின்
துன்னற வுய்க்கும்.....''

எனக் கூறி மகிழ்கின்றார். கழுத்திலணியும் ஆரங்கள் பதக்கம், தாலி முதலியவை பிணைக் கப்பட்டும் அணியப்பட்டன.

(தொடரும்)

# கவிதையும் காதலும்

திரு. திருமலை நல்லான் இராமகிருஷ்ண அய்யங்கார்

மாமுனி வேள்வி காத்த இராமனை, வா என்றழைத்தது, கொடிகள் என்னும் கையாலே மிதிலை மாநகரம். இனிய பல காட்சிகளை அவன் அங்கே முனிவனோடும் இளவலோடும் பார்த்துக் கொண்டே சென்றான். ஐம்புலனின் பமும் ஒன்றாய்த் திரண்டது போன்ற காட்சி ஒன்றை மாடத்திலே கண்டு அம் மூவரும் வியந்து நின்று விட்டனர்.

ஆ! என்ன அழகு! கண்கொள்ளாக் காட்சி! சிறந்த அமுத மன்ன இனிமை. நல்ல நோக்கம். மெல்லிய நடை. ஸ்வர்ண மேனி. அவள் கனிந்து நிற்கும் நிலை, கல்லையும் உருக்க வல்ல தாம்.

''கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்கனி நின்றாள்''. கல்லையும் உருக்கவல்ல பெண்கனி, ஆண்டகை இராமனை உருக்கக் கேட்க வேண்டுமோ? உருக்கும் பெண்ணை அண்ணல் நோக்கினான். அவளும் நோக்கினாள் உருகிக்கொண்டே. ஒருவரை ஒருவர் கண்களால் அள்ளிப் பருகினர். கமலக்கண் என்னும் நெடுங்கயிற்றால் வரிசிலையோடு அண்ணலைப் பிடித்து இழுத்துத் தனது உள்ளத்திலே இருத்தினாள் அந்நங்கை. அண்ணலும் வாளோடு (கண்ணோடு) அவளை இழுத்து விட்டான். அதாவது இருவரிடமும் கண் வழியே காதல் குடி புகுந்துவிட்டது.

இது கம்பன் தீட்டிய சித்திரம். இராமன் சீதையைக் கண்டதும் காதல் கொண்டதும் கவிஞனது கற்பனை. ஆயின் எள்ளளவில் அது கற்பனை அன்று. அது எனது இதய பூர்வமான அநுபவம். அதனைச் சொல்கின்றேன் கேளுங்கள்.

**காதல் பெற்ற கவிதை :**

நான் ஒரு சக்கரவர்த்தித் திருமகன். ஆம்! உண்மைதான். கவியுலகிலே பேரின்பத்துடன் உலவி வரும் நான் சக்ரவர்த்தித் திருமகனாக இருப்பது வியப்பொன்றுமில்லை. ஏன்? நீங்களும் கவி உலகிற்கு வந்துவிட்டால் அவ்விதமே ஆகிவிடலாம். என் பெயர் என்ன தெரியுமா? ரசிகன். என்னை ஒரு முனிவர் வந்து அழைத்தார். அம்முனிவர் பெயர் அறிவு. அவருக்கு ஊறு செய்கின்றனராம் சில அரக்கர்கள். கோபம், லோபம் போன்றன அவ்வரக்கரின் பெயர்கள். அவ்வரக்கரை அழிப்பதற்காக முனிவரால் அழைக்கப்பெற்ற நான் அன்போடு பின் தொடர்ந்தேன். அன்பு என் தம்பி. கோபம், லோபம் முதலிய அரக்கர்களுக்குத் தாயாகிய காமத்தை (தாடகையை) முதலில் நான் கொன்றேன். ஆகையால் கோபம் முதலிய அரக்கரை எளிதில் வேட்டையாட முடிந்தது. முனிவர் மகிழ்ந்தார். எங்களை ஒரு நகரத்திற்கு அழைத்துச் சென்றார்.

எம்மை வரவேற்றது அந்நகரம். அந் நகரம் மிதி என்னும் மன்னன் உண்டாக்கிய மிதிலை மாநகரம் அன்று. கம்பன் என்னும் கவியரசன் கட்டிய காவிய நகரமாகும். அங்கே தான் எத்தனை இனிய காட்சிகள்! அவைகளைக் கண்டு மகிழ்ந்த வண்ணமே நகர்ந்து கொண்டேயிருந்தோம். அந்நகரின் இடையிலே எடுப்பானதோர் அரண்மனை. ஆம்! அந்நகரையாளும் அரசனுடையதுதான் அது. பழைய ஊரையே (வான்மீகத்தில் சொன்னதையே) இவ்வளவு கலைவளம் ஒளிரச் சமைத்த கவி அரசன் கம்பன். தன் புதிய அரண்மனையை (கற்பித்த இக்காதல் கட்டடத்தை) முழுத் திறனும் காட்டிக் கட்டியிருப்பது சரிதானே? அவ்வரண்மனை மாடத்திலே ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் நாங்கள் மூவரும் அப்படியே வியப்புற்று நின்று விட்டோம்!

ஆ! என்ன அழகு! கண் கொள்ளக் காட்சி! சிறந்த அமுதமன்ன இனிமை, நல்ல நோக்கம். மெல்லிய நடை. ஸ்வர்ண மேனி. இயைந்த அணிகள். இங்ஙனம் ரஸமாக நின்று கொண்டிருந்தாள், ஒரு பெண்மணி. அவள் கனிந்து நிற்கும் நிலை, கல்லையும் உருக்கவல்லதாக இருந்தது.

''கல்லும் புல்லும் கண்டுருகப் பெண் கனி நின்றாள்'' அப்பெண்மணியின் பெயர் என்ன தெரியுமா? கவிதைக் கனி. குழைந்த எழுத்துக்கள் இழைந்த அக்கனி ஸ்வர்ண (வர்ணம் — எழுத்து) மேனி என்பதில் ஐயம் என்ன? உவமையின்றி நின்று கொண்டிருந்த அப்பெண் கனி, ரசிகன் ஒருவனை உருக்கி விடுவதைக் கேட்க வேண்டுமா?

எங்கள் இருவரின் கண்களும் உறவாடின. நானும் அவளும் உருகிப் போய் விட்டோம். கவிதா ரஸத்தை அள்ளிப் பருகினேன். என்னையும் அவள் பருகினாள். (அதாவது தனது ரஸத்துக்குள்ளே அவள் என்னை மூழ்கடித்துவிட்டாள்). கவிதை இதயத்தில் நானும், என்

இதயத்தில் கவிதையுமாக நாங்கள் இடம் மாறிக் கொண்டோம். இப்பொழுது நான் கூறியது உங்களுக்கு விளங்கியிருக்கும். இராமனது காதலைக் கூறும் கவிஞனது கவிதை நமது காதலைப் பெறுகிறது:

''பொன்னின் சோதி போதினில்நாற்றம் பொலிவே போல்
தென்உண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவி இன்பம்
கன்னிம்மாடத் (து) உம்பரின் மாடே களி பேடொ(டு)
அன்னம் ஆடும் முன்துறைகண்(டு) அங்கயல் நின்றார்''

என்று கம்பன் உற்சாகமாய் ஆரம்பிக்கும் காதல் கவிதையைக் கண்டு யார்தான் காமுனு காமல் இருக்க முடியும்? பாட்டின் சந்தத்தைப் படித்துப் பாருங்கள். எவ்வளவு குதூகலம் கொந்தளிக்கிறது!

### பெண்கனியும் கவிதைக் கனியும் :

''செஞ்சொற் கவியின்பம்'' என்று கவிஞன் பெண்கனியைக் கவிதைக் கனி போன்றதென்றான். நாம் அவனது கவிதைக் கனி பெண்கனி போன்றதென்கின்றோம். காதலின்பமும் கவிதையின்பமும் ஒரே தரமுடையவை. ஆகையால் தான் அவை ஒன்றுக்கொன்று உவமை பெறுகின்றன. கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரும் குயிற் பாட்டிலே,

''கவிதைக்கனி பிழிந்த சாற்றினிலே.....
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்''

எனக் கவிதைக் கவியின் ஸாரமாக ஒரு மாதினைப் படைத்துள்ளார். அழகிய கவிதையாலும், யுவதியின் லீலையாலும், எவனது உள்ளம் நெகிழவில்லையோ, அவன் ஒரு யோகி அல்லது ஒரு மிருகம் என்கின்றான் ஒரு ரசிகன். ஆம்! உண்மைதான்! கவி இன்பமும், காதலின்பமும் மனிதனை மனிதனுக்குகின்றன. அவையின்றேல் மனிதன் வாழ்க்கை வறண்டு விடுகிறது.

### போலிக் கவிதையும், போலிக் காதலும் :

வெறும் சொற்களை அடுக்கிப் பொருட் செறிவின்றிக் கட்டுப்பாட்டிற் குட்படாது மனம் போன போக்கிலே எழுதப்படுவது நல்ல கவிதையாகாது. உணர்ச்சி கெட்ட அல்லது உணர்ச்சியே யில்லாத கவிதை போலிக் கவிதை எனப்படும். ''புன்கவி'' என்கின்றான் கம்பன். கவிதையைப் போலே காதலிலும் போலிக் காதல் உண்டு. இருபாலார்க்குமல்லாது ஒருவரிடமே காமம் தோற்றின், அது போலிக் காதல் எனப்படும். விலை மாதரை நாடி அலையும் கலைவாணர்களே இக்காதலைப் போற்றி வளர்ப்பர். பசையேயில்லாத பாலைவனம் போன்றது வேசியர் மனம் என்கின்றான் கம்பன். அத்தகைய காதல், எங்ஙனம் அரும்ப முடியும்? புன் கவிதையும் போலிக் காதலும் மாந்தர் தாமே தேடிக் கொள்ளும் இழிதகைமைகள்.

உட் கருத்திலாது மேனி மினுக்கி மயக்கும் கவிதையிலும், கணிகையரிலும் மயங்கி விடுகின்றனர் மாந்தர். தாங்களே சுவை காணும் பெரிய ரசிகர்கள் என்பது அவர்களது கருத்து. பகட்டிற்குத்தானே பாரில் மதிப்பு! உண்மையை யார் ஆராய்கின்றார்கள்? இவ்வுண்மையைக் கம்பன் எவ்வளவு அழகாக விளக்குகின்றான்! சீதைக்கு எதிரே அங்கம் தங்கமாய் வந்த மாய மானைக் கண்டு அதன் மேனி மினுக்கிலே மயங்கிக் காட்டிலுள்ள கலைமான் முதலாயின ஆசையுடன் வந்து அதனை மொய்த்துக் கொண்டனவாம். அதற்குக் கம்பன் காட்டும் அதிசய உவமையிது :

''நிலையாம் மானே வஞ்சனை நேயமிலா
விலைமாதர்கண் யாரும் விழுந்தெனவே''

தன்னை வந்து மொய்க்கும் கலைமான் முதலியவற்றிற் சிறிதும் நேசமில்லாத சீதையை, வஞ்சித்துப் பறிப்பதிலேயே நெஞ்சமுள்ள அவ் வஞ்சக மானுக்குத் தம்மை விரும்பும் காமுகரின்மீது சிறிதும் நேசமிலாது பணத்தை வஞ்சித்துப் பறிப்பதிலேயே கண்ணும் கருத்தும் உள்ள விலைமாதரை உவமித்ததில் எத்துணைப் பொருத்தம்! இச்செய்யுளில் விழுந்த ''விழுந்து'' எனும் சொல் காமுகர் படுகுழியில் விழுந்து விடுவதையும் நமக்கு நினைவூட்டிக் கழி பேரிரக்கத்தை உண்டு பண்ணுகின்றது. உவமேயத்தில் மாய மானிடம் வந்த கலைமான்கள் யமன் வாயில் வீழும். உண்மையில் உயிரைப் பறிக்கும் அரக்கனல்லவா அம்மாயமான்! உவமானத்தில் விலைமாதர்கண் விழுந்த மாந்தர் வறுமை நோய் வாயிலே வீழ்வர். உண்மையில் பணத்தையும், உடல் நலத்தையும் பறிக்கும் இரக்கமற்ற அரக்கியரல்லவா அவர்கள்?

போலிக் கவிதையிலே ஈடுபடுவோர் சொல் வழு, பொருட் சிதைவு, ஒழுக்கக் கேடு (ஒழுக்கம்—பாட்டின்போக்கு, மனிதன் நடத்தை) தெளிவின்மை முதலியவற்றைக் கவனிப்பதில்லை. போலிக் காதலரும் தங்களைப் பற்றிப் பிறர் கூறும் வழுச் சொற்களை (அபவாதம்)யும், தம் பொருள் சிதைவதையும், தமது ஒழுக்கக் கேட்டினையும், புத்திக் கலக்கத்தையும் கவனிப்பதே கிடையாது. போலிக் காதல் போலப் புன்கவிதையும் கெடுக்கும் என விடுக்க வேண்டியதே.

### உயிர்க் கவிதை :

பாட்டெல்லாம் கவிதையாகா—பாடுவோர் எல்லாம் கவிஞராவார். ரசிகரின் அதிருஷ்டத்தால் யாரோ ஒருவனிடம்தான் கவிதை என்பது உருப்பெற்று உயிருடன் இலங்கும். வடமொழி இலக்கியம் கடலிலும் பெரிது. ஆனந்த வர்த்தனசார்யர் என்பவர்,

''அதி விசித்திரமான கவி பரம்பரை, பெருகி வரும் இவ்வுலகில் காளிதாஸன் முதலிய இருவர், மூவர் அல்லது ஐந்தாறு பேர்தான் மகா கவிகள் என்று எண்ணப்படுகிறார்கள்..... என்கிறார். நமது தமிழெனும் அளப்பரும் சலதியில்தான் எத்தனை மகா கவிகள் தேறுவர்? கம்பன், இளங்கோ, திருத்தக்க தேவர் என்று நாம் விரல் மடக்கி விடமுடியும்.

காளிதாஸனே, கம்பனே யாப்பிலக்கணம் நோக்கிக் கவிதை இயற்றவில்லை. அவர்களிடம் கவிதை தானாகவே வந்தது. கவிதையும் வனிதையும் தானாகவே வந்தால்தான் அழகு. வலிந்திழுத்தால் சுவை கெட்டுவிடும். ''கேட்டவுடன் ஒரு வகை உவகை உண்டாகும்படி கற்பனை புத்தி நிறைந்த கலைஞனது பாவம் கலந்த சொல் அமைதியே கவிதை'' என்று கொள்ளலாம். உண்மையில் கவிதை இது என்று விளக்கிக் கூறுதல் இயலாது. அதை அனுபவித்தே அறிய வேண்டும். உயிர் உள்ளதும், இல்லாததும் முகத்தைப் பார்த்தாலே தெரிந்து விடுவதில்லையா? அதுபோலக் கவிதையைக் கேட்கும்போதே அதன் ஜீவகளை விளங்கிவிடும். உயிர்க் கவிதை நெஞ்சு நிறைய ஆழத்தில் ஆழ்ந்து அமுதம் சுரக்கும்.

**சொல்நலம் கடந்த காமம் :**

உயிர்க் கவிதையை அநுபவிப்பது மனிதனது சிறப்பு. இதனினும் உயர்ந்த இன்பம் இல்லை. கருத்தினிமை இல்லாக் கவிதையையும், வனிதையும் அநுபவிப்பது, செத்த உடலை அநுபவிப்பது போன்றதாகும். காளைக்கும் கன்னிக்கும் ஒருத்தருக்கொருத்தர் ஏற்படும் நிலைபெற்ற அன்புக் கனிவே காதல் எனப்பெறும். இதனை வடமொழியாளர் 'ரதி' என்பர். காதலர் கூடும்போது பிறக்கும் பேரின்பம் அகம் எனப்படும்.

''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தில் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உளத்து உணர்வே நுகர்ந்தின்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்'' என்று அகம் என்னும் சொல்லிற்கு விளக்கம் கூறினார் நச்சினார்க்கினியர். கவிதை இன்பம் போலவே காதலின்பமும் உணர்ந்து அநுபவிக்கத் தக்கது. இவ்வாறிந்ததெனக் கூற இயலாதது.

''சொல் நலம் கடந்த காமச் சுவை'' என்றான் கம்பனும்.

**காதல் உருக்காட்டிய கவிதை :**

சொல் நலம் கடந்த காமத்தையும் எப்படியோ நம் கண்ணெதிரே கொணர்ந்து காட்டி விடுகின்றான் கம்பன்! பாருங்கள்.

''சொல் நலம் கடந்த காமச் சுவையை ஓர் உருவமாக்கி
இன்னலம் தெரியவல்லார் எழுதியது என்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீராள் புனைந்தன எல்லாம் போகத்
தன்னையும் தாங்கலாதாள் துகிலொன்றும் தாங்கி நின்றாள்''

இராகவன் மிதிலையில் பவனி வரும்போது பெண்ணொருத்தி அவனைப் பார்க்க வந்து நின்றாள். இலக்குமி போன்ற அழகுடைய அவள் இராமனைக் கண்டதும் அவன் மீது ஆசை கொண்டாள். மெய்ம் மறந்தாள். மெலிந்தாள். அவள் அணிகள் எல்லாம் நெகிழ்ந்து கீழே விழுந்துவிட்டன. பொன் போன்ற அவளுக்குப் பொன்னணிகள் எதற்கு? இராமனையே நினைந்து நைந்த அவளுக்குத் தன் உடம்பே இப்போது பாரமாகத் தோன்றுகிறது. இந்நிலையில் ஆடையும் நெகிழ்ந்துவிட்டது. சோர்ந்து தன்னையே தாங்கமாட்டாது நின்றுகொண்டிருந்த அவள், நெகிழ்ந்த ஆடையை மட்டும் விடாமல் பிடித்துக் கொண்டு அப்படியே அசைவற்று நின்றுவிட்டாளாம் ஒரு சித்திரம் போலே. இந்நிலையைத்தான் கவிஞன், சுவை விஷயத்தில் வல்லான் ஒரு சித்திரக்காரன் காமச் சுவைக்கு ஒரு வடிவு கொடுத்துச் சித்தரித்த சித்திரம் போன்றுள்ளது என்கின்றான். இணையிலா எழிலுருவத்துடன் காமரசம் ததும்ப அசைவற்று இப்பெண்மணி நிற்கும் நிலை சித்திரத்தில் ஜீவகளையோடு நிற்கும் காமரஸத்தையே கண்டாற்போல் பேரின்பம் ஊட்டுகின்றதன்றோ?

சுவை அனைத்தினும் சிறந்த காதற் சுவையில் தனக்குள்ள மதிப்புத் தோன்ற ''சொல் நலம் கடந்த காமச் சுவை'' என்கின்றான் கம்பன். போஜ ராஜன் காமச் சுவை தவிர வேறு சுவையே இல்லை என்கின்றான், சரசுவதி கண்டாபரணத்திலே. இன்புறுத்தும் பொருள்களுக்குக் காமச்சுவையை உவமையாகக் கையாள்கின்றனர் கவிஞர்கள். காளிதாஸன் ''சிருங்காரைகரஸ:'' என்று தலைவியைக் காமச் சுவையாக வருணிக்கின்றான். கம்பன், இராமனைக் கண்ட மாதர்கள் காதலைக் கண்ணாலே நேரே பார்த்ததுபோல் எண்ணினார்கள் என்று வருணிக்கின்றான்.

''கண்ணினால் காதலென்னும் பொருளையே காண்கின்றோம் இப்
பெண்ணின் நீர்மையினால் எய்தும் பயனின்று பெறுதும் என்பார்''

**காதலர் கலப்பு :**

அன்புற்ற காதலிருவரும் இன்பத்துடன் கலக்கும் காட்சி ஒன்று, கம்பனது கவிதையிலே கவினுறக் காட்சி தருகின்றது. அதனைக் காண்போம் :

''உருத்தெரி தன்மைய உயிரும் ஒன்றுதம்
அருத்தியும் அத்துணை ஆய நீரினர்
ஒருத்தியும் ஒருத்தனும் உடம்பும் ஒன்றெனப்
பொருத்தினர் ஆமெனப் புல்லினாரரோ''

இது காதலர் இருவர் தழுவியதைக் குறித்து வருணிக்கின்றது. தம்மை உடலாகவும், காதலிக்கப்பட்டவரையே உயிராகவும் கருதுவர் காதலர். உடம்பு உயிர்கள் போல நட்புப் பெறுதலே காதலுக்குச் சிறப்பு. தொன்று தொட்டு வேற்றுமையின்றிக் கலந்து வருதலும் இன்ப துன்பங்களை ஒக்க அனுபவித்தலும் இன்றியமையாமையும் உடம்பு உயிர்கட்கும் காதலர், காதலிகட்கும் பொதுவானவை.

''உடம்பொடு உயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு''

என்ற குறளும் அதன் உரையும் ஈண்டு அறியத் தக்கன.

ஆகவே காதலரின் உயிர் நம்முடையது போன்று அருவானது அன்று. உருவுள்ளது. கண்ணிற்குத் தெரியும். அத்தகைய இருவரது உயிரும் ஒருத்தருக்கொருத்தர் தாரகமாய் ஒரே தன்மையுடன் இருப்பதால் உயிர் இரண்டும் ஒன்றாயின. அவ்விதமே இருவரது அன்பும் ஒரே மாதிரி இன்பந்தருதலால் ஒன்றாயின.

இனி வெவ்வேறு தன்மையுடையவைகளான இவர்களுடைய ஆண், பெண் உடம்புகள் மட்டும் ஒன்றாகாமல் இருந்தனவாம். அவற்றையும் ஒன்று என்னும்படி செய்யத்தான் இப்பொழுது முயல்கிறார்களாம் இவ்வருமைக் காதலர்கள். இரண்டையும் ஒன்றாய்ப் பொருத்துகிறார்களாம்; ஐக்கியப்படுத்துகிறார்களாம். அவ்வளவு இறுகத் தழுவிக் கொள்கிறார்கள் ஆசைத் தம்பதிகள். இத்தம்பதிகளின் மனோநிலையை எவ்வளவு அழகாகச் சித்தரிக்கின்றது இக் கவிதை! சிறந்த காதற் பாவம் கனிந்து நிற்கிறது, இக்கவிதையிலே. படித்துப் படித்து இன்புறுங்கள்! இக்காதற் கலப்பே கழிபேரின்பம். காதலரின் நிலை சிறிதேனும் ஏற்றத்தாழ்வு பெறின் இத்தகைய இன்பம் சுரவாது. இங்கு எல்லா அம்சத்திலும் காதலர் இருவரையும் சமநிலையில் வைத்து இன்புறுத்துகின்றான் கவிஞன்.

மற்றெல்லா நூல்களையும்விடத் தமிழ் நூல்கள் காதலை விசேடித்து ஆதரிக்கின்றன. காதல் ஒழுக்கமே நம் தமிழகத்திற்கும், தமிழ் நூல்களுக்கும் சிறப்பியல்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. களவொழுக்கம் என்னும் இக்காதல் ஒழுக்கத்தை வேண்டுகின்ற பொருள் இலக்கணத்தையுடைய தமிழை ஆராயத் தலைவர் இதனைக் கொள்ள மாட்டார் என்று பரிபாடல் கூறுகின்றது.

''தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழாய்ந்திலார்
கொள்ளாரிக் குன்றுபயன்'' ((பரிபாடல் 9)

என்பது அப்பரிபாடல்.

திருவிருத்தம் என்னும் திவ்யப் பிரபந்தமும், திருக்கோவையார் என்னும் அரும்பெரும் நூலும், அகத்துறை தாங்கி அகமகிழ்விக்கும் ஞானத் தமிழ் நூல்களாகும். அவற்றை நம் பிள்ளை முதலிய சான்றோரும், பேராசிரியரும் அழகுபட விளக்கியுள்ளனர். அவற்றைக் கற்று அறிந்தவர்கள் தாம் ரசிப்பதோடு மற்றவர்களையும் ரசிக்குமாறு செய்வது கடமையாகும்.

The following particulars are furnished regarding the OWNERSHIP OF "THIRUKOIL" the monthly newspaper published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV
(*See* Rule 8)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication .. .. .. | 21-B, Nungambakkam High Road, Madras-34. |
| 2. | Periodicity of Publication .. .. .. | Monthly. |
| 3. | Printer's Name .. .. .. .. | M. N. Shanmugham, L.P.T., Asst. Works Manager. |
| | Nationality .. .. .. .. | Indian |
| | Address .. .. .. .. | Tamil Arasu Press, Madras-600 002. |
| 4. | Publisher's Name .. .. .. | Thiru M. K. Balasubramaniam, I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras-34. |
| | Nationality .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | 21-B, Nungambakkam High Road, Madras-34. |
| 5. | Editor's Name .. .. .. .. | Thiru N. R. Murugavell, M.A., M.O.L. |
| | Address .. .. .. .. | 21-B, Nungambakkam High Road, Madras-34. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| 6. | Name and address of the individual who own the Newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital | Thiru M. K. Balasubramaniam, I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras-34. |

I, M. K. BALASUBRAMANIAM, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*Dated* : 9—3—1977.

*Sd.* M. K. BALASUBRAMANIAM
*Publisher*

# அம்பிகையின் அழகு வெள்ளம்

## (முற்றேடர்ச்சி)

### (52) நின் கண்கள் மதன் வாளி :

அம்பிகை ஒரு காலத்தில் மலையரசனின் மகளாகத் தோன்றினுள். அதனல் அம்மலையரசனின் திருமரபு, அரும்பெரும் சிறப்பைப் பெற்றது. மலையரசனின் மரபாகிய தெய்வ மகுடத்தில், பதிந்து சுடர்விடும் ஒரு பெரும் மணியாக அம்மை திகழ்ந்தாள். அம்மையின் கண்கள் காதளவு நீண்டு சென்று, அக்காதுகளில் உள்ள குழையை முட்டி மோதுகின்றன. அம்மையின் அத்தகைய கண்கள், ஒப்புயர்வற்ற நித்தர் ஆகிய சிவபெருமானின் யோக நிலையை நீக்கி, உலக உயிர்களுக்கெல்லாம் விரும்பத் தக்க போகத்தை அளிக்கும். ஆதலின் அக் கண்களை, மன்மதனின் வெற்றி மிக்க அம்புகள் என்று சொல்லலாம்.

இகல்பொரக் குழையை முட்டும்
இமைமயிர் ஒழுங்கிற் றூவல்,
நிகரறு நித்தர் யோகம்
நீக்கி,வெம் போகம் நல்கும்;
சிகரவெற் பரசன் தொல்லைத்
திருமரபு என்னும் தெய்வ
மகுடமா மணிநின் கண்கள்
வயமதன் வாளி தானே !

மலையரசன் ஆகிய இமவான் 'சிகர வெற்பு அரசன்' என்று சிறப்பிக்கப் பெற்றுன். சிகரம்—மலையுச்சி. வெற்பு—மலை. மலையரசனுக்கு மகளாகத் தோன்றி, அவனது உயர்ந்த குலத்தினை மேலும் உயர்வுடையதாகச் செய்தமையால், அம்பிகையை ''வெற்பரசன் தொல்லைத் திருமரபு என்னும் தெய்வ மகுடத்தின் மாமணி'' எனப் புகழ்ந்தார். மகுடமாமணி—மகுடத்தில் பதிக்கப்பெற்ற, சிறந்த மாணிக்கம் போன்றவள். கண்களின் சிறப்பினை யுணர்த்த, அவைகள் காதளவு ஓடிக் குழையை முட்டுவதாகப் பாடுவது கவிதை மரபு. ''மங்கையர் வதன சீத மதி இரு மருங்கும் ஓடிச் செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு'' என்பது சேக்கிழார் திருவாக்கு. இகல்—பகைமை, போட்டி. பொர—போர் செய்ய. குழை—காதணி, குண்டலம். தூவல்—தூவப்படும் மலர்களையும், அம்புகளையும் குறிக்கும் பொதுப் பெயர். அஃது ஈண்டு இமை மயிர் ஒழுங்கினையுடையது என்னும் குறிப்பால், கண்களை யுணர்த்திற்று. தமக்கு உவமையில்லாதவரும், என்றும் அழியாமல் நிலைபெற்றிருப்பவரும். ஆதலின், சிவபெருமான் ''நிகரறு நித்தர்'' எனப் புகழப் பெற்றுர். நிகர்—ஒப்பு, சமானம். தட்சிணு மூர்த்தியாய் யோக நிலையில் எழுந்தருளியுள்ள சிவபிரானைக் கூடி, அம்பிகை உயிர்களுக்கெல்லாம் போக நுகர்ச்சி கூடுமாறு செய்வித்தலின், ''யோகம் நீக்கி வெம்போகம் நல்கும் மகுடமாமணி'' என்று அம்பிகையைப் புகழ்ந்தார்.

### (53) அருளலாது உலகம் உண்டோ ?

அம்பிகை வேதங்களின் பொருளாய் விளங்குகின்றுள். அவளது கண்கள் செவ்வரி பரந்து எழிலுற்றுத் திகழ்கின்றன. தன் கணவராகிய சிவபெருமானைப் போல, அம்பிகையும் மூன்று கண்களை உடையவளாகத் திகழ்கின்றுள். அம் மூன்று கண்களும் முறையே செம்மை வெண்மை கருமை ஆகிய மூந்நிறங்களைக் கொண்டு, இராசதம் சாத்துவிகம் தாமதம் என்னும் மூன்று குணங்களுக்கும், அம் மூன்று குணங்களுக்குரிய மும்மூர்த்திகளுக்கும், பிறப்பிடமாகவும் நிலைக்களமாகவும் திகழ்கின்றன. இங்ஙனம் முக்குணங்களும் மும்மூர்த்திகளும் தோன்றுதற்கு நிலைக்களனுக, செம்மை வெண்மை கருமை என்னும் நிறங்களைக் கொண்டு, அம்பிகையின் கண்கள் விளங்குகின்றன என்றுல், அம்பிகையின் அருளையன்றித் தனியே உலகம் என்பது ஒன்று உண்டோ? அம்பிகையின் அருளினுலேயே, உலகங்களெல்லாம் நிலைபெற்று இயங்கி வருகின்றன.

வரிவிழிச் செம்மை வெண்மை
வனப்புறு கருமை மூன்றும்
எரிதெறு கற்ப காலத்து
இறந்தமுப் பொருளும் தோன்றும்
கருஎனக் குணங்கள் மூன்றின்
காரணம் என்னப் பெற்றுல்
அருமறைப் பொருளே! உன்றன்
அருளலா துலகம் உண்டோ?

வரிகள் படர்ந்திருத்தல், அழகிய கண்களுக்குரிய இலக்கணங்களில் ஒன்றுதலின் 'வரிவிழி' என்றுர். மூன்று கண்களும் முறையே செம்மை வெண்மை கருமை நிறங்களை உடையனவாகத் திகழ்கின்றன. அவற்றுள் செம்மை நிறம் இராசத குணத்தையும், வெண்மை நிறம் சத்துவ குணத்தையும், கருமை நிறம் தாமத குணத்தையும் குறிக்கின்றன. வனப்பு—அழகு. எரி தெறு—நெருப்பானது அழிக்கின்ற. கற்ப காலம்—பிரளய காலம். பிரளய காலத்தில்

இறந்த மும்மூர்த்திகளும், அம்பிகையின் கண்களினின்று முறையே தோன்றுகின்றனர் என்பது குறிப்பு. இங்ஙனம் குணங்கள் மூன்றின் காரணம் என விளங்கி, மும்மூர்த்திகளையும் தம்மிடமிருந்து மீளத் தோற்றுவிக்கும் கண்களை உடைமையால், அம்பிகையின் சிறப்பை வியந்து ''அருமறைப் பொருளே உன்றன் அருளலாது உலகம் உண்டோ?'' என வினவிப் போற்றினர். உண்டோ என்பதில் ஓகாரம் எதிர்மறை ; இல்லை என்பது கருத்து. இச்செய்யுள் ஆதார ஏது என்னும் அணியாகும்.

## (54) அலைஎறி நயன வேலை :

அம்பிகையின் கண்கள், கடல் போன்று பரந்து விரிந்தவை. அவற்றினின்று கருணை அலைகள் பொங்கி வீசுகின்றன. அக்கண்களில் உள்ள பாவைகள் மூன்றும், முறையே செம் மணி, வெண் மணி, கரு மணி எனத் திகழ்கின்றன. அவைகள் மூன்றும் முறையே சோணை யாறு, கங்கை யாறு, யமுனை யாறு என்னும் மூன்றும் சேர்ந்து கலந்த, திரிவேணி சங்கமம் போன்று உள்ளன. அவற்றில் மூழ்கி, அம்பிகையின் தொண்டர்கள், தம்முடைய காம வெகுளி மயக்கம் என்னும் மும்மலங்களையும் போக்கிக் கொள்கின்றனர்.

அம்மைநின் கருணை பொங்கி
அலைஎறி நயன வேலை
மும்மணி கெழும்உன் தொண்டர்
மும்மலம் களைய மூழ்கச்
செம்மைநற் சோணை யாறு,
தெளிகங்கை யமுனை மூன்றும்,
தம்மயத் தொடும்வந் துற்ற
தன்மைஈ தென்பர் மிக்கோர்!

தன்னை அன்பினால் வழிபட்டுப் போற்றும் அடியவர்களின் காம வெகுளி மயக்கம் ஆகிய மும்மலங்களை, தன்னுடைய கண்களின் அருட் பார்வையால் அம்பிகை போக்கியருள்கின்றாள் என்பது, இச்செய்யுளின் கருத்து. அம்பிகையின் முக்கண்களின் சேர்த்திச்சீர்த்தியைத் திரிவேணி சங்கமம் என்று குறிப்பிட்டருளிய ஆசிரியரின் கவிதைத் திறன், பெரிதும் போற்றற்பாலது. இங்ஙனமே குமரகுருபரரும், திரிவேணி சங்கமம் பற்றித் தமது பாடல்களில் ஆங்காங்குக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

''தம்மேனி வெண்பொடியால் தண்ணளியால் ஆரூரர்
செம்மேனி கங்கைத் திரு நதியே—அம்மேனி
மானே யமுனைஅந்த வாணிநதி இன்குமரன்
தானே குடைவேம் தனித்து''

எனத் திருவாரூர் நான்மணிமாலையில், தியாகராசப் பெருமானை வெண்மை நிறமுடைய கங்கை நதியாகவும், உமாதேவியை நீல நிறமுடைய யமுனையாகவும், முருகனைச் சிவந்த நிறமுடைய வாணி நதியாகவும் குறிப்பிட்டுத் திரிவேணி சங்கமம் என்று சிறப்பித்திருத்தல் இயைபு பற்றி ஈண்டுக் கருதி மகிழத்தகும்.

நயனம்—கண். வேலை—கடல். கெழு முதல்—அடைதல். இச்செய்யுள் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

## (55) நின்கண் இருசெவிக்கு உரைப்பது எது ?

அம்பிகையின் கண்கள் காதளவும் சென்று நீண்டுள்ளன; அது மட்டுமின்றிக் கயல் போலவும், தாமரை மலர் போலவும், நெய்தல் மலர் போலவும் விளங்குகின்றன. அம்மையின் கண்கள் காதளவும் சென்று நீண்டு மீளுகின்ற தன்மை, அக்கண்கள் காதுகளுக்கு ஏதோ ஒரு செய்தியை, மந்திரம் (இரகசியம்) ஆகச் சொல்லுவது போல உள்ளது. அந்நிலையில் கயல் மீன்கள், தாம் அம்பிகையின் கண்களைப் போல இருப்பதனால், தம்மைக் குறித்துத்தான் கண்கள் அம்பிகையின் செவிகளில் ஏதேனும் புறங் கூறுகின்றனவோ? அப்புறங்கூற்றால், தமக்கு ஏதேனும் துன்பம் நேருமோ? என்று அஞ்சிப் பயப்படுகின்றன. அதனால் மிகவும் விழிப்பாகத் தம் கண்களை இமைக்காமல் திறந்து கொண்டேயிருக்கின்றன. கமல மலரும், நெய்தல் மலரும், அம்பிகையின் கண்களைப் போன்றிருத்தலால், அக்கண்கள், கமல மலரையும் நெய்தல் மலரையும் தமக்குப் பகையாகக் கருதி, அப் பகைமை உணர்வால் அம்மலர்களின் நிறங்களைக் கவர்ந்து கொள்ளும்படி, செவிகளிடம் சென்று ஏதேனும் கூறிச் சூழ்ச்சி செய்கின்றனவோ? என்று அஞ்சி, அம்மலர்களில் வீற்றிருக்கும் திருமகளானவள், இராப் பொழுதில் தாமரை மலரும், பகற் பொழுதில் நெய்தல் மலரும், தம் இதழ்களாகிய கதவுகளை அடைக்கச் செய்து, பகற் பொழுதில் தாமரை மலராகிய வீட்டிலும், இராப் பொழுதில் நெய்தல் மலராகிய வீட்டிலும் மாறி மாறிப் போய் இருந்து வருகின்றாள்.

இடம்படர் கொடியே! நின்கண்
இருசெவிக்கு உரைப்பது ஏதென்று,
அடர்ந்தெழு கயலின் கண்கள்
அடைப்பில பயப்பட்டு, அம்மா!
கடும்பகல் கமல வீடும்
கங்குல்வாய் நெய்தல் வீடும்
அடைந்தனள் கமலை ஒன்றொன்று
அடைப்பன கண்டு கொண்டாய்!

அம்பிகையின் கண்களுக்குக் கயல் மீனும், தாமரை, நெய்தல் ஆகிய மலர்களும், ஒப்புமை உடையனவாக விளங்கும் தன்மை, ஆசிரியரால் தற்குறிப்பேற்றம் என்னும் அணி நலம் அமையச், சிறந்தெடுத்துப் புகழ்ந்தோதப் பெற்றுள்ளது. இடம்படர்கொடி—சிவபெருமானுடைய இடப்பாகத்தில் படர்ந்த கொடி போல்பவள் அம்பிகை. கண்கள் காதளவும் சென்று மீளுதலை ''இருசெவிக்கு உரைப்பது'' என்றார். கயல் மீனின் கண்களுக்கு இமை இல்லை. ஆதலின் ''அடர்ந்தெழு கயலின் கண்கள் அடைப்பில'' என்றார். அடைத்தல்—கண்கள் இமைத்தல். அடையாமைக்குப் பயம் காரணம் என்பார் ''பயப்பட்டு'' என்றார். 'பயப்பட்டு' என்னும் தொடர், அச்சம் கொண்டு என்றும், தண்ணீரில் கிடந்து என்றும்

இருபொருள் தந்தது. பயம்—அச்சம், தண்ணீர். கமலை—திருமகள். தாமரையிலும் நெய்தலிலும் திருமகள் தங்கியிருத்தலால், அவற்றை 'வீடு' என்ருர். வெப்பத்தின் மிகுதி கருதிப் பகல், கடும்பகல் எனப்பட்டது. தாமரை பகலிலும், நெய்தல் இரவிலும் மலர்தலால், ''கடும்பகல் கமல வீடும், கங்குல்வாய் நெய்தல் வீடும் அடைந்தனள் கமலை'' என்ருர். கங்குல்—இரவு. 'அம்மா' என்பதும், 'கண்டாய்' என்பதும் முன்னிலை அசை.

## (56) இமையா நாட்டம் :

அம்பிகையின் கண்கள், நம்முடைய கண்களைப் போல இமைப்பதில்லை. அவைகள் இமையா நாட்டம் உடையன. ஏன், அவைகள் இமைப்பதில்லை தெரியுமா? அம்பிகையின் கண்கள் அருளால் திறந்து மலர்ந்திருப்பதனுல்தான், இவ்வுலகம் தோன்றி நிலைபெற்று இருந்து வருகின்றது. அவள் தன் கண்களைச் சற்றே மூடி இமைப்பாளாயின், அவ்வளவிற்குள் இவ்வுலகம் அழிந்தொழிதலும் கூடும். அங்ஙனம் இடர்ப்பாடு எதுவும் நேராமையின் பொருட்டே, அம்மை தன் கண்களைச் சிறிதும் இமையாமல் இருக்கின்ருள். மேலும் இவ்வுலகில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் தாயாக விளங்குபவள் அவள்! ஆருயிர்களாகிய குழந்தைகள் அனைத்தையும், எத்தகைய இடரும் நேராதபடி விழிப்பாக இருந்து பரிவுடன் பாதுகாக்கும் கடமையும் பொறுப்பும் அவளுக்கு உண்டு. அதனுல், எந்த ஒரு சிற்றுயிர்க்கும், எத்தகைய சிறு துன்பமும் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற அளப்பரும் பெருங்கருணையினுல்தான், தன் கண்களை மூடி இமைக்காமலே, அகல விழித்துப் பார்த்துக் கருத்தாக இருந்து, உயிர்களைப் பாதுகாத்துக் கொண்டு, அம்பிகை இமையா நாட்டம் உடையவளாகத் திகழ்கின்ருள். இத்தகைய இரக்கம் மிக்க இயல்புடைய அம்மையின் கண்களைக், 'கணையினும் கொடியன' என்று கூறுதல் பொருந்துமோ?

''இணைவிழி இமையா நாட்டம்
எய்தியது அலரத் தோன்றும்
பணைநெடும் புவனம், இந்தப்
பார்வைசற் றிமைக்கு மாயின்,
துணையிழந்து அழிவ தெண்ணித்
துணிந்தநின் கருணை என்ருல்,
கணையினும் கொடிய தென்னக்
கடவதோ? கடவுள் மாதே!''

'மீன்களுக்குக் கண் இமைகள் இல்லை. அதனுல் மீன்கள் கண்ணை இமைப்பது இல்லை. தம் கண்களை இமைக்காமல் திறந்து கொண்டேயிருத்தல், மீன்களுக்கு இயல்பு.

''மீன்கண் துஞ்சும் பொழுதும்
யான்கண் துஞ்சலன்; யாதுகொல் நிலையே?''

எனவரும் நற்றிணை வரிகளால், மீன்கள் கண் இமையாமல் இருக்கும் தன்மையினை உணரலாம். இத்தகைய மீன்களைப் போல, அம்பிகையும் தன் கண்களை இமைக்காமல், இடையருது எப்பொழுதும் மிக விழிப்பாக இருந்து உலகத்தைப் பாதுகாத்து வருகின்ருள். ஆதலின், அம்பிகைக்கு மீனுட்சி என்னும் ஒரு காரணப் பெயர் வழங்குவதாயிற்று.

அம்பிகையின் இமையா நாட்ட இயல்பினை ''அலரத் தோன்றும் பணைநெடும் புவனம், இந்தப் பார்வை சற்று இமைக்குமாயின் துணை இழந்து அழிவது எண்ணித் துணிந்த நின் கருணை'' எனத் தற்குறிப்பேற்றமாகப் புகழ்ந்து போற்றினர். கடவுள் மாது—தெய்வ நலஞ் சான்ற அம்பிகை. நாட்டம்—கண்கள், பார்வை. அலரத் தோன்றும் புவனம் —விரிவது காரணமாகத் தோன்றும் உலகம். கணை—அம்பு. என்னக் கடவதோ—என்று சொல்லுதல் பொருந்துமோ? மகளிரின் கண்களை வேல் என்றும், கணை என்றும் பலவாறு கூறுவதுண்டு. அம்முறையின் அம்பிகையின் கண்களையும், சிலர் கணை (அம்பு) என்று கூறமுற்படுவர். அருளால் உலகை எல்லாம் காக்கும் இனிய கண்களை, கூர்மையால் உலகை அழிக்கும் கொடிய கணையாகக் கூறுதல் பொருந்தாது என்பது கருத்து. இச்செய்யுளில் பொருள் ஏது என்னும் அணியும், தன்மை நவிற்சி என்னும் அணியும் அமைந்து வந்தன.

## (57) கடிநகர் நிலவு காட்டிலும் காயுமே !

அம்பிகையின் கண்கள் நீண்டவை. கரிய நெய்தல் மலர்களைப் போன்றவை. அவற்றில் அருள் நிறைந்து கடல் போலப் பெருகி நிற்கும். அம்பிகையின் கடைக்கண் நோக்கமாகிய அருட் பெருங் கடலில் மூழ்கினுல், பிறவித் துன்பமாகிய கடலைக் கடக்கலாம். ஆதலால் பிறவித் துன்பமாகிய கடலைக் கடக்க, அம்பிகையின் கடைக்கண் நோக்கமாகிய அருட்கடலில் மூழ்குதல் வேண்டும். அது தவ நலஞ் சான்றவர்களுக்கே இயலும். எனினும், மாடகூடங்கள் நிறைந்த நகரத்தில் காய்கின்ற நிலவே, கொடிய கரிந்த காடுகளிலும் கூடக் காய்வது போல, தவநலம் அற்ற என் போன்ருரையும், நின் அருட் பார்வையாகிய கடலில் மூழ்கித் திளைக்கும்படி செய்தருள்க !

நெடியகட் கரிய நெய்தல்
நிறையருட் சலதி எய்தாக்
கொடியனேன் பிறவித் துன்பக்
குறைகடல் கடந்து மூழ்க
விடின், அதிற் குறைவ துண்டோ?
மெய்த்தவர்க்கு ஒழிந்து ருதோ?
கடிநகர் நிலவு காட்டிற்
காயுமே! கருணை வாழ்வே!

அம்பிகையின் கண்களை ''நெடியகட் கரிய நெய்தல்'' என்ருர். அம்பிகையின் கண்களினின்று அருள் பொங்கிப் பெருகுதலின் ''நிறை அருட் சலதி'' என்ருர். சலதி—கடல். அம்பிகையின் அருள் நோக்காகிய கடலில் மூழ்கித் திளைக்கும் நல்வினைப் பேறு வாயாத தம்மைக் 'கொடியயேன்' என்று குறிப்பிட்டுக் கொண்டார். அருட் கடலில் மூழ்கினுல் பிறவிக் கடலைக் கடக்கலாம். அருட் கடலில் திளைத்தல்,

மெய்த்தவம் உடையவர்க்கே இயலுமாதலின் ''மெய்த்தவர்க்கு ஒழிந்து உருதோ?'' என்ருர். தவநலம் இல்லாதவர்க்கும் அம்பிகை அருள் செய்யலாம்; அங்ஙனம் செய்வதனுல் அம்பிகைக்கு நேரும் இழுக்கு ஏதும் இல்லையென்பார். ''நிறையருட் சலதி'' குறைவதுண்டோ? என்ருர் நல்லோர்க்கு மட்டுமேயன்றித் தீயோர்க்கும் அருள் செய்தல் முறைமையேயாம் என்பார், ''கடிநகர் நிலவு காட்டில் காயுமே'' என்ருர். கருணை வாழ்வு—கருணையினுல் மன்னுயிரையெல்லாம் வாழ வைப்பவள். ஓகாரங்கள் எதிர்மறை ; வினு எனினும் அமையும். 'காட்டிலும் காயுமே' என்பதில் ஏகாரம் தேற்றம். இஃது ஒட்டு அல்லது பிறிது மொழிதல் என்னும் அணியாகும்.

## (58) யார்உன் மதர்விழி பரவ வல்லார்?

அம்பிகை கருமையான கூந்தலையும், நெற்றியிலே கண்ணையும் உடையவள். அவளது கூந்தலின் பின்னல் கவின் மிக்கது. அவளது கன்னத்தின் அடியில், அருமை மிகுந்த குழைகள் தாழ்ந்து தொங்குகின்றன. அம்பிகையின் கண்கள், அக்குழைகளின்பாற் சென்று மோதி வெற்றி கொள்கின்றன. அங்ஙனம் வெற்றி கொள்ளும் கடைக் கண்களாகிய பார்வையின் கூர்மை, மன்மதனின் வில்லில் நெருக்கமாகத் தொகுக்கப் பெற்ற அம்பின் நிமிர்ந்த கூரான நுனியைப் போன்றிருக்கும். அம்பிகையின் அத்தகைய மதர்த்த விழிகளின் சிறப்பை, அளவிட்டுப் புகழ்ந்துரைக்க வல்லவர்கள் ஒருவரும் இலர்.

கருங்குழல் நுதற்கட் பின்னற்
கவின்கடைக் கபோலம் தாழ்ந்த
அருங்குழை கடந்த கண்ணின்
அயிற்கடை, அனங்க சாபம்
நெருங்குறத் தொடுத்த ஏவின்
நிமிர்தலை ஏய்க்கும் என்ருல்,
மருங்கில் பொற்றிருவே! யார்உன்
மதர்விழி பரவ வல்லார்?

காதில் இடப்பட்டு வில்லைப் போல் வளைந்து குழைவு பெற்றிருக்கின்ற அதனுல், அவ்வணியைக் ''குழை'' என்றும்; அது தங்கியிருக்கும் இடம் எவ்விடமோ என்று ஐயுருமல் அறியும் பொருட்டுக் ''கருங்குழல் நுதற்கட் பின்னற் கவின்கடைக் கபோலம் தாழ்ந்த அருங்குழை'' என்றும்; சிறப்பித்து உரைத்தார்.

அம்பிகையின் சிறப்பினை வியந்து ''மருங்குஇல் பொன் திருவே'' என்ருர். மருங்கு—இடை. உள்ளதோ இல்லதோ என்று ஐயுறும் நிலையில் நுண்ணியதாக இருத்தல் பற்றி, ''மருங்குஇல்'' என்ருர். ''மருங்குஇலா நங்கையும், வசையில் ஐயனும்'' என்ருர் கம்பரும். கபோலம்—கன்னம். கடந்த—வெற்றிகொண்ட. அயில்—கூர்மை. அனங்கன்—மன்மதன்; அங்கமில்லாதவன் என்பது பொருள். சாபம் —வில். ஏ—அம்பு. ஏய்க்கும்—ஒக்கும். மதர்விழி—மதர்த்த பெரிய கண்கள். பரவுதல்—புகழ்தல்.

## (59) மாரன் பழம் பகை தீரப் பெற்ருன் :

அம்பிகை, மயில் போன்ற சாயல் உடையவள். அவளது கபோலம், கண்ணுடி போன்றது. அதனுல், அம்பிகை அணிந்துள்ள தோடுகள், அக்கன்னத்தில் நிழல்போலத் தோன்றுகின்றன. காதுகளில் உள்ள தோடுகள் இரண்டும், அவற்றின் நிழலாகக் கன்னத்தில் ஒளி விடுகின்ற தோடுகள் இரண்டும் ஆகிய நான்கும், நான்கு சக்கரங்கள் போல அமைந்து நிற்க, அம்பிகையின் முகமானது தேர்போல விளங்குகின்றது. அத்தேரின் துணையைக் கொண்டு, மன்மதன், சூரிய சந்திரர்களை இரு சக்கரங்களாகவும், பூமியைத் தேராகவும் கொண்டு, முன்னெரு காலத்தில் திரிபுரங்களை எரிக்கச் சென்ற தேர்ப்பாகர் ஆகிய சிவபெருமான் ஆகிய தனது பழைய பகைவரை, வெற்றி கொள்ளும் வாய்ப்புப் பெற்ருன்.

தோகை! நின் கபோலம் சார்ந்த
துணைநிழற் சுவடும், தோடும்
ஆக, இவ் உருளை நான்கின்
ஆனன இரதம் வாய்த்தோ?
ஏகநற் புடவி வட்டத்து
இருசுடர் ஆழித் திண்தேர்ப்
பாகரைப் பொருது மாரன்
பழம்பகை தீரப் பெற்ருன்.

சிவபெருமான், சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், பூமியைத் தேராகவும் கொண்டு, முன்னெரு காலத்தில் திரிபுரங்களை எரிக்கச் சென்றனர் ஆதலின், அவரைப் ''புடவி வட்டத்து இருசுடர் ஆழித் திண்தேர்ப் பாகர்'' என்று குறிப்பிட்டார். மாரன்—மன்மதன், காமதேவன். தட்சிணுமூர்த்தியாய் யோகநிலையில் இருந்தபோது, தம்மீது மலர் அம்புகளைச் சொரிந்தமைப் பற்றி மன்மதனைச் சினந்து எரித்தவர் ஆதலின், சிவபெருமான் மன்மதனின் பழம் பகை ஆயினர். அம்பிகையின் திருமுகம், யோக நிலையில் இருந்த சிவபிரானைக் கவர்ந்து, அவரைக் கல்யாணசுந்தரர் ஆகவும், உமாமகேசுவரர் ஆகவும் கோலங் கொள்ளச் செய்ததனுல், அம்பிகையின் முகமாகிய தேரைத் துணையாகக் கொண்டு, மன்மதன் (மாரன்) சிவபெருமானை வெற்றி கொண்டு, தன் பழம் பகை தீரப் பெற்ருன் என்ருர். மன்மதன் சிவபெருமானை வெல்லுதல் ஒருபோதும் இயலாதாகலின், மன்மதன் வென்ருன் என்னுது, அம்பிகையின் ''ஆனன இரதம் வாய்த்தோ? மாரன் பழம்பகை தீரப் பெற்ருன்'' என வினவி வியந்தார். ஆனனம்—முகம். இரதம்—தேர். வாய்த்தல்—துணையாகக் கிடைக்கப் பெறுதல். இருசுடர்—சூரிய சந்திரர். ஆழி—சக்கரம். உருளை—சக்கரம்.

இதனுள் தோடும், தோட்டின் நிழலும், முகமும், முகமேற் கவித்த முடியும் தேர்போல் இருத்தலின், அதனைத் தேராக உருவகம் செய்து, அதனை ஏதுவாக எடுத்து உரைத்தமையால், இச்செய்யுள் உருவக ஏது என்னும் அணியாகும்.

## (60) விலையில் பாடல் அமுது :

அம்பிகை, பெருமை மிக்க மடந்தைப் பருவத்தினள்! அவளை வெண் தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகள் அன்புடன் வணங்கி வழிபடுகின்றாள். அங்ஙனம் வழிபடுங்கால், இனிய சிறந்த இசை மிக்க பாடல்களைப் பாடித் துதிக்கின்றாள். அவ்விசை அமுதமாகத்திகழ்ந்து அம்பிகையின் செவிக்கு இனிய உணவாக அமை கின்றது. அவ்வினிய பாடல் இசையைக் கேட்டு அம்பிகை மகிழ்ச்சியுற்றுத் தன் திருமுடியை அசைத்துப் பாராட்டுகின்றாள். அங்ஙனம் அம்பிகை திருமுடியை அசைக்குங்கால், அவளது காதில் உள்ள குண்டலங்கள், ஒன்றோடொன்று மோதுகின்றன. அதில் இருந்து 'பூரை பூரை' என்னும் ஒரு வகை மங்கல ஓசை பொலிவு பெறுகின்றது.

> வேரிநாள் மலர்க்குள் வாணி
> விலையில் பாடல் அமுதெலாம்
> சேர, மாமடந்தை நின்
> செவிக்குணு அருத்தவே,
> ஆர மாலை முடி அசைப்ப,
> ஆடி எற்று குண்டலம்,
> பூரை பூரை என்றசொற்
> பொலிந்து ஓசை பெற்றதே!

கலைமகள் வெண் தாமரை மலரில் வீற்றி ருப்பவள் ஆதலின், அவளை ''வேரிநாள் மலர்க் குள் வாணி'' எனப் புகழ்ந்தார். வேரி—வாசனை. நாள் மலர்—அன்று மலர்ந்த அழகிய புதிய பூ. வாணி—கலைமகள், சரசுவதி. கலைமகள் அம்பிகையை அன்புடன் துதித்துப் பாடும் பாடலை வியந்து ''விலையில் பாடல்'' என்று சிறப்பித்தார். அப்பாடல்களை, அம்பிகை தன் திருச் செவிகளில் இனிய விருந்தாக ஏற்று மகிழ்ந்ததனல் ''விலையில் பாடல் அமுதெலாம் செவிக்கு உணு அருத்த'' என்றார். உணு — உணவு, விருந்து. அருத்துதல்—உண்பித்தல், அருந்தும்படி செய்தல். இனிய நல்ல இசைப் பாடல்களைக் கேட்டு மகிழ்வுறுவோர், பாடு வோரைப் பாராட்டிச் சிறப்பிக்கும் பொருட்டுத் தலையை அசைப்பராதலின், ''ஆரமாலை முடி அசைப்ப'' என்றார். அம்பிகை திருமுடியை அசைத்தபோது, அவள் காதில் அணிந்திருந்த குண்டலங்கள் அசைந்து ஒன்றோடொன்று மோதி ஓசை எழுப்பின என்பார், ''ஆடி எற்று குண்டலம், பூரை பூரை என்ற சொற் பொலிந்த ஓசை பெற்றது'' என்றார். பூரை பூரை—போதும் போதும். சேர—ஒரு மிக்க. எற்றுதல்—தாக்குதல், மோதுதல். இச்செய் யுள் தற்குறிப்பேற்றம் என்னும் அணி. இவ் விரண்டு செய்யுட்களும், அம்பிகையின் காது களின் சிறப்பைப் புகழ்ந்தன.

(தொடரும்)

—ஆசிரியர்.


# அருள்திரு கொளஞ்சியப்பர் திருக்கோயில்
## மணவாளநல்லூர் — 606 109

விருத்தாசலம் வட்டம் : : தென் ஆற்காடு மாவட்டம்

* * * * * * * * * * * * * * * *

மேற்கண்ட ஆலயத்தில் பங்குனி உத்திரப் பெருவிழா **25—3—1977** வெள்ளிக்கிழமை காலை **6.00** மணிக்கு மேல் **7.00** மணிக்குள் துவஜாரோகணத்துடன் தொடங்கி **3—4—1977** ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவெய்துகின்றது.

**2—4—1977** மற்றும் **3—4—1977** அன்று காவடி எடுத்தலும், காணிக்கை செலுத்துதலும் ஆன மிகச் சிறப்பான உற்சவமாகும்.

திருவிழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள், பக்திப் பாடல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் அனைவரும் வருகைதந்து பங்குனி உத்திரப் பெருவிழாவில் கலந்துகொண்டு இறையருளுக்குப் பாத்திரராகும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ஒ-ம்.) M. இராமசாமி,
நிர்வாக அதிகாரி/தக்கார்.

மணவாளநல்லூர்,
8—3—1971

# சைவசித்தாந்த சாத்திரங்கள்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

(முற்றொடர்ச்சி)

## இருவினையின் இயல்பு:

விருப்பு வெறுப்பு காரணமாக நிகழும் முயற்சியின் வகைகளாகிய நினைவு, மொழி, செயல் என்பவை நிகழும்போது, அவை இருவினை, தூலகன்மம், ஆகாமியம் வருவினை என்னும் பெயர்களால் குறிக்கப்பெறும். இவை தோன்றுந்தோறும், இவற்றின் விளைவாய், பயிற்சி வடிவில் புத்தியின்கண் அருவமாய் வளரும் பயன்கள் உள்ளன. அப்பயன்களே புண்ணிய பாவம் எனவும், அபூர்வகன்மம் எனவும், சஞ்சிதம் எனவும், தொல்வினை எனவும் வழங்கப்படும். இங்ஙனம் புத்தியின்கண் வளரும் புண்ணிய பாவங்கள் முதல்வன் திருவருளால் ஒன்றும் பலவும் இயைந்து தம்தம் பயன்களை மாயையினின்றும் தோற்றுவிக்க வல்லனவாய் அமையும். இவ்வாறு அமையும் நிலையே பக்குவம் எனப்படும். வினைகள் செய்யப்பட்ட முறையானன்றி, பக்குவப்படும் முறையினால், இறைவன் ஆணையால் செலுத்தப்பெற்று, அதிநுட்பமாய் உயிர்களின் உணர்வில் இன்பத் துன்பங்களை உலகப் பொருள்கள் மூலமாகத் தோற்றுவிக்கும். இவ்வாறு உலகப்பொருள் மூலமாகத் தன்னைப்பற்றியும், சூழ்நிலைகளைப்பற்றியும் எக்காரணமும் தோற்றாதவகையிலும் இன்பதுன்ப நுகர்ச்சியாய் வெளிப்படும் நிலையில், அவை பிராரத்தம், ஊழ், பால், முறை, தெய்வம், உண்மை முதலிய குறிகளால் வழங்கப்படும். இதனால் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்பவை கான்மியமாகிய இருவினையின் மூன்று நிலைகள் என்பது விளங்கும்.

வினைகளையும் வினைப்பயன்களையும் ஒப்புக்கொள்ளும் சமயத்தவரில் பலர் வினைகளே தம் பயனைத்தரவல்லன; முதல்வனது உணர்வாற்றல் என்னும் ஆணையின் செயல் வேண்டற்பாலது அன்று என்பர். இவ்வாறு கூறுவோர் சமணரும் புத்தரும் ஆவர். ஆயினும் சிவநெறித் தலைவர்கள் இருவினைகள் முதல்வன் ஆணைவழியே பயன் விளைப்பன என்றும், அங்ஙனம் வினைவழி நின்று உயிர்களுக்கு உபகரிக்கும் முதல்வனதுஆணை மறைப்பாற்றல் (திரோதான சத்தி) எனப்படும் எனவும் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியனார் பால்வரை தெய்வம் எனவும் அத்தொடரைப் பின்பற்றி ஆசிரியர் திருவள்ளுவனார் ஊழை'வகுத்தான் வகுத்த வகை' எனவும் குறித்தனர். ஆதலின் அத்தமிழ் மக்கள் கொண்ட அரிய கொள்கையே சிவநெறியிற் கொள்ளப்படுவது.

## ஊழும் முயற்சியும்:

ஒரு பிறப்பில் ஓர் உயிர்க்கு ஊழினால் வருவதற்குரிய சூழ்நிலையும், செல்வ வறுமைகளும், உயர்வு தாழ்வுகளும், இன்பதுன்பங்களும் அதன் கருவின்கண் அருவமாக அமைக்கப் பெறுபவை ஆகும். அவை விளையவேண்டிய காலங்களில் உருவமாய் வெளிப்படுவதற்கு முயற்சி தேவை. கிணறுகள் தோண்டுதற்கண் அதன்கண் முன்னரே அமைந்துள்ள நீரோட்டத்தின் இயல்பை ஒத்தது, கருவின்கண் அமைந்த ஊழ். கிணற்றை அகழ்ந்தாலன்றி நீரோட்டத்தின் பயன்எய்த மாட்டாமைபோல, முயற்சியான் அன்றி அருவாய் அமைந்த ஊழ் வெளிப்பட்டுப் பயன் விளைப்பதில்லை. அகழும் தொழில் போன்றது முயற்சி. இம் முயற்சியை உடம்பு முதலியவற்றை உயிர்க்குக் கொடுத்த முதல்வன் கொடுக்கின்றான். ஆதலினால் உண்மையில் முயற்சி என்பது முதல்வனது பணியே ஆகும். ஆயினும், முயற்சி செய்து பயன் எய்தும் உயிர்கள், இன்பம் விளையின் அம்முயற்சியைத் தம்முடையது என்று பெருமிதம் கொண்டும், துன்பம் விளையின் அம்முயற்சியைப் பிறரால் திரிபுண்டது எனப் பிறரை வெறுத்து இகழ்ந்தும், யான் எனது என்னும் செருக்குடன் முயலும். அம்முயற்சியை இறைவன் பணி அல்லது இறைவன் ஆணை எனக் கொள்வதில்லை. கொள்ளாமையினால், முதல்வன் உயிர்களை அவற்றின் போக்கில்விட்டு, அம்முயற்சியை அப்பொழுது நுகர்ந்த இன்பத் துன்ப நுகர்ச்சியின் துணைக் காரணமாக மட்டும் நிறுத்தாமல், மேலை நுகர்ச்சிக்கு உரிய வித்தாகவும் முதிரச் செய்கின்றான். இதனால் இன்றைய முயற்சியே பின்னைக்கு ஊழாய் வருகின்றது என்பது உணரப்படும்.

## ஊழும் இறைபணியும்:

மேற்கூறியபடி முதல்வன் நம்மை உயிர்க்குயிராய் நின்று அறிவித்தும், செலுத்தியும் வருகின்றான் எனவும், அவன் அவ்வாறு நம்மிடத்து

முயற்சிகளை நிகழ்வித்து முன்னை வினைக்கு ஏற்றபடி இன்பத் துன்பங்களை நுகரச்செய்வது ஆணவ நோயும் கன்மநோயும் வலி குன்றுதற்குரிய மருந்தே ஆகும் எனவும், இருவினைகளாகிய தீய வட்டத்தினின்றும் ( Vicious Circle ) நீங்குவதற்கு வழியாவது அவன் ஆணையாகிய அறத்தின்வழி நின்று அவனது உண்மை நிலையை உணரமுயல்வதே ஆகும் எனவும் கொள்வோர், இருவினைகளையும் வினைப்பயன்களையும் பிறப்பிற்கே காரணம் என ஒப்பக் கருதி, இறைவன் அருள்வழி நிற்பர். இங்ஙனம் அருள்வழி நிற்றலே இறைபணி அல்லது இறைவழிபாடு ஆகும். தான் செய்யும் நல்வினைகளை இறைபணி எனச் செய்தால் அவை அறமாகும். அறமாவது மலமாசை அறுப்பது. அவ்வாறன்றி யான் செய்தேன், பிறர் செய்தார் என்னும் உணர்வோடு செய்வனவெல்லாம் இருள்சேர் இருவினையாய்ப் பிறப்பையே தரும்.

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு'

என்னும் திருக்குறள் உள்ளத்திற் கொள்ளத் தக்கது.

## உயிரின் உணர்வு நிலைகள்:

நமக்கு அன்றாடம் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து உணர்வு நிலைகள் இறங்குமுறையிலும் பின் ஏறுமுறையிலும்நிகழ்வதைப் பொதுவாக நோக்கி உணரலாம். இறங்குமுறையில் அறிவு விளக்கம் குன்றி, இறுதியில் முழு அறியாமையில் அழுந்திவிடுகின்றோம். அந்நிலையே நாம் அகவிருளில் முற்றிலும் அழுந்தியிருக்கும் நிலை. அந்நிலையிலும் மாயையின் கலக்குண்ட பாகமும், சூக்குமவாக்கு எனப்படும் நாதமும், நம்மோடு புணர்ந்து உள்ளன எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. அவை உயிர்க்குச் சார்பாயிருத்தலால்தான் விழித்தபின் இன்பமாக உறங்கினேன் என்னும் மறித்துணர்வு உண்டாகின்றது. மாயையின் கலக்குண்ட பாகத்தை 31-ஆம் தத்துவம் எனவும், நாதத்துக்குப் பற்றுக்கோடாக உடன் உள்ள சுத்தமாயா காரியத்தைச் சிவம் அல்லது நாதம் என்னும் 36-ஆம் தத்துவமாகவும் சித்தாந்தநூல்கள் கூறும். இக்காரிய மாயையைத் தைத்திரீய உபநிடதம் ஆனந்தமய கோசம் என்னும். இனி அதிலிருந்து ஏறும்போது, அறிவு விளக்கம் மிகுவதைக் காண்கின்றோம். மிகுவதற்குக் காரணம் பிற 30 தத்துவங்களையும் சாத்துவிகங்களையும் உயிர் கூடப் பெறுவதே ஆகும். அவற்றை முறையே கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்குமசரீரம், தூல சரீரம் என நான்கு வகையில் அடக்கிக் கூறலாம். காரியமாயை இவ்வரிசையில் நோக்கும்போது காரணசரீரம் எனப்படும். கஞ்சுக சரீரம் முதலிய நான்கும் முறையே விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், பிராணமய கோசம், அன்னமய கோசம் எனவும்படும். இவை மாயையின் காரியங்கள். அகவிருளாகிய ஆணவம் இருள்போல நின்று நம் அறிவை மறப்பதாக இருக்க, மாயையின் காரியமாகிய இவ்வுடம்புகள் விளக்குப்போல நின்று உதவுகின்றன. உடம்புகளைக் கோசம் என்றல் உபநிடத வழக்கு.

'விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து'

என்பது திருவருட்பயன் குறட்பா. திருவருள் ஒளிவெளிப்படும் வரையில் மாயையின் காரியங்களாகிய உடம்பு, கரணம், நிலன், நுகர்ச்சிப் பொருள் என்பவை, இருவினைக்கு ஏற்றபடி முதல்வனால் கொடுக்கப்பட்டு வந்து, உயிர்களுக்குச் சிற்றறிவை விளக்கி நிற்கும் என்பது பாட்டின் கருத்து.

மேற்காட்டியபடி உள்நோக்கு தற்சோதனை ( Introspection ) நெறிநின்று நோக்கின், உயிர்க்கு மூன்று அடிப்படை உணர்வு நிலைகள் உள்ளன என்பதும், அந்நிலைகள் முறையே ஆணவச்சார்பும், மாயேயச்சார்வும், திருவருட்சார்பும் பற்றி நிகழ்வன என்பதும் தெளியப்படும். இக்காரண அடிப்படை நிலைகள் முறையே கேவலம், சகலம், சுத்தம் எனப்படும். கேவலத்திலிருந்து சகலத்தைத் தலைப்படும்போது தான் முதற்கண் கூறிய உயிர்ப்படக்கம், பேருறக்கம், உறக்கம், கனவு, நனவு என்னும் ஐந்து துரியநிலைகள் உள்ளன. இனி நனவு நிலையைத் தலைப்பட்டபின் உலகப் பொருள்களைப் பொறிகளாற் பொதுப்படி உணர்தலும், பின் அவற்றை அந்தக் கரணங்களால், 'இஃது இன்னது' எனத் தெளிந்து அறிதலும், பின் அவற்றை விரும்பியோ வெறுத்தோ இன்பத் துன்ப மயக்கமாகிய வேதனைப்படுதலும் என ஆக்கநிலைகள் உள்ளன. இவ்வியல்புள்ள சகல நிலையில் நின்று அந்தக்கரணவிருத்திகளைக் கடந்து திருவருள் நிலையை எட்டும் சுத்தநிலைக் கண்ணும் ஆக்க நிலைகள் கூறப்படுகின்றன.

இங்ஙனம் நிகழ்கால அனுபவங்கொண்டு நம் சென்ற காலத்தையும், எதிர்காலத்தையும் உணரலாம். சென்ற காலத்தில் அகவிருளைப் பற்றி மூடமாய்க் கிடந்தோம். இப்பொழுது அம்மூடநிலை சிறிது நீங்கப்பெற்று ஒருபுடைச் சிற்றறிவு நிலையாகிய மருள்நிலையில் உள்ளோம். இனி இருளும் மருளும் முற்றிலும் நீங்குதற்கு உரிய திருவருள் ஒளிநிலையைப் பெறும் சிறப்பு எதிர்காலத்தில் உள்ளது.

## வேண்டும் செய்தி முறைகள்:

இறைவனால் சிவஞானிகள் மூலம் விளக்கப் பெற்ற பொய்தீர் ஒழுக்கநெறியே அறம் எனப்படும். அறநூல்களின் வழிநில்லாமை பாவம்; முதல்வன் அருளைக் கருதாமல் அறநூல்வழி நிற்றல் புண்ணியம்; அறநூல்களைச் சார்ந்து திருவருள் வழி நின்று செய்வன சிவபுண்ணியம் எனப்படும் இறைவழிபாடாம். இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம் என மூவகைப்படும். இவற்றைப் பயன்கருதாது இருவினையொப்பும்,

மலபரிபாகமும் உண்டாகும். அந்நிலையில், உயிர்க்குயிராயுள்ள முதல்வன் அருளாசான் ஆகி, தீக்கையால் வினையை அழித்து, உபதேசத்தாலும், பயிற்சியாலும் இருளும் மருளும் கடந்து திருவருள் ஒளியைத் தலைப்படவைப்பன். அவ்வருள் ஒளியே உயர்ஞானம் அல்லது மெய்யுணர்வு எனப்படும். அது மலவாதனையைத் துரந்து உயிரைத் தன் வயப்படுத்திப் பேரின்பச் சிவனைத் தலைப்பட்டு ஒன்றி இன்புறச் செய்யும்.

இங்ஙனம் இருளிலிருந்து ஒளிக்கு, அசத்தினின்று சத்திற்கு, இறப்பினின்று இறவா நன்னிலையாகிய அமுதநிலைக்குச் செல்லும் நெறியைச் செம்மையாக எடுத்து உணர்த்துவனவே சித்தாந்த சாத்திரங்கள்.

## திருக்கோயிலில் வைத்து வழிபடப்படும் திருவுருவங்கள்:

நாம் பிற பொருள்களை அறிந்து தொழிற்படுவதற்குத் துணையாக நிற்பது மாயையின் காரியமாகிய உடம்பு; இது நமக்குச் சிற்றறிவையும், சிறுதொழிலையும் எழச்செய்யும். ஆயின், முதல்வன் எல்லா முதன்மையும், எல்லா அறிவும், எல்லா அனுக்கிரகமும் உடையவன் ஆதலால், அவன் தான் மேற்கொள்ளும் திருவுருவம் உணர்வாற்றல் எனப்பட்ட திருவருட்சத்தியால் ஆவதே ஆகும். அது ஆடி அல்லது குவிப்பளிங்கால் ஒளிக்கதிர்த் தொகுப்பாக உண்டாக்கப்படும் உண்மைப் பிரதிபிம்பம் (Real image) போன்றது. இவ்வருள் உரு பிரகிருதி காரியமாகிய பிராகிருதம், மாயையிற் காரியமாகிய மாயேயம், விந்துவின் காரியமாகிய வைந்தவம் என்னும் மூன்றனுள் வைத்துப் பேசப்படாமல், அருட்சத்தி காரியமாகிய சாத்தம் என ஆகமங்களுட் கூறப்படும். இதனால் முதல்வனுக்கு எக்காரணம் பற்றியும், உபசாரமாகவும், பிறப்பு இறப்புக்கள் சிவநெறியில் கூறப்படுதல் இல்லை. அவன் அன்பர்க்குக் காட்டியருளும் திருவுரு அவன்றன் அருளாற்றலால் அமைவது ஆதலினால், அது பிறவா யாக்கை எனப்படும்.

திருக்கோயில்கள் சாத்திரங்களிற் கூறப்படும் உண்மைகளை மக்கள் கண்கூடாகக் கண்டு, முதல்வனோடு அணுக்கமான தொடர்புகொண்டு, திருவருள் நெறிநின்று, பொருளும் பொன்னும் போகமும் அருளும் அன்பும் அறனும் என்னும் எல்லா நலன்களும் எளிதிற் பெற்றின்புற்று வாழ்வதற்குத் துணை புரியும் திருவருள் நிலைத்தானங்கள் ஆகும். சாத்திரங்கள் சொல்வடிவில் இருந்து சிவநெறியை உணர்த்துவன; அவற்றின் பிரதிப் பிழம்பாக இருந்து மக்களைச் சிவநெறியில் உய்ப்பவை திருக்கோயில்களே ஆகும். திருக்கோயில்களையும் திருமுறைசாத்திர வேத ஆகமங்களையும் தொடர்புடுத்தி நிற்பவை நம்முடைய சைவ ஆதீனங்களாகும்.

''குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே?''

என்னும் அப்பர் திருவாக்கு கருத்தில் வைக்கத் தக்கது.

திருக்கோயில் முதலிய இடங்களில் முதல்வனுக்கு உரியனவாக வைத்து வழிபடப்படும் திருவுருவங்கள் எல்லாம் ஓரோர்காலத்து அவன் தவமிக்கோர்க்குக் காட்டியருளிய திருவுருவங்களே ஆகும். அவை போக வடிவம், யோக வடிவம், கோரவடிவம் என மூவகைப்படும். போகவடிவங்கள் போகத்தை விரும்புவோரால் தியானம் பூசை முதலியவை செய்தற்கு உரியவை. ஞானயோகத்தை விரும்புவோர் வழிபடுதற்கு உரியவை யோகவடிவங்கள். பகைவராலும் நோயாலும் நலிந்தோர் வழிபட்டு வினை நீக்கம் பெறுவதற்கு உரியவை கோர வடிவங்கள்.

''உருவருள்; குணங்களோடும்
உணர்வருள்; உருவில் தோன்றும்
கருமமும்அருள்; அரன்றன்
கரசரணாதி சாங்கம்
தரும்அருள்; உபாங்கம் எல்லாம்
தான்அருள்; தனக்கொன்றின்றி
அருளுரு உயிருக்கென்றே
ஆக்கினன் அசிந்தன்அன்றே''

''போகியா யிருந்துயிர்க்குப்
போகத்தைப் புரிதல்ஓரார்;
யோகியாய் யோகமுத்தி
உதவுத லதுவும்ஓரார் ;
வேகியானாற் போல்செய்த
வினையினை வீட்டல் ஓரார் ;
ஊகியா மூடரெல்லாம் உம்பரின்
ஒருவன் என்பார்''

என்பவை சிவஞான சித்தியாரில் வரும் திருப்பாட்டுக்கள்.

''மாயைகாரிய உருக்களும் எம்பிரான் வடிவம்
ஆயவேல் அவை அருள்மயம் ஆகும்''

என்பது காஞ்சிப்புராணம்.

## சாத்திரங்களின் அமைப்பும் சிறப்பியல்புகளும்:

பதினான்கு சாத்திரங்களுள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் முதல் இரண்டு நூல்களும், 12-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. சிவநெறியின் அடிப்படையாகிய மெய்யுணர்வு நெறியை மரபு அளவில் விளக்குவன; பிற சமய நோக்குப்பற்றி எழும் தருக்கவாதங்களும் வினா விடைகளும் இவற்றில் இல்லை.

சிவஞானபோதம் முதலிய ஏனைய பன்னிரண்டு நூல்களும், 13,14ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. இவை, சிறுபான்மை, பரபக்கம் கூறி மறுப்பனவும், பெரும்பாலும் சுபக்கம் கூறி நிரூபிப்பனவுமாக அமைந்து, சித்தாந்த உண்மைகளை, அளவை அடிப்படைமேல் அமைத்துப் பாதுகாத்து விளக்குவனவாக உள்ளவை.

இவற்றின் அமைப்புப் பற்றியும், சிறப்புப் பொருள்நிலை பற்றியும் சுருக்கமாகச் சில உண்மைகளைக் காண்போமாக.

## திருவுந்தியார்:

இது 45 கலித்தாழிசைகளால் அமைந்தது. இதனை அருளிச் செய்தவர் திருவிசலூர் உய்ய வந்த தேவநாயனார் என்னும் சிவஞானச் செல்வர். இவர் இதனைக் கி.பி. 1147-ல் அருளிச் செய்து, தம் மாணக்கர் திருவிசலூர் ஆளவந்த தேவ நாயனாருக்கு உபதேசித்து, தம் ஞான பரம்பரையில் உபதேச நூலாக வைத்தருளினார்.

## பொருள் நிலை:

மனமொழி மெய்களுக்கு அப்பாற்பட்டு, அருளாய் நிற்கும் முதல்வன் பக்குவ முதிர்ச்சி எய்திய ஆன்மாவிற்குக் காணுதல் வரும்படி ஞானாசிரியனாய் வெளிப்பட்டு அருளி அருளொளியைத் தருகின்றான். அவ்வருள் ஒளி கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு திறத்தால் உணரப்படும். அங்ஙனம் உணர்ந்தார் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவ விளக்கம் பெற்றுச் சிவமே ஆவர்; இச்சிவமாந்தன்மைப் பெருவாழ்வு முதல்வன் அருள வருவது. கேள்வி ஞானம் அனுபவ ஞானமாய் முதிர்வதற்கு ஆதாரயோகம் நிராதாரயோகம் என்னும் இருவகை யோகப் பயிற்சியும் வேண்டத்தக்கவை. மெய்யுணர்வாவது யான் எனது என்னும் செருக்கு முற்றிலும் நீங்கிய நிலையில் விளங்குவது. அவ்வுணர்வின் பயன் மெய்யன்பும், அதன்பயன் சிவன் கழலிற் செறிந்து பெறும் பேரின்பமும் ஆகும். இந்நூல் உலகத்தில் பக்குவ முதிர்ச்சியுடையார் அனைவர்க்கும் பாச நீக்கமும் சிவப்பேறும் எய்துவிக்கவல்லது.

அகளமாய் யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற:
தானாகத் தந்ததென் றுந்தீபற.

உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தெள்ள அரியர் என் றுந்தீபற;
சிற்பரச் செல்வர் என் றுந்தீபற.

அவனிவன் ஆன(து) அவனருளால் அல்ல(து)
இவன் அவன் ஆகான்என் றுந்தீபற:
என்றும் இவனேயென் றுந்தீபற.

வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்யவந் தான்உரை உந்தீபற:
உண்மை உணர்ந்தார்என் றுந்தீபற.

என்பவை இதன்பொருள் விழுப்பம் தெரிவிக்கும் எடுத்துக்காட்டுக்களாம்.

தொடரும்

# ஸ்ரீவைஷ்ணவ மாநாட்டுத் தலைமையுரை

திரு. கொங்கலேட்டி
ஏ. வி. கன்னைய நாயடு

## காரேய் கருணை இராமாநுசரின் கழல் பணியும் பெரியோர்களே !

ஸ்ரீ வைணவ மகா சங்கத்தின் ஆதரவில் சென்ற 50 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஸ்ரீ வைணவ மாநாடுகள் மிக்க சிறப்பு வாய்ந்தவை! 1975-ஆம் ஆண்டு நடைபெற்ற பொன்விழாவை அடுத்து நடைபெறும் இந்த 51-ஆம் மாநாட்டை நடத்தும் பேறு பெற்ற நமது ஸ்ரீ வைணவ மகாசங்கம் அரை நூற்றாண்டு அரிய சேவையை ஆற்றி, ஒரு நூற்றாண்டின் பிற்பகுதியின் ஆரம்பத்தில் அடி எடுத்து வைக்கின்றது!

ஸ்ரீ வைணவ ஞானம் நிரம்பப்பெறாத அடியேன், இந்த 51-ஆம் ஸ்ரீவைணவ மாநாட்டின் தலைமைப் பீடத்தில் அமர்த்தப்பட்டுள்ளமைக்கு மிகவும் அஞ்சுகிறேன்!

நூற்றெட்டுப் பாசுரங்கள் கொண்ட பிரபன்ன காயத்திரியாம் இராமாநுச நூற்றந்தாதியில் திருவரங்கத்து அமுதனார்: நமது ஸ்ரீவைணவ மகாசங்கத்தின் தலைநகரான சென்னை திருவல்லிக்கேணியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பார்த்தசாரதியாகிற கீதாசாரியனையும், இத் திருவல்லிக்கேணியைத் தன்னுட்கொண்ட சான்றோருடைய தொண்டை நாட்டில் அமைந்துள்ள ஸ்ரீ பெரும்பூதூரில், தொழுகுலமான தொண்டக் குலத்தின் புகலிடமாக எழுந்தருளியுள்ள எம்பெருமானாகிற ஜகதாசாரியனையும் இணைத்துப் பாடுகிறார்!

அடியைத் தொடர்ந்தெழும் ஐவர்கட்காய், அன்று
பாரதப் போர்
முடியப் பரிநெடுந் தேர்விடுங் கோனை முழுதுணர்ந்த
அடியர்க்கமுதம் இராமாநுசன் என்னை ஆளவந்து,
இப்
படியிற் பிறந்தது, மற்றில்லை காரணம் பார்த்திடிலே!

எனவே, அடியனை அளியன் என்று அருளி அடியார்க்கு ஆட்படுத்தும் நியமனமாகவே, இம்மாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேணுமென்ற ஆணையைப் போற்றி; கீதாசாரியன்—ஜகதாசாரியன் திருவடிகளின் பலத்தால் ஏற்றுக் கொள்ளுகிறேன்!

## தாழ்வாது மில்குரவர் தரும் சிறப்பு !

''லக்ஷ்மீநாத-ஸமாரம்பாம் நாத-யாமுந-மத்யமாம்
அஸ்மதாசார்ய-பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்!

பரம பவித்ரமான நம்முடைய ஸ்ரீவைணவ ஸம்பிரதாயத்திற்கு அநாதிகாலமாக ஏற்பட்டிருக்கும் ஏற்றங்கள் பலவற்றுள் முக்கியமானதோர் ஏற்றம் கேளீர்! தொடர் சங்கிலிகையான குரு பரம்பரையானது நமது வைணவ ஸம்பிரதாயமொன்றுக்கேயுள்ளது. திருமால் தொடங்கி, அஸ்மதாசார்யர் வரையிலும் அல்லது அஸ்மதாசார்யர் தொடங்கித் திருமால் வரையிலும் தொடர்பு அறாமல் வரிசையாக ஆசார்ய பரம்பரையின் அநுஸந்தானம் நிகழ்வது வேறு எந்த ஸம்பிரதாயத்திலும் கிடையாது; ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயமொன்றுக்கே இஃது அஸாதாரணமாக அமைந்துள்ளது. வஞ்சமுக்குறும்பாங் குழியைக் கெடுக்கும் நங்கூரத்தாழ்வான் என்று போற்றப்படும் நிகரில் புகழ் பெற்றவரான கூரத்தாழ்வானென்னுமாசிரியர் அநுஸந்தித்தருளின ''லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்'' என்கிற மேலே குறித்த தனியனானது, வைணவ சமயம் விளங்கும் நாடு நகரம் முழுவதிலும்-இமவந்தந் தொடங்கி இருங்கடலளவும் இன்னாரினையாரென்கிற வாசியின்றிக்கே ஆசார்ய ஸமாச்ரயணம் பெற்ற அனைவராலும் ஒருங்கே அநுஸந்திக்கப்பட்டு வருவதைக் காணா நின்றோம்.

இந்தத் தனியனின் பொருள் யாதெனில்; ஸ்ரீமந்நாராயணனைத் தொடக்கத்திலேயுடைத்தாய், ஸ்ரீமந்நாதமுனிகளையும் ஆளவந்தாரையும் இடையிலே யுடைத்தாய், அஸ்மதாசார்யரை இறுதியிலேயுடைத்தான குருபரம்பரையை வணங்குகின்றேன் என்பதாம். ப்ரதமாசார்யனை லக்ஷ்மீநாதனென்றும், இடையிலாசார்யர்களை நாதயாமுனர்களென்றும் திருநாமமிட்டுக் குறித்திருப்பது போல ''ஸ்ரீ ராமாநுஜபர்யந்தாம்'' என்றோ, ''ராமாநுஜார்யபர்யந்தாம்'' என்றோ எம்பெருமானாரையும் குறிப்பிட்டிருக்கவேணும். இத்தனியன் பணித்தவரான கூரத்தாழ்வான் அஸ்மதாசார்ய சப்தத்தினால் கருதுவது எம்பெருமானாரையேயாதலால் அவர் திருநாமத்தையிட்டே தனியனை முடித்திருக்கவேணும். ஏன் அப்படி இடவில்லையென்று ஆலோசிக்குமளவில், கூரத்தாழ்வானுடைய மிக விசாலமான திருவுள்ளம் அற்புதமாகத் தெரியவருகின்றது. (அதாவது) ''ராமாநுஜார்ய பர்யந்தாம்'' என்று திருநாமத்தைக் குறித்து இட்டிருந்தாராகில் நம் குருபரம்பரையானது எம்பெருமானாரோடு முடிவுபெற்றதாக ஆகிவிடும். உண்மை அப்படியில்லையே. நம்

முடைய் குருபரம்பரையானது காருள்ளளவும், கடல் நீருள்ளவும், வேதமுள்ளளவும் வேதகீதனுள்ளளவும் இடையறுது தொடர்ந்து வர வேணுமென்கிற திருவுள்ளத்தினுல் வெகு ஸாமர்த்தியமாக ''அஸ்மதாசார்யபரியந்தாம்'' என்று இட்டருளினர் ஆழ்வான். இந்தத் தனியனை அநுஸந்திப்பவர் கூரத்தாழ்வான் மட்டுமல்லவே; அவர்க்குப் பிறகு இந்நாள் வரையில் [ஏறக்குறைய 900 ஆண்டு காலமாக] அநுஸந்தித்து வந்துள்ளது வைணவ வுலகம். மேலும் சூர்ய சந்திர நட்சத்திர மண்டலங்களுள்ள வரையில் அவிச்சிந்ந பரம்பரையாகக் கடல் சூழ்ந்த இம்மண்ணுலகம் அநுஸந்தித்து வருமென்பதில் ஐயமில்லை. 'அஸ்மதாசார்யபர்யந்தாம்'' என்று அனுஸந்திக்கும் அனைவருடையவும் ஆசார்யர் நம்முடைய குருபரம்பரையில் இடம் பெறுவராதலால், இங்ஙனே தொடர்சங்கிலியாகச் செல்லும் குருபரம்பரை விளங்கும் ஏற்றம் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயமொன்றுக்கே யுள்ளதென்பது அனைவருமிசைந்ததாகும்.

திருமகள் கொழுநனுன ஸர்வேச்வரன் ''நரநாரணனு யுலகத் தறநூல் சிங்காமை விரித்தவனெம் பெருமான்'' என்கிற திருமங்கையாழ்வாரருளிச் செயலின்படியே தானே சிஷ்யனுமாய். ஆசார்யனுமாய் நின்று ஸ்ரீபதரிகாச்ரமத்திலே திருவஷ்டாட்சர மஹாமந்திரத்தை வெளியிட்டருளினன். ஸத்யலோகத்தில் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு மந்த்ர ரத்னமென்கிற த்வயமந்த்ரத்தை ஸ்ரீமந்நாராயணன் தானே வெளியிட்டருளினன். மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான் என்னும்படி கண்ணபிரானுய்த் திருவவதரித்தருளின அப்பெருமான்தானே பற்றலர்வீயக்கோல் கையில் கொண்டு பார்த்தன் தன் தேர் முன்னின்ற காலத்தில் அர்ஜுனனை வியாஜமாக்கி சரமச்லோகத்தையருளிச் செய்தான். மற்றும் வராஹ சரமச்லோகம், ஸ்ரீராம சரமச்லோகம் என்றிருந்தாலும் ஸ்ரீக்ருஷ்ண சரமச்லோகமே ரஹஸ்யத்ரயத்திலொன்றுக அநுஸந்திக்கப் பட்டு வருகின்றது.

ஆக, திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்கிற இம்மூன்று ரஹஸ்யங்கள் தாம் நம்மாழ்வார் தொடக்கமான ஆசாரியர்களின் வழியாக முறைவழுவாது நமக்குக் கிடைத்து நம்மைப் புனிதமாக்கி வருகின்றன. இந்த மூன்று ரகஸ்யங்களின் அர்த்த விசேஷங்களையே இதிஹாஸங்களும் புராணங்களும், ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தங்களும், ஆசாரியர்களின் வடமொழி, தென்மொழி நூல்களும் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் வெளியிட்டுள்ளன.

இக்கலியுகத்தின் ஆதியிலே திருவவதரித்தருளினவரான நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் ''கலியுங்கெடும் கண்டு கொண்மின்!'' என்று துணிந்து அருளிச்செய்தார். கலி பிறந்த 43-வது நாளில் அவதரித்தவரான அவ்வாழ்வார் 'கலி கெட்டுப் போய்விடும்!' என்றதோடு நில்லாமல், தமது வார்த்தை பொய்யாகாமல் மெய்யேயாகும்படியைக் கண்டு கொள்ளுங்கள் என்றும் உறுதி கூறினபடியே கடலளவாய திசையெட்டினுள்ளும் கலியிருளே மிசை தருகாலத்து இராமானுசன் திருவவதரித்து மிக்க நான்மறையின் சுடரொளியால் அக்கலியிருளைக் கடிந்தொழித்தருளினன். எம்பெருமானுர்க்கு முன்னும் பின்னும் பல ஆசாரியர்கள் அவதரித்திருப்பினும், அவர் தம்மையே ஜகதாசார்யரென்று அந்நாள் தொடங்கி உலகம் போற்றுகின்றது. அப்படிப்பட்ட பெருமை அவர் தமக்கு எதனுல், வாய்த்ததென்பதை அவர்தாமே மீண்டும் மணவாளமாமுனிகளாகத் திருவவரித்தருளி,

''ஒராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராச ரின்னருளால்-பாருலகில்
ஆசையுடை யோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று
பேசி வரம்பறுத்தார் பின்.''

என்னும் உபதேசரத்தின மாலைப்பாசுரத்தினுல் வெளியிட்டருளினர்.

''பயனன்ருகிலும் பாங்கலராகிலும் செயல் நன்ருகத் திருத்திப் பணிகொள்பவர்!'' என்னும் பெருமை நம்மாழ்வார்க்கு இருக்கச் செய்தேயும், அவருடைய வாழ்ச்சி கலியின் ஆதியிலேயே முற்றுப்பெற்றபடியாலும், ஆள வந்தார் ''ஆம் முதல்வனிவன்'' என்று எம்பெருமானுரையே கடாட்சித்தருளினபடியாலும் ''எம்பெருமானுர் தரிசனமென்றேயிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்'' என்று பொய்யிலாத மணவாள மாமுனிகள் அருளிச்செய்தபடியே, ஸ்ரீராமாநுஜ தரிசனமென்றே நமது தரிசனம் வழங்கப்பட்டு வருமாறு ஸ்ரீரங்கநாதன் நியமனம் தந்தருளினபடியாலும், எழுநூறு ஜீயர்களும் பன்னீராயிரம் ஸ்ரீவைஷ்ணவர்களும் புடைசூழ எழுந்தருளியிருந்த எம்பெருமானுரும், அவர் தம்முடைய அபராவதாரபூதரான மணவாளமாமுனிகளும் காத்தருளின நம் ஸ்ரீவைஷ்ணவ சமயம் மேன்மேலும் வளர்ந்தோங்குவதற்கு நாமனைவரும் உடல் பொருளாவிகளால் உழைக்கக் கடமைப் பட்டிருக்கிருேம். நமக்குள் எத்தனையோ பிரிவினைகள் ஏற்பட்டிருந்தாலும் அவற்றைப் பொருள்படுத்தாது 'நாமெல்லோரும் எம்பெருமானுர் திருவடிகளைச் சார்ந்தவர்கள்' என்ப தொன்றையே நிதியாகக் கொண்டு ஒற்றுமையுடன் பணிசெய்யக் கடமைப்பட்டிருக்கிருேம்.

## ஆசாரியர் வளர்த்த அரி சமயம்!

ஆசாரிய சம்பந்தமே நமது இராமநுச தரிசனத்தின் மிகப் பெரிய ஏற்றம். ஈசுவரனைப் பற்றுகை, கையைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோ பாதி! (கொள்வது போல). ஆசாரியனைப் பற்றுகை. காலைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோ பாதி! (கொள்ளுவது போல)

ஆசாரிய சம்பந்தம் குலையாதே கிடந்தால் ஞான பக்தி வைராக்கியங்களை உண்டாக்கிக் கொள்ளலாம்! ஆசாரிய சம்பந்தம் குலைந்தால் அவை உண்டானுலும் பிரயோசனம் இல்லை!

தாலி கிடந்தால் பூஷணங்கள் பண்ணிப் பூணலாம்! தாலி போனால் பூஷணங்கள் எல்லாம் அவத்யத்தை (தாழ்வை) விளைவிக்கும்!

"சுய அபிமானத்தாலே ஈசுவர அபிமானத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு, (சேதநனுக்கு) ஆசாரிய அபிமானம் ஒழியக் கதியில்லை! என்று (வடக்குத் திருவீதிப்) பிள்ளை பலகாலும் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாய் இருக்கும்!—என்பவை பிள்ளை லோகாசாரியரின் ஸ்ரீ வசன பூஷணங்கள்.

ஸ்ரீமந் நாராயணனுடைய பர, வியூக, விபவ, அந்தர்யாமி நிலைகளைவிட, அர்ச்சை நிலையே மிகச் சிறந்ததாகும். பரநிலையாகிய பரமபதத்தில் இறைவனுடைய கல்யாண குணங்களுக்குப் பகல் விளக்குப் போலப் பொலிவு இல்லை. இது மேக மண்டலத்திற்கும் அப்பாற்பட்ட கைக்கு எட்டாத நீர் போன்றது. அடுத்த திருப்பாற் கடலில் சயனமாகிற வியூக நிலை தேவர்கட்கும், முனிவர்கட்குமே அடைய எளிது, மானிட சன்மம் படைத்த பக்தர்கட்குக் கடல் நீரைப் போன்று உதவாதது. அவதாரங்களாகிய விபவ நிலையை அனுபவிக்க அன்று நாம் பிறந்திலோம்! அதனால் விபவங்கள் சில காலங்களில் பெருக்கெடுத்து ஓடி அற்றுவிட்ட ஆறுகள் போன்று தற்போது அரிதானவை.

அந்தர்யாமித்வ நிலை, நம்புலன்களுக்கு எட்டாதது. பூமிக்கடியில் தங்கி நம் கண்ணுக்கு எட்டாமல் உள்ள நீர் போன்று எளிதில் பிரயோசனப்படாதது.

திவ்விய தேசங்களில் எம்பெருமான் சேவை சாதிக்கும் அர்ச்சை நிலையே எக்காலத்தும் உதவும் ஏரி, குளம் முதலிய நீர்த்தேக்கங்கள் (தேங்கின மடுக்கள்) போன்று உதவுபவை. இதனால் தான் நமது ஆழ்வார்கள் கேசவனும் இறைவன் தான் உகந்த ஊரெல்லாம் தன் தாள் பாடி மகிழ்ந்தனர். இங்ஙனம் பாடியருளிய ஆழ்வார்களைத் திவ்ய சூரிகள் என்றும், அவர்கள் பாடியருளிய பாடல்களைத் திவ்யப் பிரபந்தம் என்றும், அப்பாடல்களால் பெருமை பெற்ற பதிகளைத் திவ்விய தேசங்கள் என்றும் போற்றுகிறது; ஸ்ரீ வைணவ உலகம்!

இங்ஙனம் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டு அவன் உகந்தருளின நிலங்களிலே, உலகமேத்தும் கண்டியூர் அரங்கம், மெய்யம் கச்சி, பேர்மல்லை என்று நம் ஆசாரியர்களும் மண்டிக்கிடந்தனர்.

நாராயணன் ஆங்காங்கே எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் அமைந்துள்ள கணக்கிலடங்காத பதிகளில், திவ்விய தேசங்கள் எனச் சிறப்பிக்கப் படுபவைகள் 108 ஆகும்! மயர்வற மதி நலம் அருளப் பெற்ற ஆழ்வார்களுடைய மங்களாசாசனங்கள் இந்த 108 திருப்பதிகட்கே கிடைத்தமையால், இவை திவ்விய தேசங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

இந்த 108 திவ்விய தேசங்களிலும் தனிச் சிறப்பு அமைந்துள்ளவை நான்கே. இவைகளே கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் எனப்படுபவை. ஆழ்வார்களுக்குப் பிறகு அவதரித்தருளிய நம் ஆசாரியர்கள் இந்த திவ்ய தேசங்களில் பெரிதும் ஈடுபட்டுச் சேவை புரிந்தமையால், இத்தலங்கட்கும் அதிகப் புனிதத் தன்மையும், சிறப்பும் ஏற்பட்டுள்ளன.

ஸ்ரீ வைணவ உலகின் தலைநகராக விளங்குவது, திருவரங்கம். ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமாக, மணவாள மாமுனிகள் வேதாந்த தேசிகர் வரை அவதரித்தருளிய குரு பரம்பரையை விளங்க வைத்த ஸ்ரீ வைணவ ஆசாரியர்கள் அனைவரும் எழுந்தருளியமையால் திருவரங்கம் மேலும் சிறப்புற்றது. நம் ஆசாரியர்கள் எழுந்தருளியிருந்த மடங்களை இன்றும் திருவரங்கத்தில் சேவிக்கலாம்.

பெருமாள் கோயில் எனப்படுவது, பெருந்தேவித்தாயார் சமேத பேரருளாளர் எழுந்தருளியுள்ள அத்திகிரியான, கச்சியம்பதியாகும். பேரருளாளருடைய திருவடி வாரத்தில், திருக்கச்சி நம்பிகள், ஸ்ரீ இராமாநுசர், நம் கூரத்தாழ்வான், பெரிய நம்பிகள், மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர் முதலான ஆசாரியர்கள் எழுந்தருளியிருந்து சேவை புரிந்து சிறப்பித்தனர்.

திருநாராயணபுரம் என்னும் மேலக்கோட்டையில், அனந்தாழ்வான், ஸ்ரீ உடையவர், திருநாராயணபுரம் ஆய் முதலான ஆசாரியர்கள் எழுந்தருளியதால் அத்தலமும் அதிகப் புகழ் பெற்றது.

## குரு பரம்பரையின் மணம் மலிந்த குளிர் அருவி வேங்கடம்!

சென்னியோங்கு தண் திருவேங்கடத்தில் ஆசாரிய சம்பந்தத்தால் ஏற்பட்ட சிறப்புக்களைக் கண் கூடாகச் சேவித்துக் களிக்கலாம்.

## பெரிய திருமலை நம்பிகளும், பிரபந்த சேவையும்!

திருமலையில் திருவேங்கடமுடையான் விழாக் காலங்களில் எழுந்தருளுகையில், தென்னண்டை மாட வீதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் திவ்வியப் பிரபந்த அத்யாபக சேவை தொடக்கமாகிறது! பெரிய திருமலை நம்பிகளுடைய திருமாளிகையும் அங்கேயே அமைந்துள்ளது. பெரிய திருமலை நம்பிகள் காலத்திலேயே, ஆழ்வார்களின் அருளிச் செயல்களை மாதவனும் பெருமாள் திருவீதிகளில் எழுந்தருளுகையில் சேவிக்கும் முறை ஏற்பட்டிருக்க வேண்டும்!

## ஏழுமலை தந்த "இராமாநுச" நாமகரணம்!

பெரிய திருமலை நம்பிகள் தமது திருத்தமக்கையாருக்கு ஸ்ரீபெரும்பூதூரில் ஆண் மகவு பிறந்துள்ள சேதியைக் கேட்டருளித் திருவேங்

கடவரின் தூதராக ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளினர். அவ்வாண் மகவு ஆதிசேடனின் அம்சமாகவும், இலட்சுமணனின் அம்சமாகவும், அவதரித்துள்ளதை அறிந்து மகிழ்ந்தார். அத்தெய்வீகக் குழந்தைக்கு இளையாழ்வார் என்றும், இராமாநுசன் என்றும் திருப்பெயர் சூட்டினார்! எனவே ஸ்ரீ இராமாநுசரின் நாமகரணம் திருமலையப்பன் திருவருள் நியமனம் கொண்டு ஏற்பட்டது!

## வேங்கட ராமன்!

ஆசாரியர்களுடன் சூரியச் சுடர் விளக்காக விளங்குபவர் நமது இராமாநுசரே! திருமலையைச் சேவித்தால், ஸ்ரீஇராமாநுசரது புகழ் நம்மைப் பிரவாகமாகச் சூழ்ந்து கொள்ளும்!

இராமாநுசருடைய ஐந்து ஆசாரியர்களுள் ஒருவர் பெரிய திருமலை நம்பிகள். ஒவ்வொரு ஆசாரியரிடத்தும் தனியாக ஒவ்வொரு அரிய விஷயத்தைக் காலட்சேபமாகச் சேவித்தவர் நம் இராமாநுசர், திருமலையில் பெரிய திருமலை நம்பிகள் திருவடி வாரத்தில் நமது எம்பெருமானார் வால்மீகி முனிவர் அருளிய ஸ்ரீ ராமாயண காலட்சேபத்தை ஓராண்டுக் காலம் சேவித்தார்.

ஸ்ரீ உடையவர் இப்படி ஸ்ரீ ராமாயணக் காலட்சேபம் சேவித்தருள்கையில், தென் தேசத்திலிருந்து திருமலைக்குப் பெரிய பெருமாளான இராமன், இளைய பெருமாளான இலக்குமணன், பிராட்டியான சீதையின் திவ்விய மங்கள மூர்த்தங்கள் எழுந்தருளியனவாம். இம்மூன்று மூர்த்தங்களைத் திருவேங்கடவர் கருவறையில் இடது பக்கம் எழுந்தருள்வித்ததாகவும் கர்ண பரம்பரை கூறுகிறது. இந்த ராமனுக்கு வேங்கடராமன் என்னும் திருப்பெயர் ஏற்பட்டு உலகம் எங்கும் பரவியுள்ளது.

## சங்காழி அளித்தருளச் சந்தேகமும் ஒழிந்தது

குலசேகர ஆழ்வார், திருவேங்கடவர் சந்நிதியிலே,

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே!

என வேண்டியதால், கருவறையில் கோவிந்தனும் பெருமாளுக்கு முன்புள்ள படிக்குக் குலசேகரன்படி என்று திருநாமம் ஏற்பட்டது. இந்தக் குலசேகரன் படியிலிருந்து இன்று சேவித்தால்; விஷ்ணுவாம் எம்பெருமான்,

வெய்யதோர் தழல் உமிழ்
சக்கரக்கை வேங்கடவனாகவும்,
கூன் ஏறு சங்கம் இடத்தானாகவும்

சேவை சாதிக்கிறான்!

மதுசூதனன் எம்பெருமான் தனது திருக்கரங்களில் திருவாழி திருச்சங்குடன் மற்ற சந்நிதிகளில் சேவை சாதிப்பதில் விசேடம் ஒன்றும் இல்லை. ஆனால் இவ்விதம் திருமலையில் சேவை சாதிப்பதன் காரணம் மிக்க சுவையானது!

முதலாழ்வார்களில் தலைவரான பேயாழ்வார் திருமலையில் திருவிக்கிரமனும் திருவேங்கடமுடையான் தமக்குச் சேவை சாதித்தபடியைப் பாடுகிறார்!

'தாழ் சடையும் நீண்முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழ் அரவும், பொன் நாணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து!

பேயாழ்வார் வாமனனும் எம்பெருமானுடைய வலது திருக்கையிலே, திருவாழியான சக்கரத்தைச் சேவித்தார். ஆனால் இடது திருக்கையில் திருச்சங்கைச் சேவிக்கவில்லை. சிரீதரனும் எம்பெருமானுடைய இடது திருக்கையில் சிவனுடைய மழுவைச் சேவித்தாராம். அது மட்டுமா! சிவசின்னங்களான தாழ்சடை, சூழ் அரவு முதலியவைகளும் இருடிகேசனும் எம்பெருமான் திருமேனியில் திகழ்ந்தன. பேயாழ்வாருடைய திருக்கண்களுக்குச்சிவசின்னங்கள் பற்பநாபனும் திருவேங்கடமுடையானின் திருமேனியில் நன்கு அமைந்து காணப்பட்டன.

ஆனால், சாதாரண மக்களின் கண்களுக்குத் திருமலையில் சேவை சாதிப்பவர் தாமோதரனும் திருவேங்கடமுடையான், சிவனா என ஐயம் ஏற்பட்டு விட்டது. ''திருமலை சிவத்தலம்தான் என்ற வாதம் மேலோங்கி, பக்தி விளைவிக்க வேண்டிய தலம் பக்திக்குப் பங்கம் விளைவித்து விட்டது! இந்த சந்நிதி ஸ்ரீ வைணவ சந்நிதியே என்பதை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு ஸ்ரீ ராமாநுசருடையதாகி விட்டது.

தமக்கு ஏற்பட்ட பொறுப்பை ஸ்ரீ ராமாநுசர் கேசவனும் திருவேங்கடவனுக்கே சமர்ப்பித்து விட்டார். எல்லோருடைய இசைவுடனும் ஒரு ஏற்பாட்டைச் செய்தார். இரவில் சிவசின்னங்களையும் திருமாலின் சின்னங்களான திருவாழி திருச்சங்கு முதலியவைகளையும் நாரணனும் எம்பெருமான் திருவடிகளில் வைத்து, காலை திருக்காப்பை நீக்கிச் சேவிக்கையில், எந்த சின்னங்களுடன் மாதவனும் எம்பெருமான் சேவை சாதிக்கிறாரோ, அந்தத் தீர்ப்பையே நிரந்தரமாக ஏற்றுக் கொள்வது எனச் சமரச ஏற்பாடு செய்தார்.

அவ்விதமே இரண்டு வகையான சின்னங்களையும் வைத்து இரவு திருக்காப்பிட்டு, காலையில் திருக்காப்பை நீக்கவும், கோவிந்தனும் எம்பெருமான் சங்கொடு சக்கரம் ஏந்தி ஸ்ரீநிவாசனைச் சேவை சாதித்தார். ஸ்ரீராமாநுசருடைய இந்த மகத்தான சேவையை மதிப்பிட முடியாது. ஜகதாசாரியரான ஸ்ரீ பாஷ்யகாரரின் இச்சேவையால்தான் திருமலை இன்றும் ஸ்ரீ வைணவப் பொலிவுடன் விளங்குகிறது.

விஷ்ணுவாம் திருவேங்கடவருக்கு அப்பன் என்றும் திருநாமம், திருவேங்கடமுடையானுக்கு ஸ்ரீராமாநுசர் திருவாழியும், திருச்சங்கமும் அருளியதால் அப்பனுக்குச் சங்காழி அளித்தருளும் பெருமாள்! என அவரை ஸ்ரீ வைணவ உலகம் வணங்குகிறது!

## அப்பனுக்கு ஆசாரியர்!

ஸ்ரீ வைணவருக்குச் சங்க சக்கர திருவிலச்சினைகளைத் தரிப்பிக்கின்றவர் ஆசாரியர். மதுசூதனனும் திருவேங்கடமுடையானுக்குச் சங்கு சக்கர முத்திரைகளை ஸ்ரீ எம்பெருமானார் அணிவித்த காரணத்தால் அவர் திரிவிக்கிரமனும் திருவேங்கட முடையானுக்கும் ஆசாரியரானார்!

## சற்குருவிற்குச் சந்நிதி!

திருமலையை ஸ்ரீ வைணவத் தலமாகவும், வாமனனும் திருவேங்கடமுடையானைத் திருமாலாகவும், திகழ வைத்த மிக உயரிய சேவையால், ஸ்ரீ இராமாநுசருக்குத் திருமலையில் சிரீதரனும் திருவேங்கடவர் சந்நிதி அருகில், முதல் திருச்சுற்றின் வடக்குப் பாகத்தில், தனிச் சந்நிதி ஏற்பட்டுள்ளது. திருமலையில் ஸ்ரீஉடையவருக்கே இத்தனிப் பெருமை உரியது. திருமலையில் ஆழ்வார்களுக்காவது மற்ற ஆசாரியர்கட்காவது சந்நிதிகள் இல்லை.

## உபதேச உடையவர்!

மற்ற சந்நிதிகளில் ஸ்ரீ இராமாநுசர் கைகளைக் கூப்பியவண்ணம் சேவை சாதிப்பார், இருடிகேசனும் திருவேங்கடமுடையானுக்கு சங்க சக்கர முத்திரைகளைத் தரிப்பித்ததனால், திருமலையில் உபதேச முத்திரையுடன் ஆசாரியராக சேவை தருகிறார்!

## இராமாநுச முனிக்கே முதல் சேவை!

இன்னொரு விசேடம்! திருவேங்கடவர் புறப்பாடு கண்டருளினால் முதலில் தம் ஆசாரியரான ஸ்ரீ உடையவருக்குச் சேவை சாதித்த பிறகே, முதல் திருச்சுற்றின் வாசற்படி தாண்டி வெளியே எழுந்தருளி மற்றையோருக்குச் சேவை சாதிப்பார். ஆசாரிய நியமனம் பெற்றுத் தான் படி தாண்டுவார் திருவேங்கடவர்!

## ஆசாரிய நியமனம் ஏற்ற ஆண் பிள்ளை!

திருவரங்கத்தில் ஸ்ரீ உடையவர் தமது திருவாய்மொழிக் காலட்சேப சமயம்,

ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்!
தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து
எழில்கொள்சோதி எந்தை தந்தைக்கே!

என்ற பாசுரம் சேவிக்க நேர்ந்தபோது, வானவர் வானவர் கோனொடும் சிந்து பூ மகிழும் திருவேங்கடம், சென்று, நந்தவனம் அமைத்து, தாமோதரனும் திருவேங்கடமுடையானுக்குப் புட்ப கைங்கரியம் புரிய அனந்தாழ்வானுக்கு நியமித்தருளினார். அக்காலத்தில் வாசத்திற்கு அபாயமாக இருந்த திருமலையில், புட்ப கைங்கரியத்தை ஏற்றுக் கொண்ட அனந்தாழ்வானுக்கு அனந்தாண் பிள்ளை என்னும் சிறப்புப் பட்டம் ஏற்பட்டது!

## ஒத்தடம் கூறும் சான்று!

திருமலையில் அனந்தாண் பிள்ளை ஏற்படுத்தி, அனந்தசரசு என்ற பெயரால் அகழ்ந்துள்ள ஏரியையும் இராமாநுசன் என்ற நந்தவனத்தையும், கேசவனும் திருவேங்கடமுடையான் கருவறையில் தினமும் அவர் திருமாலை கொணர்ந்த குடலையையும் பக்தர்கள் சேவிக்கலாம்.

அனந்தசரசு ஏரியை மண்வெட்டிகொண்டு அனந்தாழ்வான் ஆழப்படுத்திய சமயம் வயிறு வாய்த்த அவரது மனைவி கூடையில் மண்சுமந்து சென்றார். இதைப் பார்க்கப் பொறுத நாரணனும் திருவேங்கடவர், சிறுவனாக வந்து உதவி செய்தார். அக்கைங்கரியத்தைப் பூரணமாகப் புரியவிடாமல் தடுத்ததற்குச் சீற்றம்கொண்டு மண்வெட்டியால் அடிக்கவும், சிறுவன் முகவாய்க்கட்டையில் பெருகிய இரத்த வெள்ளம் சந்நிதியில் மாதவனும் எம்பெருமான் திருமேனியில் காணப்பட்டது. அனந்தாழ்வான் பதறி, கோவிந்தனும் எம்பெருமானின் முகவாய்க்கட்டையில் அப்பிய பச்சைக் கற்பூர ஒத்தடக் குறியை இன்றும் சேவிக்கலாம்.

அனந்தாழ்வானின் மலர்த்தொண்டின் மேன்மையை இவ்விதம் வெளிப்படுத்தினார் வேங்கடவர்.

## சூடிக்கொடுக்கும் சுடராழியோன்!

புட்ப மண்டபமாகிய திருமலையில் இவ்விதமாக விஷ்ணுவாம் திருவேங்கடவருக்கு மலர்த் தொண்டை ஏற்படுத்திய ஸ்ரீ ராமாநுசருக்கே மதுசூதனும் எம்பெருமான் சூடிக்கொடுத்தருளிய சகல மாலைகளையும் அணிவிக்கிறார்கள். ஸ்ரீ உடையவருக்கு அணிவித்த பிறகு அவைகளைச் சந்நிதிக்கிணற்றில் சேர்த்து விடுகிறார்கள். எம்பெருமான் அணிந்த துளபமோ, மலரோ ஒருவருக்கும் வினியோகமாவதில்லை.

ஸ்ரீநிவாசன் என்ற திருநாமத்தை ‘மங்கை உறைமார்பன்’ என்றும் ‘‘அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பா!’’ என்றும் ஆழ்வார்கள் தமிழில் மங்களாசாசனம் செய்துள்ளதால், உடையவர், திரிவிக்கிரமனும் திருவேங்கடவனின் வடிவாய் வலமார்பினில் எழுந்தருளியுள்ள மகா இலட்சுமித் தாயாரை இடது திருமார்பிலும் எழுந்தருளச் செய்தார்.

## சீயரை நியமித்த செகதாசாரியன்!

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்

என்ற நம்மாழ்வார் நியமனத்தை நிறைவேற்றும் வகையில் பெரிய ஜீயரையும், அவருக்குத் திருமடத்தையும் திருமலையில் ஏற்படுத்தியருளினார் ஸ்ரீ உடையவர்.

## வேங்கடவர் அருளிய வேதாந்த தேசிகர் !

புரட்டாசி மாதம், திரு ஓணநட்சத்திரம் புனிதமானது. இது வாமனனும் திருவேங்கடமுடையான் திருநட்சத்திரம். இப்புனித புரட்டாசித் திருவோண நாளில்தான், வேதாந்த தேசிகர் அவதரித்தார். இவருடைய திருத்தாயார் தம் திருவயிற்றில் சிரிதரனும் திருமலைத் திருவேங்கடவரின் திருமணி புகுவதாகக் கனவு கண்டு, பிறகு மகப்பேறடைந்து, திருவவதரித்தமையால்; வேதாந்த தேசிகர் திருமலைமால் திருமணியாய் அவதரித்தவர் எனக் கொண்டாடப் படுகிறார்.

## மலையப்பன் கொண்டாடிய மணவாள மாமுனிகள் !

ஸ்ரீ வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகளோடு புகழ் பெற்ற ஆசாரியர் பரம்பரை முடிவு பெறுகிறது. மணவாள மாமுனிகள் திருமலைக்கு எழுந்தருளுவதற்கு முன்பே, அவருடைய பரிமளம் இருடிகேசனும் திருவேங்கடமுடையானுக்கு எட்டிவிட்டது!

காஞ்சியிலிருந்து திருமலைக்கு எழுந்தருளிய பிரதிவாதி பயங்கரம் அண்ணன், பற்பநாபனும் திருவேங்கடவருக்குத் தினமும் ஆகாச கங்கைத் தீர்த்தம் கொணர்ந்து பரிமளம் சேர்த்துச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார். திருவரங்கத்திலிருந்து திருமலைக்கு எழுந்தருளிய ஸ்ரீ வைணவர் ஒருவரால், மணவாள மாமுனிகளின் பெருமைகளைப் பேசக் கேட்டார் அண்ணன். மாமுனிகள் நினைவாகவே இருந்ததால், தாமே தரனும் திருவேங்கடவருக்குத் தீர்த்தம் சமர்ப்பிக்கத் காலந் தாழ்த்தவும், அர்ச்சகர்கள் ஓடிவந்து பரிமளம் சேர்க்காத தீர்த்தத்தை அண்ணனிடமிருந்து கொண்டு போனார்கள்! அந்தத் தீர்த்தத்தை அங்கீகரித்த கேசவனும் திருவேங்கடவர் ''இத்தனை நாள்களாகக் கொணர்ந்த தீர்த்தை விட இன்று அளித்த தீர்த்தத்தில் ருசியும் பரிமளமும் அதிகமாக இருக்கிறதே!'' என்று அர்ச்சகர் மூலம் திருவாய் மலர்ந்தருளி மாமுனிகளின் மாண்பை அனைவரும் அறியச் செய்தருளினார்!

## அப்பனுக்கு அண்ணர் அளித்த கவி அமுதம்

திருமலைக்கு எழுந்தருளி, பிரதிவாதி பயங்கரம் அண்ணனுடைய மேன்மைகளை நேரில் அறிந்துவந்த மணவாள மாமுனிகள், அண்ணரையே திக்குநிறை புகழ் அடைந்துள்ள திருவேங்கடவர் சுப்ரபாத கீதத்தையும், ஸ்ரீ வேங்கடேசுவரர் தோத்திரத்தையும் அருளப் பணித்து, அண்ணன்பால் தாம் கொண்டுள்ள அன்பை அனைவரும் உணரச் செய்தருளினார்.

## வேங்கடம் என்றும் வாய் வெருவலாம் !

ஸ்ரீ ராமானுசருக்குப் பின் ஆசாரியராகத் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்த பட்டரின் காலட்சேப கோஷ்டியில், திருமலையிலிருந்தும் வருகை தந்த பக்தர் ஒருவர், திருவேங்கடம்! திருவேங்கடம்! எனச் சேவித்துக் கொண்டே அமர்ந்தார். ''திருவரங்கத் திருப்பதியிலும் 'திருவேங்கடவர்' எனலாமா''! எனப் பட்டர் திருவுள்ளப்பட்டார். அந்தப் பக்தர் திருமலை சென்று தன் ஆசாரியரிடம் விண்ணப்பித்துக் கொண்டு மறுபடியும் திருவரங்கத்தில் பட்டர் கோஷ்டியில் அமருகையில் திருவேங்கடம்! திருவேங்கடம்! எனச் சேவித்துக் கொண்டே அமர்ந்தார்.

திருமலையிலிருந்து வந்த பக்தர் பட்டருக்குச் சமாதானமாக

வெருவாதாள் வாய் வெருவி ''வேங்கடமே!
வேங்கடமே!'' என்கின்றாளால்!
மருவாளால் என் குடங்கால்
வாள் நெடுங்கண் துயில் மறந்தாள் !
வண்டார் கொண்டல்.
உருவாளன்! வானவர் தம் உயிராளன்!
ஒலி திரை நீர்ப் பௌவங் கொண்ட
திருவாளன்! என் மகளைச் செய்தனகள்
எங்கனம் நான் சிந்திக்கேனே!

என்று திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழியில் அமைந்துள்ள திருவரங்கப் பதிகத்தைச் சேவித்தார்.

'அணியரங்கமும், அப்பன் வேங்கடமும் ஒன்றே!' என மனம் தேறிராம் பட்டர்!

## 'திவ்விய கவியும்' துதித்த திருவேங்கடவர் ! பணிப்பூ மணத்ததே !

அழகிய மணவாள தாசராம் திவ்யகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காருடைய திருவரங்கத்தம்மான் விஷயமாகவே அமைந்த கவிகளின் இனிமையில் ஈடுபட்ட நாரணனும் திருவேங்கடவர், அய்யங்காருடைய கனவில் தோன்றித் தன்னையும் தமது திவ்வியத் திருவாக்கால் பாட வேண்டுமெனத் திருவுள்ளம் பற்றினார்! ஆனால் பிள்ளைப் பெருமாள் அய்யங்காரோ,

''அரங்கனைப் பாடிய வாயால்
குரங்கனைப் பாடிலேன் !''

என்று மறுத்தாராம்.

அதனால் திருவேங்கடவர் அய்யங்காரருக்குக் கழுத்தில் கண்டமாலை தோற்றுவிக்கவும், அய்யங்காரரும் மாதவனும் திருவேங்கடவர் விஷயமாகத் திருவேங்கடக் கலம்பகம், திருவேங்கடத்து அந்தாதி, திருவேங்கடமாலை, திருவேங்கடவர் உலா என்னும் அரிய வணக்கப் பாமாலைகள் அருளிச் செய்து,

மந்திபாய் வடவேங்கட மாமலை
வானவர்கள் சந்தி செய்ய நின்றான்
அரங்கத்து அரவின் அணையான்! என்றும்;

விண்ணவர் கோன்
விரையார் பொழில் வேங்கடவன்
நீள்மதிள் அரங்கத்து அம்மான்!
என்றும் தேறி உகந்தாராம்!

## பணிப்பூ மணத்ததே !

தொண்டைமான் சக்ரவர்த்தி மாதவனும் திருவேங்கடமுடையானுக்கு அமோகமாகவும் அதிக வாசனையாகவும் உள்ள மலர்களைச் சமர்ப்பித்துத் தன் சேவையை வியந்து கொண்டான்! கோவிந்தனும் திருவேங்கடவரோ சக்ரவர்த்தியின் கனவில் தோன்றி ''அக்குயவன் அணிவித்த மலர்களை மிகவும் உகந்தோம்!'' எனத் திருவாய் மலர்ந்தார்! சக்ரவர்த்தி உண்மையை விசாரிக்கவும், திருமலையின் அடிவாரத்திலே மண்பாண்டத் தொழிலாள பக்தர் ஒருவர், தம் தினப்பணியைத் தொடங்குமுன் களிமண்ணை மலர்களாக அமைத்து எதிரில் அமைந்துள்ள விஷ்ணுவாம் திருவேங்கடவர் முன்பு சமர்ப்பிக்கவும்; அவை உடனே மறைந்து ஏழுசிகர வேங்கடத்தின் உச்சியில் எழுந்தருளியுள்ள மதுசூதனனும் திருவேங்கடவர் திருக்கமல பாதங்களில் நறுமண மலர்களாகவே சேர்வதைக் கண்டான்!

இதனால் தொண்டைமான் சக்ரவர்த்தியின் மனக் குறும்பை அறுத்தார் அப்பக்தர். எனவே அவருக்கு 'குறும்பறுத்த நம்பி!' எனப்புகழ்ப் பெயர் பரவியது!

திருவரங்கத்தில் வீணையும் கையுமாகச் சேவை புரிந்த திருப்பாணாழ்வார், மயர்வற மதி நலம் அருளப் பெற்றவர். ஆழ்வார்கள் கோஷ்டியை அலங்கரிப்பவர். அமலனாதிப்பிரான் பிரபந்தத்தை அருளியவர். அரங்கரைச் சேவித்து அவர் தம் திருவடியில் மறைந்தவர். ஆசாரியரான வேதாந்த தேசிகரும், இவரது பிரபந்தத்திற்கு முனிவாகனபோகம் என்ற சிறப்புரை அருளினார்.

அத்திகிரி அருளாளருக்கு ஆலவட்டமும் (விசிறியும்) கையுமாகச் சேவை புரிந்த திருக்கச்சி நம்பிகள், வடமொழி வேதம் பயின்று வடமொழியில் ஸ்ரீ தேவராஜ அஷ்டகம் அருளியவர். ஆசாரிய கோஷ்டியில் இன்றி அமையாதவர். வரதராஜருடன் நேரில் வார்த்தையாடியவர்.

திருமலையில் பணிப்பூவும் கையுமாகச் சேவை புரிந்த குறும்பறுத்த நம்பியோ, நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவிலாதவர்! ஒரு மொழியிலும் ஒரு பிரபந்தமும் இயற்றாதவர். திரிவிக்கிரமனும் திருவேங்கடவரையும் தம் ஊனக் கண்களால் சேவிக்கப் பெறாதவர். எனவே வீணையும், ஆலவட்டமும் பெறாத மணம், பணிப் பூ பெற்றது!

'வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக்கை வேங்கட வாணற்கு என்னை விதிக்கிற்றியே' என வேண்டிய வேயர் பயந்த விளக்காம் ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில், குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா! என மங்களா சாசனம் செய்தருளிய போது 'பிற்காலத்தில் ஆசாரிய சம்பந்தங்களாலும் குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தனை விளங்குவான்!' என்று திரு உள்ளப் பட்டருளினன் போலும்!

## பொன் விழாக் கண்ட இச் சங்கம் பொலிக !

நமது ஸ்ரீ வைணவ மகாசங்கத்தின் சார்பில் ஆண்டு தோறும் நடைபெறும் ஸ்ரீ வைணவ மகாநாடுகளும், ஆசாரிய புருஷ சம்பந்தம் பெற்றுத் திகழ்கின்றன. நமது ஆசாரியராம் பதும பூஷண, மகா மகிமோபாத்யாய, பிரதிவாதி பயங்கரம், காஞ்சி ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகள், ஒவ்வொரு ஆண்டும் நம் மாநாட்டிற்கும் எழுந்தருளி மங்களாசாசனம் புரிந்தருளுவது நமது பாக்கியமாகும். ஸ்ரீ வைணவ மகா சங்கத்தைத் தோற்றுவித்து ஆரம்பத்தில் நடத்திய பாகவதப் பெரியார்களை ஈன்ற முதல் தாயராகவும், உடனிருந்து ஊக்குவித்து ஆசி அளிக்கும் நமது காஞ்சி ஸ்ரீஅண்ணங்கராசாரியரை மொய்ம்பால் வளர்த்த இதத் தாயாகவும் போற்றி மகிழலாம்!

ஆசாரியர் மேன்மையையும், திருவேங்கடத்து அப்பனையும் விஷயமாக வைத்து, அடியேன் விண்ணப்பித்தவைகளைத் திருச்செவி யேற்றருளிய அனைவருக்கும் வந்தனம்!

நமது ஸ்ரீ வைணவ மகா சங்கம் எம்பெருமானார் தரிசனப் பணியில் மேன்மேலும் சிறந்து விளங்க மன்னு தண் பொழிலும், வாவியும், மதிளும், மாடமாளிகையும், மண்டபமும், தென்னன் தொண்டையர் கோன் செய்த நன் மயிலைத் திருவல்லிக்கேணி நின்றானாகிய, உருக்குமிணிப் பிராட்டியார் சமேத வேங்கட கிருஷ்ணனும் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாளின் திருஅடிகளைப் பணிகின்றனன் ! வணக்கம் !


ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல் வாழி!
தாழ்வாதும் இல்குரவர் தாம்வாழி!-ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி!
செய்யமறை தன்னுடனே சேர்ந்து!



திருவள்ளுவர்கோயில் கும்பாபிஷேக விழாவில் அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., ஆணையரின் நேர்முக உதவியாளர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, B.Sc.,B.L., மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொள்ளுதல்.



திருமயிலைத் திருவள்ளுவர் கோயில் கும்பாபிஷேக விழாவினை அடுத்து நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், வாகீச கலாநிதி திரு. கி.வ. ஜகந்நாதன், M.A., அவர்கள் தலைமை தாங்க, முன்னாள் நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M. A. M. O. L., திரு. டாக்டர் இரா. நாகசாமி, துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B. A. B. L., ஆகியோர் உரைநிகழ்த்துதல்.



சென்னைத் திருமயிலை-எட்வர்ட் எலியட்சாலை-ஏ.வி.எம். இராஜேசுவரி கலியாண மண்டட தில், மறைமலை அடிகள் நூற்றாண்டு விழா நடைபெற்றபோது, முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ விஸ்வநாதம், M.A., அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., முதலிய பெ மக்கள் கலந்து கொள்ளுதல்.



மறைமலை அடிகள் நூற்றாண்டு விழா மலரைக் கல்வித்துறைச் செயலர் உயர்திரு. சி.ஜி. ரங்கபாஷ்யம், I. A. S., அவர்கள் வெளியிட்டு, அதன் முதற்படியை முன்னாள் உயர்நீதிமன்ற நடுவர் மாட்சிமிகு திரு. எஸ். மகராசன், B.A.B.L., அவர்களுக்கு வழங்குதல்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.